


# சுவாமி வீரமாமுனிவர்



வின்ஸென்ட் கேக், ரொட்டி, பிஸ்கித்துகள்
BREAD
and Biscuits
VINCENT'S
TRICHINOPOLY CANTT.
The Season's Greetings from :
VINCENT & Co. LTD.,
TRICHINOPOLY, MADURA, TINNEVELLY
& BRANCHES.
MINERAL WATER MANUFACTURERS, BAKERS, CONFECTIONERS,
CATERERS, RESTAURATEURS, RADIO & REFRIGERATOR ENGINEERS.
SPARKLING 'VIMTO' THE TONIC FRUIT DRINK!

கத்தோலிக்கு சேவா சங்க வெளியீடு : T. 7

வாழிய
செந்தமிழ் !

வாழ்க
நற்றமிழர் !

# சுவாமி வீரமாமுனிவர் நினைவு மலர்

“ மறைமொழி வாயினன், மலிதவத் திறைவன்
நிறைமொழிக் குரவன் நிகரில் கேள்வியன்.”

கத்தோலிக்கு சேவா சங்கம்,
தல்லாகுளம் போஸ்ட்,
மதுரை
—
1944

உரிமை]

[விலை : ரூ. 1-12-0

## வெண்பா

தேம்பா வணி நூலைத் தேம்பா தணிவோர்க்கு
ஆம்போத நற்கருணை யாவதுடன் கூம்பாமல்
ஐம்புலனி லுண்மைபெற வைந்திரிபகற்றி
மொய்ம்புடனே மோட்சமதா முன்.

# முகவுரை

எம் சங்கத் தொண்டுகளில் தமிழன்னைக்குச் செய்யும் பலவகைச் சிறப்புகளுள், வீரமாமுனிவரின் நினைவுக் குறியாக ஒரு கட்டுரைத் தொகுதி வெளியிட வேண்டுமென எண்ணி, பல அறிஞர்களுக்கு எம் விருப்பத்தைத் தெரிவித்தோம். பல பெரியோர்கள் எமக்கு உதவினர். அவர்களனைவர்க்கும் எம் சங்கத்தின் மனமார்ந்த நன்றியை சமர்பிக்கின்றோம்.

இந் நினைவு மலரை ஆதரித்து குறை களைந்து குணங் கொள்ளுமாறு தமிழ் மெய்யன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். இக் கட்டுரைகளினால், சுவாமி வீரமாமுனிவரின்பேரில் உமக்கு பற்றுண்டாகுமென்று நம்புகின்றோம்.

கத்தோலிக்கு சேவா சங்கம்,
மதுரை,
11-1-1944.

இயேசு சபை,
ஜி.வி.ஐ. சாமா சுவாமிகள்,
சங்கத் தலைவர்.

Imprimatur: ✠ J. PETRUS, S.J., *Episc. Madurensis.*

Printed at
The DE NOBILI PRESS, MADURA
1944

## பொருள் அட்டவணை


பக்கம்

1. முகவுரை
2. வீரமாமுனிவர் சரித்திரச் சுருக்கம் . . . i
3. சுவாமி வீரமாமுனிவர்: தலைவர் பேருரை . . . iv
ராவ் சாகிப் M. துரைசாமி, M.A., B.L.
4. நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகளின் வாழ்த்துச் செய்தி . 1
5. தைரியநாதரும் தமிழ்த் தோண்டும் . . . 2
திரு. அ. முத்துசாமிப் பாவலர்

தமிழணங்கு வாழ்த்து . . . . 2

6. வீரமாமுனிவரின் தொண்டு . . . 3
திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனர்
7. வீரமாமுனிவர் புகழ் . . . 6
திரு. சோமசுந்தர பாரதி, M.A., B.L.
8. தைரியநாதரும் தமிழ் இலக்கியமும் . . 8
திரு. குருஸ் அந்தோனி, B.O.L.
9. வீரமாமுனிவர் சிறை புகுதல் . . . 16
திரு. மாரிச்சாமி
10. மாமுனிவர் மாண்பு . . . 20
குமரகவி, மு. நாராயணசாமி பிள்ளை
11. வீரமாமுனிவரும் கவிவன்மையும் . . 21
ஆசிரியர் எம். எஸ். சுந்தரேச ஐயர்
12. முனிவரின் தேம்பாவணி . . . 26
ஸ்ரீ. A. ராமமூர்த்தி ராவ் B.A., B.L.

பக்கம்

13. வீரமாமுனிவர்தின வாழ்த்துப்பாக்கள் . .
வித்வான் S. ஆழ்வாரையங்கார் 39

14. தேம்பாவணியின் கவிநயம். . . . 40

15. மெய்ப் புலவர் . . . .
திரு. ரம்போலா மஸ்கரனுஸ், M.A. 50

16. சங். வீரமாமுனிவர்மீது பாடப்பெற்ற வாழ்த்துப்பா .
பண்டித எம். பி. மஸ்கரனுஸ் 54

17. தேம்பாவணியின் மாட்சி . . .
T. S. கந்தசாமி முதலியார், B.A. 56

18. திருவள்ளுவரைப்பற்றி வீரமாமுனிவரின் புகழ் . . 59

19. வீரமாமுனிவரின் தாய்நாட் டன்பு (தேம்பாவணி) . 60

20. தேம்பாவணியின் கதாநாயகரின் சனன மான்மியம் .
திரு. S. செல்வராஜு முதலியார், B.A., L.T. 61

21. வீரமாமுனிவரும் தொன்னூல் விளக்கமும் . .
ஸ்ரீ. S. K. நாராயண அய்யங்கார் 67

22. தமிழ் இலக்கியத்தின் டான்டே : வீரமாமுனிவர் .
திரு. R. பஸ்கால் தெயடோர், B.A. 70

23. புலவர் திலகம் : வீரமாமுனிவர் . . .
திரு. C. மரியநாதன் 73

24. வீரமாமுனிவர் விழா, இராஜாஜியின் வாழ்த்து . . 75

25. வீரமாமுனிவர் விழா . . . .
1. பாளையங்கோட்டை . . . 75
2. தூத்துக்குடி . . . . 76
3. மதுரை . . . . 78
4. ஆல்வாய் . . . . 81



நீ கனிவார்கடல் நீயொளியார்சுடர் நீயருளார்முகில் நீ
நீயிறையோனெழு மாசனம் நீ நெறி வேதம் வழாநெறி நீ.



தாழுபான்மையோ தகவுடை பான்மையோ வென்னுச்
சூழும் யாரையுஞ் சூழ்வரு நயஞ் செய்வார்.

(தேம்பாவணி)

# வீரமாமுனிவர் சரித்திரச்சுருக்கம்

ஜி. மெக்கென்சி காபன் அய்யர், இராயப்பேட்டை.

ஐரோப்பா கண்டத்திலுள்ள இத்தாலியா தேசத்திலிருக்கும் காஸ்திகிலியோனே என்னும் ஊரானது ஓங்குபுகழ் பெற்ற தேம்பாவணி யியற்றிய விரமாமுனிவர் பிறப்பிடமாம். 1680-௵ நவம்பர்-மீ 8-உ அவருக்கு ஜெந்ம வாரமாமாயிற்று. அவரைப் பெற்றோர் அவருக்குக் கான்ஸ்டன்ஷியுஸ் பெஸ்கி யெனப் பெயரிட்டார்கள். அவர், அவ்வூரிலும், உரோமாபுரியிலும் கல்வி கற்று, இயேசுவின் சங்கத்தை யனுசரித்து உரோமைச் சங்க வொழுங்குபடி நடந்து வந்ததினால், அவரது தெய்வ பக்தி, கல்வி, சாதுரியம் முதலியவற்றைக் கேள்வியுற்ற பாப்பானவர் அவரது சாமர்த்தியத்துக்கு வியந்து, தென்னிந்தியாவிலுள்ள மதுரைமா நாட்டுக்குப்போய் சற்குருவாகிய இயேசுவின் மாட்சிமையை அவ்விராச்சியத்தாருக்குத் தெரிவிக்க அவரை நியமித்தார். ஆனால் உரோமைச் சங்க முறைமையின்படி இருபத்தைந்து வயதாகுமுன் இவர் குருபட்டம் பெறுவது கூடாதாதலால் 1709-ம் வருஷத்தில் அவர் அப்பட்டம் பெற்று, இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தார். இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கோவாவென்னும் ஊரை அடைந்து தமிழ்ப் பாஷை பயின்று, 1711-ம் வருஷத்தில் திருநெல்வேலிக்குச் சென்றார். அங்குள்ள காமநாயக்கன்பட்டி யென்னும் ஊரில் 1714-ம் ஆண்டு முதல் 1716-ம் ஆண்டு வரையில் வசித்ததாகவும், இங்கிருந்து கைத்தார் என்னுங் கிராமத்துக்கு அடிக்கடி போக்கு வரவு செய்து வந்ததாகவும், திருநெல்வேலியில் 1714-ம் ஆண்டில் வடகன்குளம் சபையை ஸ்தாபித்த பிராண்டலினி யென்னுந் தேசிகர் சொல்லுகிறார். பாளையங்கோட்டையிலிருந்து மதுரைக்குப் போகும் மார்க்கத்தில் உள்ள இவ்வூரானது அக்காலத்தில் மிகவும் பேர்பெற்றிருந்தது. சங்கரநாயனார்கோவில் தாலுகாவிற் கல்பட்டி யென்னுங் கிராமத்தில் அவர் தாம் செய்த தேவ ஊழியத்திற் செயம் பெற்றது கொண்டு அங்கொரு தேவாலயங் கட்டினார். இதினிமித்தம் அங்குள்ளோர் கோபங்கொண்டு இவரைப் பிடித்துச் சிறைச்சாலையில் வைத்து கோயிலையும் இடித்துவிட்டார்கள்.

அந்தக் கிராமத்துள்ளோர் தங்கள் முன்னோர் பாழாக்கிய மேற்சொன்ன தேவாலயத்தினடையாளங்களைத் தற்காலத்தில் நமக்குக் காண்பிப்பதுடன் அது பெஸ்கி என்பவர் கட்டிவைத்ததென்றும், அவரையும், அவரால் மனமாறிய மற்றொருவனையும், அவ்வூரிலிருந்து தங்கள் முன்னோர் அடித்துத் துரத்திவிட்டார்கள் என்றுஞ் சொல்லுவார்கள். அக்காலத்திலிருந்த அவ்வூரார் மிகவும் மத வைராக்கியமுள்ளவர்கள். ஆகையால், அவரைச் சிறைப்படுத்துவதினால் திருப்தியடையாமல் அவரைக் கொலைபுரியவுமெத்தனித்தார்கள். அப்போது கயித்தார் என்னுங் கிராமத்துக் கிறீஸ்தவர்கள் செய்த முயற்சியினால் அவர் சிறைச்சாலையினின்றும் விடுதலையாகி, மரணத்திற்குத் தப்பிப் பிழைத்தார். இவ்வாறானதால் அவ்வூரார்கொண்ட எண்ணம் நிறைவேறாமற் போயிற்று. இதன் உண்மை அவ்வூரின் சுற்றுப்புரத்துள்ள கிறீஸ்தவக் கிராமவாசிகளின் கன்ன பரம்பரையா

னும், 1715ம்-ஞு சனவரி-மீ 12-உ பெஸ்கி யென்பவர் தாமே யெழுதியிருக்கிற நிருபத்தாலும் விளங்கும். பின்பு அவர் 1716-ம் வருஷத்தில் மதுரைக்குச் சென்றார். ஆனால், அவர் அங்கே செய்ததின்னதென்று தெரியவில்லை; பிறகு 1720-ம் வருஷத்தில் திருச்சிராப்பள்ளிக் கடுத்த வடுகர்ப்பட்டியில் வந்து நிலைத்திருந்தார். இவ்வாறு நடக்குங்காலத்திலும் அவர் தமிழைக் கற்றுத் தேர்ந்து அதைக் கரை கண்டாரென்பதற்கு 1726-ம் ஆண்டில் அவரியற்றிய தேம்பாவணி முதலான சிறந்த நூல்களே சாட்சி பகரும். இவர் காலத்துக்குப் பிறகு இந்நாட்டுத் தமிழ்ப் புலவர் அநேகர் பல நூல்களைச் செய்தாரேனும், அவைகளி லொன்றேனும் இத் தேம்பாவணிக்கு நிகராமோ?

இதன்றி 1727-ம் ஆண்டில் "வேதியரொழுக்கம்" என்னும் நூலை உபதேச ரத்நாகரம் எனத் திருப் பணியாளருக்குபயோகமாக வியற்றினார். இதனைப் படிப்போருக்கு இன்னடையினால் மன மகிழ்ச்சியும், பொருளினால் பக்தி, ஞானம் முதலியவற்றின் அபிவிர்த்தியும் உண்டாகும். இயற்றமிழ் நடைக்கிது சிறந்த முன்மாதிரியாகவிருக்கிறதுமன்றி கடுஞ்சொற்பொழிவு, பொருட்பேதம், பிழைபாடு, அன்னிய பாஷை நடைக்கலப்பு, முதலியவற்றால் நிரம்பியதும் காதுக்கினிமையற்றதுமாயிருக்கின்ற தற்கால வியற்றமிழ் நூல்களின் குறை குற்றங்களை வெளியாக்கும் சுலோசனமெனவுந் தகும்.

1729-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளிக் கடுத்த ஆவூரில் வெகுநாள் வசித்துத் தமது வாழ்நாளெல்லாந் தமிழை ஆராய்ந்தார். கிறீஸ்து மார்க்கம் இந்நாட்டிற் பரவுதற்கு இவர் இடைவிடாது முயன்றுவந்தாரென்று கன்ன பரம்பரையால் விளங்குகிறது. அவர் ஊருக்கூர்ப் பயணம்பண்ணி ஜனங்களுக்குப் போதித்துத் தம்மோடு வாதாட வந்தவர்களையெல்லாம் வென்று விசேஷமாக உயர்ந்த ஜாதியோரையே கிறீஸ்தவர்களாக்கி வந்தார். கிறிஸ்தவ ஆலயங் கட்டிவைப்பதும் அவற்றை விநோதமாக அலங்கரிப்பதும் அவருக்கதிகப் பிரியம். 50 வருஷத்திற்கு முன்னிருந்த முத்துசாமிப் பிள்ளையென்பவரெழுதிய வீரமாமுனிவர் சரித்திரத்தில் இவரைப்பற்றி யநேகமாய்க் காணலாம். திருஷ்டாந்தமாக:—

"கல்விப் பெருக்கத்தா லகங்கரித்த வொன்பது சடைப் பண்டாரங்கள் வந்து வீரமாமுனிவரோடு தர்க்கம் பண்ணியவரை வெல்லவேண்டுமெனக் கருதி, தோற்றவர்கள் வெற்றிபெற்றவர்கள் சொற்படி நடப்பதென்று உடன்படிக்கை பண்ணித் தர்க்கிக்கத் தலைப்பட்டார்கள். ஒரு மாதமட்டும் பண்ணிய தர்க்கத்தில் அவரை வெல்லமாட்டாமல் தாங்களே தோற்றுப்போனதால் அவர்களில் ஆறுபேர் சத்திய வேதத்துக்குட்பட்டார்கள். மற்ற மூன்றுபேர் சடையறுபட்டு வெட்கத்தினால் மேல் சீமைக்குப் போய்விட்டார்கள். அந்தச் சடைகள் திருக்காவலூர்க் கோவில் மண்டபத்தில் வைக்கோற் கட்டுப்போல ஐதர் கலாபனை மட்டுந் தொங்கிக் கிடந்தன." இப்படிக்கவர் தேச சஞ்சாரம்பண்ணிக்கொண்டு போகிறபோது அவருபதேச மகிமையினால் இத்தேசத்தவர்களிற் பலர் கிறீஸ்தவர்களானார்கள்.

பெஸ்கி யென்னும் வீரமாமுனிவர் ஜீவித்த காலமோ மிகக் கொடுமை, துன்பம், கலகம் முதலியவற்றால் நிறைந்தது. அவரிருந்த நாடும் அவ்வாறே கலகம், யுத்தம், சர்ப்பனை இவைகளால் கலக்குண்

டதினால் அவர் அக்கால காரியகர்த்தாக்களுடன் சம்மந்தப்படாதவரா யிருப்பது கூடாது. எவ்வாறெனில், 1736-ம் ஆண்டில் சந்தா ஸாஹேபு என்னும் நபாபு திருச்சிராப்பள்ளியை முற்றுகைபோட்டு அதைப் பிடித்துக்கொண்டு மதுரை நாட்டிற்குந் தாமே அரசனென்று பறையறைவித்தார். அவர் வேண்டுகோள்படி இவரவரிடஞ் சென்று வார்த்தையாடினபோது அவருக்கு இவரிடத்தில் அதிகத் திருப்தியுண்டாகித் தமக்குத் திவானாக இவரை யேற்படுத்திக் கொண்டதுமன்றி யிவருக் கினாமாக நான்கு கிராமங்கள் அளித்தார்.

1740-ம் ஆண்டில் வேலூர் கர்னாடக நபாபாகிய தவுஸ்த் அலிகான் என்பவரைப் போய்த் தரிசித்து, 1739-௵ அக்டோபர்-௴ 29௳ தமது சங்கத் தலைவர் அந்த நபாபுக்கு எழுதியனுப்பிய நிருபத்தையுங் காண்பித்தார். இவை முதலிய காரியங்கள் அக்கால காரிய கர்த்தாக்களுடனிவருஞ் சம்பந்தப்பட்டாரென்று விளக்குகிறது.

ஷை 1740-ம் ஆண்டில் மஹாராஷ்டிரர்கள் திருச்சிராப்பள்ளியை முற்றுகை போட்டு 1741-ம் ஆண்டில் அதைப்பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் மிகுந்த மத வைராக்கியமுள்ள இந்துக்களாதலால் சந்தா ஸாஹேபின் திவானாகிய இவர் கிறிஸ்தவ குருவென்றறிந்தபோது கிறிஸ்தவர்களும் மகமதியரைப்போலவே அம்மஹாராஷ்டிரர்களுடைய பகைக்கு இலக்கானார்கள். இதையறிந்த பெஸ்கி என்பவரும் மற்றுமுள்ளவர்களும் மரணத்தினின்று தங்களைக் காத்துக்கொள்ளும்பொருட்டு ஓடி ஒளியும்படி நேரிட்டது. ஆகவே, அவர் முதல் முதல் போன இடம் இராமநாதபுரம். அங்கிருந்து திருநெல்வேலிக்கடுத்த வோர் கரைதுறைப் பட்டணத்தைச் சேர்ந்து அங்கே சில காலம் தங்கியிருந்தார். அவ்வூருக்கு மணப்பாடு என்று பெயர். அது அக்காலத்தில் உலாந்துக்காரருக்கு உரியது. அதிலே, கத்தோலிக்கு ஆலயமும், சபையும் இருந்தன. பெஸ்கி என்பவர் இந்தியாவுக்கு வந்தவுடன் கொஞ்சக் காலம் அங்கே தங்கியிருந்தபடியால் தமது விருத்தாப்பியத்திலும் அங்கேயே வசிக்க வெண்ணினாரென்றும் உத்தேசிக்கலாம். அமைதியற்ற உலகம் வேண்டாமென வெண்ணிய இருவருக்கு அமைதியுள்ள அவ்வூர் தகுந்த இடமாயிற்று. இங்கு சிலகாலம் வசித்தபின் 1746-ம் வருஷம் அம்பலக்காட்டுக்குப் பெரியோர்களால் அனுப்பப்பட்டார். அங்கு 1747-ம் வருஷம் தேகவியோகமானார். இவரோ பிறர் தமக்குச் செய்யும் மரியாதையை யெதிர்பாராமல், தாமே தம்முடைய பெயர் நீடூழிகாலம் நிலைத்தோங்கும்படி சிறந்த பல நூல்களியற்றி யிருக்கிறாரன்றியும், இவர் செய்துவந்த வேதியர் தொழிலும் போதுமான ஞாபகக் குறியாம்.

கர-௵ ஆவணி-௴
1891-௵ ஆகஸ்டு-௴

ஜி. மெ. க.

# சுவாமி வீரமாமுனிவர்

மதுரையம்பதியில்,
சுவாமி வீரமாமுனிவர் தினத்தில்
*(17—10—1943)*
தலைமைவகித்த
ராவ்சாகிப்
*M. துரைசாமி, M.A., B.L.*
அவர்களின்



## தலைமைப் பேருரை

தமிழ்நாடு போற்றும் வீரமாமுனிவர் நம் நாட்டில் குடியேறிய ஐரோப்பிய குருமார்களில் ஒருவர். அவர் நம் தமிழ் இலக்கண இலக்கியங்களில் சிறந்த புலமை பெற்றவர். முப்பதாவது வயதில் தன்னுடைய தேசமான இத்தாலியாவிலிருந்து 1710-ம் வருஷத்தில் நம் நாட்டிற்கு வந்தார். அதுமுதல் முப்பத்தேழு வருஷங்களாக தமிழ் நாட்டில் பெரும் தொண்டு செய்துவந்தார். போக்கு வரத்து வசதிகள் மிகச் சுருக்கமாயிருந்த அக்காலத்தில் எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையே, தமிழ்நாடு முழுவதும் சுற்றி, தன்னுடைய மதசேவையோடு, சமஸ்கிருதம், தெலுங்கு முதலிய பாஷைகளைக் கற்றதுடன் தமிழில் மிக்க பாண்டித்தியம் பெற்றார். அரியதோர் அகராதி ஒன்று சாதாரண தமிழ் மக்களுக்குப் பயன்படுமாறு தொகுத்தார். தமிழ் - லத்தீன், தமிழ் - லத்தீன்- போர்ச்சுக்கீஸ் அகராதிகளும் இயற்றினார். அவரையே **தமிழ் அகராதியின் தந்தை** என்று கூசாமல் கூறலாம். தமிழ் வசன நடையில் அவர் இயற்றிய பல நூல்களில் **"வேத விளக்கம்"** **"வேதியர் ஒழுக்கம்"**, **"பரமார்த்த குரு கதை"**, **"வாமன் கதை"** முதலியவை குறிப்பிடத்தக்கவை. இவர் செய்துள்ள செய்யுள் காவியங்களும் பல. அவைகளுள் அருமை பெருமை வாய்ந்தது **"தேம்பாவணி"**. 3615 விருத்தப் பாக்களில் அமைந்து; அர்ச். சூசையப்பரின் வாழ்க்கையை விரித்துரைப்பது இக்காவியம். பக்திப் பெருக்கு மிகுந்ததோடு, பாக்கள் தமிழ் காவிய நலன்களும், கவிச்சுவையும், கற்பனா சக்தியும் பொருந்தி பழம் பெருந் தமிழ் காவியங்களில் ஒன்றென எண்ணத்தக்கது. ஓர் தமிழறிஞர் எழுதியபடி இக்காவியத்தில் "தெய்வத் திருக்குறளின் தெள்ளிய மணமும், சிந்தாமணியின் செவ்விய கற்பனை நலமும், கலைமலிந்த கம்பர் கவிநயமும், ஆங்காங்கமைந்து அழகுசெய்யக் காணலாம்." இவ்வரும் பெருங் காவியமியற்றியும், அரிய அகராதி தொகுத்தும், தண்டமிழ் மொழிக்குத் தொண்டு செய்த வீரமாமுனிவர் **"தொன்னூல் விளக்கம்"** என்னும் பெயரால் ஓர் சிறந்த இலக்கணம் ஒன்றும் செய்தருளினார். தவிர **"கொடுந் தமிழ்"** என்னும் பெயரால் லத்தீன் மொழியில் முனிவர் ஓர் இலக்கண நூல் வரைந்துதவினார். தெய்வப்புலமை திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் முனிவர் லத்தினில் மொழிபெயர்த்து தமிழ்நாட்டின் பெருமையை இத்தாலிய நாட்டினர் இனிது உணருமாறு செய்தனர். இம்மாதிரி தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் பெருந் தொண்டாற்றிய வீரமா முனிவரைப் போற்றாத தமிழனும் உண்டோ?

## மதுரை, கத்தோலிக்கு சேவா சங்கத்தாருக்கு

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்
# அனுப்பின மங்களச் செய்தி

அன்பர்களே,

தமிழ்க் கத்தோலிக்கரும் தமிழரே அன்றி அன்னியரல்ல என்று நாமெல்லாம் உறுதியாய் உரிமை பாராட்ட இடங்கோலி வைத்த புலவர் சிகாமணியான வீரமாமுனிவர் தினத்தைக் கொண்டாட நீங்கள் எடுத்துக்கொண்டதைப்பற்றி உங்களுக்கு மங்களம் கூறுகின்றேன். வீரமாமுனிவர் தமிழுக்குச் செய்ததில் பத்திலொன்றுதானும் செய்திராத பிறர்க்கெல்லாம் நினைவு விழாக்கள் நடத்தப்பெறும் இக்காலத்தில் அந்த முனிவருடைய நினைவை எத்தனைக்கு மேற்பட்ட நன்றியோடும் உள்ள மகிழ்ச்சியோடும் நாம் கொண்டாட வேண்டியது.

தமிழில் உரை நடை நூல்களில்லாத ஓர் காலத்தில் "ரெபெட்-டி-நொபிலி" எனும் தத்துவபோதக சுவாமிகள் உரைநூல்களெழுதி தமிழ் உரை நடைக்குப் பிதா என அறிஞர்களால் ஏத்தப்படுகிறவராகின்றார். அவருக்குப்பின் தமிழ்ப் புலமையில் மேம்பட்ட "ஜியுசேப்பு கொன்ஸ்தான்சியு பெஸ்கி" எனும் வீரமாமுனிவர் எமது நாட்டில் முன்னில்லாததாகிய தமிழ் அகராதியை இயற்றி தமிழ் அகராதிகளுக்குப் பிதாவானதோடு முன்னில்லாத பொருணூல் ஒன்றையும் தமது தொன்னூல் விளக்கத்திற் புகுத்தி இலக்கணத்திலும் ஒரு புதுத் துறையை ஏற்படுத்தினார். அவருடைய செய்யுள் நடை நூல்களையும் அழுக்காறில்லா இந்து சமயத்தவர்களெல்லாம் கம்பரது இராமாயணத்துக்கு மட்டுமல்ல திருத்தக்க தேவரது சீவக சிந்தாமணிக்கும் இணையாகப் பாராட்டுவார்கள். முற்காலத்துச் சமணரும் பௌத்தரும் தமிழ் முன்னேற்றத்துக்காக ஒவ்வோர் துறையிற் செய்தவைகளைப்போல கிறிஸ்தவர்களும் ஒவ்வோர் துறையிற் செய்திருப்பது நம்முடைய சத்திய மறைக்கு ஒரு உத்தம புகழ்ச்சியேயாகும்.

வீரமாமுனிவர் தினக் கொண்டாட்டம் மிகு விமரிசையாய் நடைபெற்று முடிக! அக்கொண்டாட்டத்திற் பங்குபற்றுவோர் அனைவர்க்கும் மீண்டும் மங்களங்கூறி முடிக்கின்றேன்.

இங்ஙனம்,

யாழ்ப்பாணம்,
12—10—1943.

சுவாமி ஞானப்பிரகாசர்.

## தைரியநாதரும் தமிழ்த்தொண்டும்

ஆக்கியோர் : அ. முத்துசாமிப் பாவலர்,
(தமிழாசிரியர், அர்ச். மரியன்னை உயர்நிலைப் பள்ளி, மதுரை,)

### அறுசீர் விருத்தம்

**1**

செல்வம் கொழிக்கும் இத்தலியத்
திருநா டியற்றும் தவத்துதித்தும்
கல்விக் கடலே என்றுபலர்
கருதப் பலவாம் மொழிதேர்ந்து
பல்விற் பனரும் புகழ்சேசு
பகர்ந்த வுண்மை பரப்புதற்கு
நல்வித் தைகள்சேர் தூயதமிழ்
நாடு புகுந்து நனிவாழ்ந்து.

**2**

தெள்ளத் தெளிந்த தமிழ்மொழியைச்
செவ்வே கற்றுத் தேர்ந்து, பிறர்
எள்ளுந் தன்மை இலாவகையில்
இனிமைக் கவிகள் பலப்பலவும்
விள்ளுந் திறமை யோடு ; திரண்டு
விரும்பிக் கேட்கும் அவர்நெஞ்சை
அள்ளும் முறையிற் சொற்பொழிவை
ஆற்றுந் திறனும் மிகப்பெற்று.

**3**

"தொன்னூல் விளக்கம் எனும்நூலும்
துலங்கும் தேம்பா வணிநூலும்
அன்னை யழுங்க லந்தாதி
ஆதி யாய சிறுநூலும்
இன்னும் உரைநூல் பற்பலவும்
இயற்றித் தமிழை வளர்த்தபுகழ்
மன்னும் வீர மாமுனிவர்
மகிமை உலகில் வாழியவே !

..வைத்திய சிம்ஹம்
வைத்திய பூபதி
வைத்திய ஆசிரியர்
டாக்டர் சித்தா & R.I.M.P.
என்ற பட்டங்களும்
அநேக தங்க மெடல்களும்
கவர்மெண்டாரால் நடத்திய



கண்காக்ஷிகளிலும் பல சித்த
வைத்திய மகாநாடுகளிலும்
முதல்தர மருந்துகளென்று
தங்க மெடல்
மெரிட் ஸர்ட்டிபிகேட்களும்
ஆயிரக்கணக்கான
நற்சாக்ஷிப்பத்திரங்களும்
பரிசு பெற்றவருமான

## திருச்சி டாக்டர் டி. சி. சிங்காரம் அவர்களின்

# "சித்தாமிர்தம்"

(ரிஜிஸ்டர்ட்)

**(மிகுந்த பலத்திற்கும் விரிய விருத்திக்கும் நிகரற்றது)**

கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், சோகை, பாண்டு, நித்திரையின்மை, சோம்பல் முதலியவைகளை நீக்கி இரத்த விருத்தியையும் அபார தாது புஷ்டியையும் உண்டாக்கும். ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகித்துவரும் கைகண்ட மருந்து. ஆண், பெண், சிறுவர் முதல் யாவரும் சாப்பிடலாம். போதை வஸ்துக்கள் சேராதது. பத்தியமில்லை.
பெரிய சைஸ் விலை ரூ. 5-8-0, 1 சேர் விலை ரூ. 3-8-0, அரை சேர் விலை ரூ. 1-14-0.

# மகா சந்தன தைலம்

(ரிஜிஸ்டர்ட்)

**(வீரமாமுனிவரின் முறைப்படி தயாரித்தது)**

சிரசு, கண் சம்பந்தமான சகல நோய்களையும் வெகு ஆச்சரியமாய்க் குணம் செய்வதுடன், மூளைக்கும் கண்களுக்கும் குளிர்ச்சியையும், கண்களுக்கு நல்ல பிரகாசத்தையும் கொடுக்கும். ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள் உண்மை தெரியும்.
24 அவுன்ஸ் ரூ. 4-8-0. 12 அவுன்ஸ் ரூ. 2-6-0. 6 அவுன்ஸ் ரூ. 1-4-0.

# சூதக சஞ்சீவி எண்ணெய்

(ரிஜிஸ்டர்ட்)

**(ஸ்திரீகளுக்கு ஓர் அபூர்வ சஞ்சீவி)**

ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் சூதக சிக்கல் வியாதியினின்று விடுபட்டு நற்சுகம் அடைந்திருக்கிறார்கள், சூதகம் காலந்தவறி வெளியாதல், அதுசமயமுண்டாகும் கடுமையான வயிற்றுவலி, இடுப்புவலி, கைகால் குடைச்சல், பெரும்பாடு, மூர்ச்சை, கெற்ப அழிவு முதலியவைகளைக் குணமாக்கிக் கெற்ப உற்பத்தியை உண்டாக்கும். விலை ரூ. 2-4-0. [எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபாற்செலவு பிரத்தியேகம்.]

நம்மிடம் குழந்தைகளுக்கு வேண்டிய பலவித மாத்திரை தினுசுகளும், சகல வியாதிகளுக்கும் கைகண்ட மருந்துகளும் கிடைக்கும். விபரத்திற்குக் கேட்லாக் எழுதவும். இனமாய் அனுப்பப்படும். வெளியூர் ஆர்டர்களைக் கவனித்து அனுப்பி வைக்கப்படும்.

இம்மூன்று மருந்துகளுக்கும் ஏஜண்டுகள் தேவை.

# டி. சி. சிங்காரம் அன் கோ.,

சித்தானந்த பார்மசி, சைனு பஜார், தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

---

N. B.—கால பருவத்துக்கு ஏற்றவாறு விலைகள் கூடுதலாகும். ஆர்டர் அனுப்பும்பொழுது "வீரமாமுனிவர் மலரில்" கண்டது என்று குறிப்பிடவும்.

**For Forwarding & Shipping**
*Apply to :*

# I. S. & C. MACHADO,

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS.
TUTICORIN.

Tele { *Phone :* **No. 1**
{ *Grams :* **"MACHADO"**

*Codes Used :*
**Bentley's Complete Phrase.**

SHIPPING & LANDING CONTRACTORS,
STEVEDORES & SHIP CHANDLERS,
BUILDING & ENGINEERING CONTRACTORS,
MANUFACTURERS, REPRESENTATIVES.

*Office :*
**18, BEACH ROAD,**
TUTICORIN.

*Prompt attention at moderate rates.*

SRS

மதுரையில்
நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும் பாத்திரமான
இடம்

## ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்டோர்ஸ்

◆

குறைந்த விலையில், எங்களிடம் எல்லாவிதமான கோயம்புத்தூர், சேலம், மதுரை நூல் புடவைகள், பம்பாய் வாயில் பிரிண்டு புடவைகள், வேஷ்டிகள், ஜரிகை துப்பட்டாக்கள், உயர்ந்த கோட்டிங், ஷர்ட்டிங், வாயில்கள், சீட்டிகள், ஜாக் கட்டிங் சில்குகள், இன்னம் பலவிதமான கண்களைக் கவரும் ஜவுளி தினுசுகளும் ஏராளமாக எப்பொழுதும் கிடைக்கும்.

◆

காட்சிச்சாலை :
**6/8, மேலக் கோபுரத் தெரு, மதுரை.**

*N.B.*—வியாபாரிகளுக்கு மொத்தமாய் ஸ்பெஷல் ரேட்டில் ஜவுளி கொடுக்கப்படும்.

*Get your supplies from*

# THE BRITTO STORES.

**200, Great Cotton Road, TUTICORIN.**

**Dealers in Fancy articles, Toilet preparations, School requisites, Cigars, Cigarettes, etc. etc.,**

**The most reliable & cheapest house for all your requirements.**

*A trial order will convince you.*



## தமிழணங்கு வாழ்த்து

நீராருங் கடல்உடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—மனோன்மணீயம்



திரு. சோமசுந்தர பாரதி, M.A., B.L.



திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனர்.

# வீரமாமுனிவரின் தொண்டு

**[17—10—43-ல மதுரையில் நடைபெற்ற வீரமாமுனிவர் விழாவின்போது நிகழ்த்திய வரவேற்புரையின் சாராம்சம்]**

**[இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார்]**

தமிழ் இலக்கியச் சுவை ததும்பும் தேம்பாவணி என்னும் உயரிய நூலைத் தமிழர்களுக்குக் கொடுத்தருளிய, **வீரமாமுனிவர்** என்னும் சிறப்புப் பெயர் பூண்ட, **கான்ஸ்டன்டைன் ஜோஸப் பேஸ்கி** ஸ்வாமியாரை தமிழ் உலகத்திற்கு நான் தெரிவிக்கவேண்டுவதில்லை. இவர் இத்தாலி நாட்டினர். 1680-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ந்தேதி காஸ்திக்கிலியோனே என்னும் ஊரில் பிறந்தார். இளமையிலேயே இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பல மொழிப் பண்டிதரானார். அயல் மொழி கற்கும் ஆற்றல் அடிகளுக்குண்டென்பது, இவர் பிற்காலத்திற் கற்ற பலமொழிகளால் இனிது விளங்கும். இவர் கடவுளிடத்தில் மிகுந்த பற்றுடையவர். கல்வி கேள்விகளில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாது விளங்கிய இப்பெரியார், இயேசு மன்றத்தில் சேர்ந்து திருமறையை உலகத்தினருக்கு அறிவிக்க ஆவல்கொண்டார். இவருடைய ஆவலைக்கண்ட அருள்மறைத் தலைவர்கள் இவரை இந்தியாவுக்கனுப்பினர். இவரும் போர்த்துகீஸியருக்குத் தலைநகராக விளங்கிய கோவா என்னும் ஊர் சேர்ந்து, கிறிஸ்துசமயத்தைப் பரப்ப ஒரு செய்முறைத் திட்டம் வகுத்தனர்.

அத்திட்டத்தில் உள்நாட்டு மொழிகளைக் கற்று, நூல்கள் இயற்றி, அவைகளின் வழியாய்ச் சமயக் கொள்கைகளைப் புகுத்தலும் ஒன்று. இச்செயல் நம் நாட்டுக்குப் புதிது அன்று. பௌத்தரும், சைனரும் தங்கள் சமயக் கொள்கைகளைத் தென்னாட்டில் பரப்ப இம் முறையைக் கையாண்டனரென்று மணிமேகலை, சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலிய தமிழிலக்கிய நூல்களாலும், நன்னூல் முதலிய இலக்கணங்களாலும் அறிகின்றோம். சுமார், 230 வருடங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டுக்கு விஜயம்செய்த அடிகள் முக்கியமாக நம் பாண்டிய நாட்டிலே வாசம் தெய்தார். திராவிட மொழிகளில் சிறந்ததாகிய தமிழ் மொழியைக் கற்கலானார். பெரிய இலக்கணங்களை முறையே கற்றார். இங்ஙனம் தமிழில் தழைத்த புலவர் பல நூல்களை இயற்ற ஆரம்பித்தார்.

சமயத் தொண்டிலும், தமிழ்த்தொண்டிலும் ஈடுபட்டுழைத்துப் பெரும்புகழடைந்தவர் வீரமாமுனிவர். மதுரைக்கும், முனிவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவந்திருக்கிறது. மதுரை மடத்தில் தங்கி வீரமாமுனிவர் செய்த கிறிஸ்து சமயத்தொண்டு அளவில் அடங்கா ஆச்சரியப்படத்தக்கவைகளாம். பல்வேறு சமயங்கள் சூழ்ந்த இந்நாட்டில் சமயத்தொண்டில் புகுந்த அவர் ஆரம்பகாலத்தில் அடைந்த இன்னல்கள் அநேகம். அவைகளை விரிக்கிற் பெருகும். தனது முப்பதாம் ஆண்டில் தமிழ் நாட்டிற்கு விஜயம்செய்து 67 வயதுவரை தமிழ் நாட்டில் வாழ்ந்து பல்லாற்றானும் சிறந்த தொண்டுகள் புரிந்து புகழுடம்பு எய்தினர்.

இவரைத் **தைரியநாதர்** என்று மற்றொரு பெயர்கொண்டு அழைப்பதுண்டு. இவர் தமிழுக்குச் செய்த தொண்டுகளை நாம் நன்றியறிதலுடன் என்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளோம்.

சூசைமாமுனிவரின் அரிய வரலாற்றைத் தமிழ்க்காவிய இலக்கணம் பொருந்த இனிய பாக்களால் **தேம்பாவணி** என்னும் சிறந்த நூலாக எழுதினார். இவ்வுயரிய காவியத்தினழகு கற்றவர் போற்

றும் கழி பேருவகை கொண்டதாக அமைந்துளது. இக் காவியத்தில் கவிச் சுவை, பொருட் சுவை, வைப்புமுறை முதலியவைகள் உயர்ந்து விளங்குவதை நாம் காணலாகும்.

அமிழ்தினு மினிய இத்தேம்பாவணி யானது சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற பழந் தமிழ் நூல்களோடு ஒப்பிடத் தக்கதாகும்.

விருத்தாசலத்துக்குச் சமீபத்திலுள்ள கோனான்குப்பம் என்னும் ஒரு சிற்றூரில், முனிவரின் முயற்சியால் ஒரு மாதா கோவில் அழகுற அமைக்கப்பெற்றதென்றும், அக்கோனான்குப்ப மாதா கோயில் மாதாவின் அருளாலேயே தேம்பாவணி பாடப்பெற்றதென்றும் தெரியவருகிறது. இத்தேம்பாவணியை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப் பெற்றதென்றும் ஆங்கு குழுமியிருந்த சங்கப் புலவர்கள் இக்காவியத்தின் அருமை பெருமைகளைப் பாராட்டி இந்நூலாசிரியரை வீரமாமுனி என்று பட்டமளித்துச் சிறப்பித்தார்களென்றும் கூறப்படுகிறது.

மற்றும் நம்முனிவர் கலம்பகம் மாலை முதலிய தமிழ்க் காவியங்களையும் பல செய்தருளினர். தனி உரை நடை நூல்களையும் எழுதினர். அவைகளில் மணவிளக்கமும் மறையவர் ஒழுக்கமும் சிறந்து காணப்படும்.

பிங்கலந்தை, திவாகரம், சூடாமணி, போன்ற பல நிகண்டுகள் கடினமான தமிழ்ப் பதங்களுக்குப் பொருள் விளக்கிக் கொள்ளச் சாதனமாக உபயோகப்பட்டு வந்தன. இந்நிகண்டுகளைக்கொண்டு கற்றறிந்த புலவரே கருத்து விளக்கிக்கொள்ள இயன்று வந்தது. நம் வீரமாமுனிவர் முயற்சியால், கற்றோரும் மற்றோரும் எளிதில் பொருள் உணர்ந்து கொள்ளும் பொருட்டு மேனாட்டுமுறையில் "சதுரகராதி" என்னும் ஒரு அகராதியை ஆக்கி அளித்தனர். இதுவே தமிழ் மொழியில் புது முறையில் அமைத்த முதல் அகராதியாகும்.

இவ்வகராதி வடிவத்தில் சிறிதாயினும் அதன் அருமை பெருமைகள், அகராதியை உபயோகிக்கும் அன்பர்களுக்கு நன்கு தெரியும். இப்பெரியார் இலக்கிய நூல்கள் இயற்றியதும் தவிர, ஐந்து இலக்கணங்களையும் தொகுத்து, தொன்னூல் விளக்கம் என்னும் ஒரு சிறந்த தமிழ் இலக்கணம் இயற்றியருளினர். இதுவும் தமிழ் மக்களுக்கு மிகுந்த உபயோகமானதாகும்.

நம் தமிழ்மொழியின் அருமை பெருமைகளைப் பிறநாட்டவர் கண்டு தெளியுமாறு கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் ஒரு நூலை இயற்றியிருக்கிறார். இந்நூல் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் நாகரிகத்தையும் பண்பினையும் உலகத்திற்கு அறிவித்து நிற்கும் தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறளின் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் லத்தீன் மொழியில் மொழி பெயர்த்து உதவிய பெருமை நம் முனிவரைச் சார்ந்ததாகும். கடல் கடந்த மேல் நாடுகளிலெல்லாம் நம் தமிழ் மணம் கமழச்செய்து அரிய சேவைகள் புரிந்த நம் வீரமாமுனிவர் போன்றார்க்குத் தமிழ் மக்களாகிய நாம் என்றும் கடமைப்பாடு உடையவர்களாவோம்.

சோழவள நாட்டிலேயுள்ள திருப்பதிகளில் வைத்திஸ்வரன் கோயிலும் ஒன்று. இப்பதிக்குப் புள்ளிருக்கு வேளூர் என்ற மற்றொரு பெயருமுண்டு. சுற்றுப்பிரயாணமாகச் சென்ற நம் வீரமாமுனிவர் இப்பதிக்கு வந்து இத்தலத்தின் பெருமைகளைப் பலர் சொல்லக்கேட்டார். உடனே,

வாதக்காலாம் தமக்கு மைத்துனற்கு நீரிழிவாம்
போதப்பெரு வயிறாம் புத்திரற்கு—மாதரையில்
வந்தவினை தீர்க்க மருந்தரியார் வேளூரார்
எந்தவினை தீர்த்தார் இவர்.

என்ற பாட்டைப் பாடினாரென்றும் இவருடைய கவித்திறத்தைக் கண்டு ஆங்கு உள்ளாரனைவரும் ஆச்சரியப்பட்டதாகவும் ஒரு சரிதம் வழங்கப்படுகிறது. இக்கவியிலிருந்து மற்றைச் சமைய நூல்களின் உண்மைகளையும் எவ்வளவு நுணுகி ஆராய்ந்திருக்கிறார் என்பதும், கவி பாடுவதில் கருத்தும், அழகும் ஒருங்கே பொருந்தியிருந்த தென்பதுவும் ஒருவாறு உணரலாகும். இவருடைய சமயஉழைப்பு ஒருவகையில் தமிழ் வளர்ப்பு என்றே கூறலாம். இவர் தமிழை மட்டும் கற்றதல்லாமல் தெலுங்கு, உருது, பாரசிகம், சமஸ்கிருதம் முதலிய பல மொழிகளையும் கற்றுப் புலமைபெற்றார்.

இனி, மேலும் மேலும் நம் முனிவரது பெருமைகளைக் கூறிக்கொண்டேபோனால் விரியுமென்றஞ்சி என் சிற்றுரையை முடித்துக்கொண்டு இவ் வீரமா முனிவரின் விழாவிற்கு விஜயம் செய்திருக்கும் உங்களனைவர்க்கும் என் நன்றியறிதலுள்ள வந்தனத்தை அளித்து நல்வரவு கூறி அமர்கின்றேன்.


# CIBOL

**A sure and safe remedy for Ringworm, Boils, Itches, Dhobis' itches, Pimples and other skin diseases.**

**Absolutely harmless. Non-irritant. Non-poisonous.**

# சைபால்

இது கக்கூஸ்பத்து, படை, சேத்துப்புண், முகப்பரு, வேனல்கட்டி, சொரிசிரங்கு, கரப்பான் முதலிய தோல் சம்பந்தப்பட்ட எல்லா வியாதிக்கும் சிறந்தது. எரிச்சல் கிடையாது. துணிகளில் கறை பிடிக்காது.

தயாரிப்பவர்கள் :

**SOUTH INDIAN MFG. CO.,**

**44, DHANAPPA MUDALI STREET, MADURA.**

## வீரமாமுனிவர் புகழ்

திரு. சோமசுந்தர பாரதி M.A., B.L., அவர்கள்
சொற்பொழிவின் சாரம்

பெரும் புலவராய் பல நல்ல நூல்கள் இயற்றித் தமிழுக்கு அழகு செய்த வீர மாமுனிவர் என்ற புகழ்ப் பேருடைய பெஸ்கி சுவாமி அவர்களின் பாராட்டு விழாவை இன்று கொண்டாடுகிறோம். இந்நாட்டிற் பிறந்த தமிழ்ப் புலவருள் சிறந்தவர்கள் வரிசையில்வைத்து தமிழர் பாராட்டுதற்கு தன்னரிய தமிழ்த் தொண்டால் உரிமையுடையவர் இப்பெரியாராவர். ஐரோப்பிய பெரும் புலவர்களுள்ளே முதல் வரிசையில் இடங்கொள்ளும் (Virgil) வெர்ஜில் என்னும் பெருங்காப்பியப் புலவர் பிறந்த நாட்டில், அவரூர்க் கருகிலேயே பிறந்து வளர்ந்த பெரியவர் வீரமாமுனிவர். முப்பது வயதிற்குள் இலத்தீன், கிரேக்கு, எபிரேயம், இத்தாலியன், பிரெஞ்சு முதலிய பல பெரு மொழிகளிலே புலமை நிரம்பி ஏசு சமய நூல்களைக் கைவறக் கற்றுத் தேர்ந்து ஆசாரிய அபிஷேகம் பெற்று விளங்கியவர்.

அந்த நிலையில் இவர் நமது நாட்டுக்கு வந்து மதுரைப் போதக வளாகத்தில் சமயத் தொண்டாற்றத் தொடங்கினர். இங்கு வந்த பிறகு வடமொழி, ஆந்திரம், தமிழ் மொழிகளைக் கற்று வல்லுனராய் நிரம்பிய கல்வியும், மதிநுட்பமும், சொல்வன்மையும், செய்யுளியற்றும் ஆற்றலும் பெற்று விளங்கினர். பல பெருமொழிகளில் நிரம்பிய புலமை பெற்றிருந்தும், இப்பெரியார் தமிழில் தனக்கிருந்த ஆர்வத்தால் தமிழ் மொழியில் அரிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

இலக்கண இலக்கியங்களைக் கற்றுப் பிற மொழிகளில் பெரும் புலமை அடைவதே அரியதாகும். அதன்மேல் ஒரு ஐரோப்பியர் தமிழில் தமிழ்ப் புலவர் வியக்கும்படி உயர்ந்த செய்யுள்களையும் இலக்கண நூல்களையும் இயற்றுவது அருந்திறற் பெரியாருக்கும் அரிய செயலாம். இன்று நாம் கொண்டாடும் பெரும் விழாவிற்குரிமை கொண்ட பெரியார் அவ்வரிய செயலை ஆற்றியவர், ஆதலால் இன்று நாம் அவர் திருநாளைக் கொண்டாடுகிறோம்.

சென்ற ஐந்நூறு ஆண்டுகளில் தமிழ் மொழியில் எழுந்த சிறந்த செய்யுள் எதற்கும் இளையாத புலமை வளம் பொலிந்து இனிய செந்தமிழ் நடையும் சீரிய செம்பொருள் நலமும் நிறைந்து விளங்கும் தேம்பாவணியென்னும் காப்பியம் ஒன்றே இப்பெரியாரை தமிழர் என்றும் பாராட்டப் போதும். அதன்மேல் உலக மொழிகள் எல்லாவற்றிலும் யாப்பு வகையிற் சிறந்த பாட்டு வகைகளை கையாளும் இவர் போற்றலுக்குச் சான்றாக திருக்காவலூர்க் கலம்பகம், திருப்பாவணி, கித்தாரியம்மாள் அம்மானை முதலிய பாட்டுக்களும், பரமார்த்த குரு கதை, வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம் போன்ற உரை நூல்களும், தொன்னூல் விளக்கம் போன்ற ஆழ்ந்த ஆராய்ச்சித் திறம் காட்டும் இலக்கண

நூல்களும் இயற்றித் தமிழ் மொழிக்கு வளமும், தமிழர்க்கு நல்விருந்தும் தந்த இப்பெரியாரை தமிழ்ச்சங்க மிருந்த மதுரை இன்று கொண்டாடுவது இயற்பொருத்தமாகும்.

என்றும் புலவரைப் போற்றுவது தொன்றுதொட்டு நின்று வரும் தமிழர் சிறப்பியல்பு. இன்று பாண்டியரின் பழவிறல் மூதூரான மதுரையில் ஜாதி மத வேறுபாடில்லாமல் தமிழ்ப் பெரியார் எல்லாரும் ஒருங்குகூடி இப்பெருந் தமிழ்ப் புலவரைப் புகழ்ந்து அவர் திருநாளைக் கொண்டாடுவது எனக்கு மிகவும் மகிழ்ச்சி தருகிறது. பொதுவாக புறநாடுகளிலிருந்து இந்நாட்டிற்கு வந்த பிறமக்கள் வகுப்பார் எல்லாரையுமே இருபது நூற்றாண்டுகளுக்கு மேலாக அவ்வப்போது அன்போடு ஏற்று ஆதரவுதந்து சம உரிமையும் சகோதர உறவுங்காட்டிப் புகழ் பெற்றவர்கள் தமிழ்மக்கள். அவரியல்பு அதுவாதலால் பிறநாட்டிற் பிறந்த ஒரு பெரும் புலவர் இங்கு வந்து சுமார் நாற்பதாண்டு தமிழ் மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டு, தமிழ் மொழியிலும் தன்னிகரற்ற பெரும் புலவராய் பெருநூல்களியற்றி, தானெடுத்த கோயில்களுக்கும் ஊர்களுக்கும் நூல்களுக்கும் தனக்குமே தமிழ்ப் பெயர்களை விரும்பிப் புனைந்து விளங்கிப வீரமாமுனிவரை வியந்து கொண்டாடுவது அப்பெரியாருக்கும் நமக்குமே பெருமைதருவதாகும். இனி ஆண்டுதோறும் இவருக்கும் இவர்போன்ற தமிழ்ப் பெரும் புலவர்களுக்கும் விழா வாற்றிப் பாராட்டெடுத்து நம்மவர் கடனாற்ற வேண்டுமென வேண்டுகின்றேன். தமிழுக்கும் புலமைக்கும் பல்லாண்டு கூறுகின்றேன்.

MADURA RADIO COMPANY,
MADURA.
THE RELIABLE RADIO HOUSE FOR SALES AND SERVICE.
**Equipped with the latest testing equipment and manned by specialists.**
*Public address system a speciality!*

# தைரியநாதரும் தமிழ் இலக்கியமும்

By Vidwan S. Cruz Anthony, B.O.L.,
*St. Joseph's College High School, Trichinopoly.*

தவறிலாத் தவமும் வழுவிலா வாழ்க்கையும் நிகரிலாப் புலமையும் பெற்று ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்கிய வீரமாமுனிவரைத் தமிழ் உலகு வாயார வாழ்த்தி, நெஞ்சார வழுத்திப் போற்றி வருகின்றது. இவரது தமிழ் நாட்டுத் தனிப் பெயர் தைரியநாதராகும். பேரும் புகழும் ஒருங்கு எய்திய அடிகள் நம் நாட்டினர் அல்லர்; இத்தாலிய தேசத்தினர். ஆர்கலி உலகில் அருள் மறையை விளக்கும் ஆர்வத்தோடு தமிழ்நாடு போந்தவர். ஈண்டுத் தமிழ் மக்களுடைய சமூக, சமய, அரசியல் வாழ்வுகளைக் கூர்த்தமதியோடு ஆய்ந்தும், தமிழ் இலக்கணவிலக்கியங்களில் தோய்ந்தும், தனக்கு முன்னர் ஈண்டு வந்த தத்துவபோதக அடிகளின் அடிச்சுவட்டை ஒரு சிறிதும் பிசகாது பின்பற்றியும் ஒழுகி வந்தனர். விருந்தோம்பி வேளாண்மை செய்யும் தமிழ் மக்களைத் தன்னேரில்லாக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்க்கவேண்டுமென்றால் அவர்தம் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமன்றோ? எனவே, இதை இனிது உணர்ந்து தமிழ்மொழியைச் செவ்வனே ஓதி நூல் இயற்றும் ஆற்றலையும் எய்தித் தமிழ் மொழிக்கு அழியா விழுப்புகழ் எய்துவித்தார் என்று சொல்வது உயர்வு நவிற்சியாகதெனக் கொள்க. இவர் தமது வாயினால் கிறிஸ்து பெருமானின் நற்செய்தியை (Gospel) உலகத்தார்க்கு நவின்றதுமன்றி நூல் வாயிலாகவும் நுவன்றனர் என்பதை ஈண்டுக் காட்டுவாம். அடிகளைப்போல் பல வேறு வகையில் விழுமிய நூல்கள் யாத்த சான்றோர் அவருக்கு முன்னும் இருந்திலர்; பிற்றை ஞான்றும் யாம் காணேம். கால்டுவெல் கங்காணியார் (Bishop) போன்ற கீழ்நாட்டுக் கலைத்தேர்ச்சியாளர் திராவிட மொழிகளை ஆராய்ந்து முடிவு காண்பதற்கு அடிகள் வழி கோலிச் செப்பனிட்டனர் என்று இயம்புவது இசைவேயாகும். நிற்க,

## பழங்காலத் தமிழ்ப் புலவர்கள் நூல்வாயிலாகச் சமயத்தைப் பரப்புதல்

சங்க நூல்களிலும் சில சமயக் கொள்கைகள் காணக்கிடக்கின்றன. இவைகளுக்குப் பின் எழுந்த நூல்கள் எல்லாம் சமயப் பரவுதலுக்கும் எழுச்சிக்கும் எழுந்தன என்று துணிந்து கூறலாம். யாங்ஙனமெனில்? கூறுவல். திருக்குறள் கூறும் தனிப்பட்ட சமயத்தை அறுதியிட்டுக்கூற ஆற்றலற்றிருப்போமாயினும் ஆண்டுப் பல சமயக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. சிலப்பதிகாரம் என்னும் சீரிய நூல் சைனக் கொள்கைகளைச் சாற்றும் என்பது சான்றோர் துணிபு. மணிமேகலைக் காவியம் உயிர்க்குறுகண் செய்யா பௌத்த நூலின் சரங்கம் என்று சொல்வது மிகையாகாது. சிந்தாமணி சைனக் காவியம். இவ்வாறே வீரமாமுனிவரும் சமயத்தைப் பரப்புவதற்கு நூலையும் ஒரு வாயிலாகக் கொண்டார்.

## அடிகளின் பெருமை

இன்று தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஓதுவாரும் மொழிநூல் ஆராய்வாரும் இவரை நினைந்து போற்றாமலிருக்கமுடியாது. கால்ட்வெல் கங்காணியார் தாம் எழுதிய

'திராவிட மொழிகளின் ஒப்புமை இலக்கணம்'[1] என்னும் சீரிய நூலில் திராவிட எழுத்துக்களின் பிறப்பை ஆராய்ச்சி செய்து வரும்போது "வீரமாமுனிவருக்கு முன் தமிழ் மொழியில் எ, ஒ, என்ற எழுத்துக்கள் உரு வேறுபாடு இன்றி நெடிலாகவும் குறிலாகவும் வழங்கப்பட்டு வந்தன. இவ்வேறுபாடின்மை படிப்போருக்கு பெரும் மயக்கத்தை அளித்ததால், குறிலையும் நெடிலையும் நன்கு தெரிந்துகொள்ள இவற்றின் உருவங்களைப் பெஸ்கி மாற்றியமைத்தார்" என்று கூறுகின்றார். அன்றி எம் தாய் மொழியில் வடமொழி ஒலிபோன்ற சில ஒலிகள் இல்லையென எசலுற்றார்க்குப் பதிலாக ஒலிகள் அமைந்துள்ளன என்பதை அடிகளே முதன் முதலில் குறித்துள்ளார்கள். சில எழுத்துக்கள் சில சந்தர்ப்பத்தில் வெவ்வேறு விதமாக ஒலிக்கப்படும் ஒலி நுட்பத்தை 'கொடுந்தமிழ்[2]' என்னும் நூலில் விரிவாக வரைந்துள்ளார். இவைகளை நன்கு கற்றே கால்டுவெலர் இச்சூழ்ச்சித் திறனை ஆய்ந்து இத்தகைய ஒலிமாறும் சூழ்ச்சித் திறன் சித்தியன் மொழியைச்சேர்ந்த பீஹூஸ்தன் மொழியில் காணப்படுகின்றதென்று கூறுகின்றார்[3]. "The language of the tablets agrees with Tamil in regarding the same consonant as a surd in the beginning of a word, as a sonant in the middle and in pronouncing the same consonant as a sonant when single, and as a surd when doubled". எனவே ஆராய்ச்சியுலகு அடிகளை என்று மறக்காவண்ணம் ஆராய்ச்சிக்குறிப்புகளை 18-வது நூற்றாண்டிலேயே எழுதிவைத்து விட்டுப்போந்த பெருமை நம்முனிவருக்கு உண்டு என்பது தேற்றமாம்.

## சதுரகராதி

முனிவர் பெருமான் தமிழ் மொழியை ஓதும்பொழுதே தமிழ் மக்களிடத்தே மொழி பற்றிய சில குறைபாடுகளைக் கண்டார். தாய்மையும், முதன்மையும், சிறப்பையும் கொண்ட தமிழ் மொழியைப் பேசும் தமிழ் மக்கள், தங்கள் மொழியை எளிதில் கற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளையும் வழிகளையும் வகுக்கவில்லையே என்று வருந்திச் சதுரகராதியை எழுதித்தந்தார். தற்கால அகராதிகளுக்குத் தாயாக விளங்குவது இச்சதுரகராதியே எனின், இதன் தாய்மையை என்னென்றுரைப்போம்.

## காம்பாச் சுவையுள தேம்பாவணி

கற்குந்தோறும் கற்குந்தோறும் கனிந்து இன்பச்சாறு ஊட்டும் இந்நூலைத் தமிழ் உலகு நன்கு அறியும். இச்சீரிய நூல் சிந்தாமணிக்குச் சிந்தியதல்ல; இராமயாணத்திற்கு இளைத்ததல்ல. இது சூசைமாமுனிவருடைய வாழ்க்கை வரலாற்றை வகுத்துக்கூறும் வானூல். அடிகளே இதற்கு உரையும் கண்டார்கள். சூசையப்பருடைய சீலமிகுந்த வரலாற்றைச் சிறப்புறக் கூறும் வான்நூல் எனினும் பழைய ஏற்பாட்டின் பண்டைச் சரிதைகளை ஆங்காங்கு

---

[1] Comparative Grammar of the Dravidian Languages. P. 130.

[2] கொடுந்தமிழ் P. 9. The Power of the letter.

[3] Comparative Grammar of the Dravidian Languages P. 16.

முனிவர், இவர் வரலாற்றில் புகுத்திக் காட்டுந்திறன் வியக்கற்பாலது. இக்காவியத்தலைவர் சூசை மாமுனிவரும் அன்னம்மையுமாவர். தமிழ்க்காவிய மரபுக்கேற்ப இப்பெருநூல் அமைந்துள்ளது.

## நூல் தொடங்கும் முறை

நூல் இயற்றும் ஆசிரியர்கள் நூல் நவலும்போது மங்கலச் சொல்லாலோ, அன்றி அடைமொழிகளுடன் சேர்த்தோ மாணுறத் தொடங்குவது தமிழ் மரபு. எனவே, திருமுருகாற்றுப்படை "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" என்று தொடங்குகின்றது. பெரிய புராணம் "உலகெலாமுணர்ந்து" என்று முழங்குகின்றது. அன்றி, இவ்வுலகம் என்னும் மங்கலச்சொல் அடைமொழியோடு அறையவும் படும் என்பதை அறிக. எவ்வாறேனெனின் முல்லைப்பாட்டு "நனந்தலையுலகம்" என நவிலாநின்றது. சிந்தாமணி "மூவா முதலா உலகம்" என முழங்காநின்றது; விரிப்பிற் பெருகும். தமிழ் மொழி நூல் மரபைப்பின்பற்றி வீரமாமுனிவரும் 'சீரியவுலக மூன்றும்' என்று தொடங்குவது கருத்தில் வைக்கற்பாலது.

## முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றுதல்

கம்பராமாயணம் சுவைமிகுந்து தெவிட்டாதிருப்பதற்குக் காரணம் "என்னையோ" வெனப் பலர் கேட்டலும் அவர் "அதில் ஓர் அகப்பை அள்ளிக்கொண்டேன்" என்று விடை இறுத்தனராம். கம்பரைப்போலவே நமது அடிகளும் சான்றோர் செய்யுட்களின் கருத்தைத் தழுவிக்கொண்டனர். கம்பர் கூறும் கடவுள் வாழ்த்து முழுமுதற் கடவுளின் தன்மையை முற்றும் உரைக்கும் செவ்விபெற்றதாகும். இக்கருத்தைபமைத்து அந்தக் கவியரசு,

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்.
தலைவர்; அன்னவர்க்கேசரண் நாங்களே" எனப் பாடியுள்ளார்.

விழுப்புகழ்பெற்ற வீரமாமுனிவரும் தேம்பாவணியில் வழிபடு கடவுளைச்

சீரிய வுலகம் மூன்றும் செய்(து) அளித்து அழிப்ப வல்லாய்
நேரிய எதிர் ஒப்பு இன்றி நீத்தஓர் கடவுள் தூய
வேரிய கமலபாதம் வினையறப் பணிந்து போற்றி
ஆரிய னென்தன்காதை அறம் முதல் விளங்கச் சொல்வாம்

என வாயார வாழ்த்திப் புகழ்ந்து அகமகிழ்கின்றனர். சிந்தாமணியில் ஏமாங்கத நாட்டுவளப் பத்தை ஆசிரியர் புலப்படுத்தும் வகையைத் தானும் மேற்கொண்டு தேம்பாவணியில் யூதேயா நாட்டின்வளத்தை வருணிக்கிறார். சிந்தாமணி,

"காய்மாண்ட தெங்கின் பழம் விழக்கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதமென்று இசையால் திசைபோய துண்டே" என்று கூறுகின்றது.

(தேங்காய் விழுந்து கமுகம் பழத்தில் வீழ இரண்டும் சேர்ந்து பலாப்பழத்தில் வீழ்ந்து அவை யெல்லாம் மாங்கனிகளில் பட்டு எல்லாம் ஒருங்கு திரண்டு வாழைப் பழங்களை நசுக்க அவற் றின் ரசம் யாண்டும் சிதறிக் கெடும்')

மாணிக்கவாசக சுவாமிகளும்

தெங்கம்பழங்கமுகின்குலே சாடிக்கதலி செற்றுக்
கொங்கம் பழனத் தொளிர் குளிர்நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங் குன்றிற் குன்றன்னமாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்ச் சிறுமியென் தேமொழியே.

திருக்கோவையார் 100.

இக்கருத்தை இயேசு பெருமானடியாரும் இனிமையாகத் தேம்பாவணியில் நாட்டுப் படலத் தில் நவிலுந்திறன் நனிமகிழ்தற்குரியது.

பாய்ந்த தேங்கதின் பழங்கள் வீழ்தலால்
வாய்ந்த வாழைமா வருக்கை ஆசினி
சாய்ந்த தீங்கனி சரிந்த தேன் புனல்
தோய்ந்த வாயெலாம் இனிமை தோய்ந்தன.

சிந்தாமணியில்,

சொல்லருஞ் சூற்பசும்பாம்பின் தோற்றம் போன்
மெல்லவே கருவிருந்தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்த நூற்
கல்விசேர் மாந்தரினிறைஞ் சிக்காய்த்தவே.

சிந்தாமணி 24.

(நெல்லானது கருத்தங்கி ஈன்று குடிப்பிறந்தார் செல்வமே போல் தலையை நேரே நிறுத்திக் கல்விசேர் மாந்தரைப்போல மிகவும் விளைந்து விளைந்தன) என்று திருத்தக்கத் தேவர் கூறிப்போந்தார்.

ஐயரும் நாட்டுப்படலத்தில்,

பூரியார் திருப் போறலை பசிய கூழ் நிறுவி
நீரினுர்தலை நேர நேர்வளை வொடுபழுத்த
வாரமானு நெல்லறுத் தரிகொண்டு போயங்கட்
போரிதாமெனக் களித்தனர் போர் பல புனைவார்.

தேம்பாவணி 14.

(செல்வம் அடைந்த நீசரைப்போல் பசும்பயிர் தலையெடுத்தபின் பெரியோர் தலைபோல் விளைந்த நெல்லையறுத்து போராகச் சேர்ப்பர்) என அக்கருத்தை அழகுற அமைக்கின்றார்.

இவ்வாறு வீரமாமுனிவர் கம்ப இராமயணம், திருக்குறள் முதலிய விழுமிய நூல்களின் கருத்துக்களைப் பொன்னேபோல் போற்றி எடுத்தாளும்முறை இன்புறற்பாலது. விரிவஞ்சி விடுக்கின்றோம்; நூலைப் படித்துணர்க.



தைரியநாதரென்னும் வீரமாமுனிவர்

நிற்க அடிகள் பழைய ஏற்பாட்டின் பண்டை நிகழ்ச்சிகளைப் பகரும் ஆற்றல் பகரவொண்ணாது. யூதர்களாகிய இஸ்ராயேலர் பார்வோனின் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்டதை அடிகள் அழகுபடக் கூறுகின்றார்கள். மக்களை ஈடேற்ற எம்பெருமான் திருவருள் கொண்டு எம்மன்னையைத் தாயாகப் பெற்று இவ்வுலகத்தில் பிறந்தார். உலகநாதன் ஒன்றுமில்லாத ஏழையாக வறுமையிலே உருவெடுத்த குடும்பத்தில் பிறந்தார். இவர் இன்னார் என்று அறிவதற்கு அடிகள் இஸ்ராயேலரைப் பாரவோனின் கொடுமையில் இருந்து மீட்க ஈசன் இன்று ஏழையாகப் பிறந்தனன் என்று இளவன் மாட்சிப்படலத்தில் கூறுகின்றார். சோதோம் கொமாராவைச் சுட்டெரித்த சுதன் இன்று சின்னாள்பல்பிணிச் சிற்றறிவினனாகிய ஏரோதனுக்குப் பயந்து எகிப்துக்கு ஓடுகின்றார் என்று தித்திக்கும் கரும்பினும் இனிய செய்யுளால் கூறும் திறன் அம்ம! வியக்கற்பாலது.

இஸ்ராயேலர் நல்லதரையில் செல்லுதற்கு கடல் இருபிளவாகப் பிளந்தது; ஆதலால் ஆண்டவனுடைய மக்கள் அடுத்தகரை அடைந்தனர். பார்வோன் சேனையோ நடுக்கடலில் அகப்பட்டுக் கொண்டது; கடலும் மூடிக்கொண்டது. அப்போது சேனைவீரர் படும் பாடுகளை நம் முனிவர் வருணிக்குந் திறமாவது :

**பிரிவார்; தமினெரிவார் கறைபிளிர் வார்வதை பெறுவார்**
**முரிவார் அலைபுகுவார் உளமுனிவார் துயர் முதிர்வார்**
**எரிவார் உடல்கரிவார் இறந்திழிவார் இடைஇடையே**
**ஒரு வாளியெய் யருவாயின ஒரு வானவனுரனல்.**

(இளவன் மாட்சிப் படலம், 61.)

(தலை தமொறித் தம்மை மயக்கத்தால் சிதைத்த பகைவர் இதோ முன்னே நிற்பர்; மேகத்து மேல் நிற்பார் என்பர். இங்கே நிற்பார். அங்கே நிற்பார். கடலின்மேல் எமக்கு நேர் நிற்பார் என்பர். இவ்வாறு தம்மைக் கொல்லுங் கையைக் குறிப்பார்.)

இப்பாடலைச் சிறிது பாருங்கள். ஓசை இன்பம் படிப்போர் மனதைக் கொள்ளை கொள்ளும். இவ்வாறே இவருடைய சந்தர்ப்பங்களுக்கேற்ற ஓசையும் ஆற்றொழுக்குப் போன்ற சொற்றொடரின் பெருமிதமான நடையும் மொழுமொழுவென்ற விழுமிய சொற் கூட்டங்களும் யாவரையும் மயக்குந் தன்மையன.

## ஏனைய நூல்கள்

அடிகள் தேம்பாவணியால் தமிழ்த் தாய்க்கு மாலை சூட்டினதோடு அமையாது திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கால் அந்தாதி, அடைக்கலமாலை, அடைக்கல நாயகிமேல் கலி வெண்பா, கித்தரீன் அம்மானை முதலிய விழுமிய செந்தமிழ் நூல்களை இயற்றித் தந்தார்கள். இந்த நூல்களை ஓதுவார் முனிவர் பெருமான் எம்மரியம்மையிடத்துக் கொண்டுள்ள உள்ளன்பை அங்கை நெல்லிக்கனிபோல் உணர்வார் என்பது தேற்றம். அன்றித் தமிழ் மொழியைக் கற்று ஒப்பாரின்றி ஓங்குபுகழ் எய்துவதற்குக் காரணம், எம்மம்மையின் திருவருட் செயல் என்பதை மறுக்கமுடியாச் சான்றால் விளக்குவோம்.

அடிகள் அயல் நாட்டினர்; அயலார் ஒரு மொழியின் நுட்பங்களை அறிதல் அரிது. அதிலுந் தமிழ் மொழி அயலாரை அலறவைக்கும் ஆற்றல் அமைந்தது. இத்தகைய மொழியைக் கற்றுப் புலவராவது யாங்ஙனம்? இவர் தாம் தமிழ் ஓதியது எம்மரியம்மையின் அருளால் என்பது தேம்பாவணியின் இறுதியில் கூறப்பட்டுள்ள "எக்கலை அனைத்தும் விளைவித்து உணர்த்தும் கிழத்தியாகிய மரியாயி என்பாள்" என்பதால் நன்கு விளங்கும் என்பது தெளிவு.[1]

வீரமாமுனிவர் வீட்டுலக நெறியை உரைப்பதற்குத் தமிழ் கற்றதின் நற்பயனாகத் திருக்காவலூர்க் கலம்பகத்தை நாம் பெற்றோம். என்னே! கலம்பகத்தில் பல்வகைச் சுவை நிரம்பிய பலதிறப்பட்ட பாடல்கள் விரவிவரும். எனவே, புலவரது செய்யுள் செய்யும் திறமும் நுண்மாண் நுழைபுலமும் கலம்பகத்தால் வெளிச்சமாகும். எம் அம்மைமீது அளவிலா அன்பு கொண்டருளிய ஐயர் பாமாலை தொடுப்பதும் அவற்றை அருளுருக்கொண்ட அன்னையின் திருவடிகளில் சூட்டி இன்புறுவதுமாகிய செயலில் திளைத்து நின்றார். அவர் நுகர்ந்த நுகர்வே திருக்காவலூர்க் கலம்பகமாகப் பரிணமித்தது. அந்தணரின் ஆரா அன்பைக் கண்ட என் அம்மையும் அவருக்கு அடைக்கலந் தந்தமை.

**இன்பருளிப் பூ நிழல்சூழ் இயைக் காவலூரகத்தே[2]**
**அன்பருளி நீ எனையும் அடைக்கலங் கொண்டாயலையோ.**

---

[1] தேம்பாவணி 3-ம் காண்டம் பக். 407.

[2] அடைக்கல நாயகிமேல் கலிவெண்பா.

என்ற வெண் கலிப்பாவாலும் அம்மை கோயில் கொண்டருளிய ஊருக்குத் திருக்காவலூர் என்றமைத்த பெயர் தானும் வெளிப்படும் என்க.

அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பேரிடர்ப்பட்டுப் பெரிதும் இடுக்கணுற்றனர் என்று சரிதத்தால் உணர்கின்றோம். என்அன்னையில் அருட்டிறத்தால் அருள்மறை மக்கள் அடைக்கலம்பெற்று வாழ்ந்தனர், இவ்வாறு ஓம்பிய அம்மைக்குச் செய்ந் நன்றியாகக் கலம்பக முதலிய நூல்களை யாத்தனர் அடிகள்.

## அம்மையின் திருக்கோலம் கண்டமை

1. அனம் ஆடி விளையாடும் அம்புயமார் வாவியின்றிப்
புனம் ஆடி மதிதாங்கும் புண்டரிக அடிகண்டேன்
தாயேநீ அன்று செய்த தயை யொருநாள் மறப்பேனே
நோயேகொன் டொழியினும் நான் உன்மலர்த்தாளொழிவேனே
நான் செய்த தீவினையும் நயந்தருளித் தாயே நீ
தான்செய்த ஆதரவும் சாற்றுது மெந்நாளுமன்றே
மறை நலமுந் தயைக் கடலும் வான்கதிசேர் இருவழியும்
இறைவனையும் என்னுருவோ டெனக்கினிநிற் காட்டினையே[1]

2. அடிசேர்ந்தேன் கண்டேன் அணிந்தேன் பணிந்தேன்
மிடிதீர்ந்தேன் பேரின்ப வெள்ள—முடியாக
குளித்தேன் துதித்தேன் குளிர்ந்தேன் மலர்த்தாள்
துளித்தேன் சுவைத்தேன் சுகித்தேன்—களித்தேனே
காண்டற் கரியனவுங் கண்டேனே கண்டன பின்
நீண்டற் கினியனவும் நீண்டினனே[2]

முதலிய நல்லிசைச் செய்யுள்களை நன்கு உணர்வார்க்கு அடிகள் அம்மையைக் கண்ணாரக் கண்ட காட்சி தேற்றமாம்; திருவடி கண்டு திளைத்தனர் என்பது திண்ணமாம்.

பாமாலை தொடுத்து மகிழ்ந்த முனிவர் எம் தமிழ் மொழியில் என்றும் இருந்திராத உரைநடை நூல்களை எழுதிப்போந்தனர். படிப்பார்க்கு உவகையூட்டும் வேத விளக்கம், தர்க்க நூல் எனினும் அதன் சுவை தெவிட்டாத் தீங்கனியை ஒக்கும். கற்கண்டு மலையை எந்தவிடத்தில் நாவிட்டு நக்கினும் இன்சுவையே தருவதுபோல நூலின் எப்பகுதியைப் படிப்பினும் சுவை மிகுந்திருக்கும். மாற்றுரை, ஆகமம், அளவை, காட்சி முதலியவற்றால் மடக்குந் திறன் மறக்கற்பாலதன்று ; தூயதென் சொற்களாலாய இந்நூலை பாண்டிச்சேரி அச்சுக்கூடத்தார் அழகு ததும்பப் பதிப்பித்திருக்கின்றனர்கள். அன்றி, நகைச் சுவை ததும்பும் பரமார்த்தகுரு கதை,

---

[1] அடைக்கல நாயகிமேல் கலிவெண்பா.
[2] அடைக்கலமாலை உலா.—39, 40, 41.

பேதக மறுத்தல், வேதியர் ஒழுக்கம் முதலிய நூல்கள் இவர் செய்த உரைநடை நூல்களாம். பின்னர்க் கூறிய வேதியர் ஒழுக்கம் மாற்றார் வேதபோதக சாலைகளிலும் (Theological School) பாடப் புத்தகமாகவிருந்தது என்றால் அதன் உயர்வை என்னென்றுரைப்பது.

இலக்கியத்துறையில் கைபோய இருடிவேந்தர் தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் முதலிய இலக்கண நூல்களையும் எழுதித் தந்தார். திருவள்ளுவப்பயனை இலத்தினில் மொழி பெயர்த்தார். அடிகள் எழுதிய நூல்கள் 21 என்று கணக்கிடப்பட்டுள்ளன.

தன் வாழ்நாளில் இத்துணை நூல்களை வேற்று நாட்டினர் எழுத முடியுமோவென்று ஐயுறுவார் "வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்பு நர்க்கியாவது முண்டோ வெய்தா வரும் பொருள்" என்று சிலப்பதிகார அடிகள் கூறும் அறவுரையை நோக்குவாராக.

தமிழ் என்றும் நிலவுந் தன்மையது; தைரியநாதரின் புகழும் புவியில் பொங்கி நிலவும் என்பது திண்ணம். அகத்தியன் 'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்' என்று கம்பர் கூறுவதுபோல நாமும் இவ்வடியை நமது வீரமாமுனிவர்க்கும் ஏற்றி 'என்றும் உள தெண் தமிழ் இயம்பிஇசை கொண்டான்' என்று முடிப்பது சாலப் பொருந்துமன்றே.

---


# THE INSTITUTE of ELECTRO-TECHNICS

(School of Electrical and Radio Engineering)

NANDIKOIL STREET, TEPPAKULAM P.O., TRICHINOPOLY.

**I. EDUCATIONAL SECTION**

The following courses are open to students wishing to take up Technical education in our Institution :—

1. Group certificate Course in Electrical Engineering (Govt. Examinations).
2. Technical Electricity—Grade II
3. Electrical Engineering Practice— Grades I, II & III
4. Radio Service Work—Papers I & II
5. Radio Communication—Grades I, II & III

(Items 2–5: City & Guilds London Examinations.)

6. Cinema Operators Course.

**II. COMMERCIAL SECTION**

We undertake GENERAL ELECTRICAL REPAIRS,
RE-WINDING OF TRANSFORMERS & MOTORS,
BATTERY CHARGING,
RADIO SERVICING, and can supply High Fidelity Public Address systems for Lectures, Concerts etc.

*For further details please refer to the SUPERINTENDENT.*

# வீரமாமுனிவர் சிறைபுகுதல்

## 21—12—1714

### திரு. மாரிச்சாமி.

"கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோபோல் யாங்காணும் பிறந்த தில்லை. உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்று பாடியிருக்கின்ற பாரதியாரின் வாக்கைக் பொய்ப்பிக்கவோ என்னவோ, 1680-ஆம் நவம்பர்-மீ 18-ம்உ இத்தாலி தேசத்தின் வெனிஸ் மாகாணத்தைச் சேர்ந்த காஸ்டிக்ஸியோனில் ஒரு மகான் பிறந்தார். அம்மகான்தான் ஜோசப் கான்ஸ்டன்டையின் பெஸ்கி என்னும் வீரமா முனிவர். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்று சொல்லியிருக்கும் ஔவை பிறந்த இந்நாட்டிற்கு தமிழ் மொழியை, மேன்மைப்படுத்தி, சிறந்து விளங்கும்படி செய்ய, ஆயிரக் கணக்கான மைலுக்கப்பால் இருக்கும் அந்நாட்டவர் ஆழி கடந்தும் ஊழியம் செய்திருக்கிறார் என்றால், அப்படிப்பட்ட அந்த மகானைப் பற்றி, நாம் ஒரு சிறிதாவது தெரிந்து கொள்ள வேண்டாமா?

இத்தாலி தேசத்திலே பிறந்த வீரமா முனிவர், 1711-ம் வருஷத்தில் தமிழ் நாட்டிற் பணி செய்ய ஆரம்பித்தார். கிறிஸ்துவ மத போதனைக்காக ஏற்பட்ட அவரது தொண்டானது, நெல்லுக் கிறைத்த நீர் புல்லுக்கும் ஆனதுபோல், தமிழையும் தலை தூக்கி வைத்துவிட்டது. இவரது நல்வரவும், சிறந்த தொண்டும் தமிழர்களுக்குக் கிடைத்திருக்காமற் போனால், தமிழன்னை தன் நாயகனை இழந்து, தமிழ் தன் தந்தையை இழந்து, அதோடுமாத்திரமா! தனக்குப் பின்னாலே கிடைத்த அந்த அருமையான கணவனையும், ஜீவாதாரமான சீர் வரிசையையும் இழந்து, ஏக்கத்தால் மெலிந்து இறந்த இடம் புல் முளைத்துக் கூடப்போயிருக்கும்.

ஆம்! தமிழுக்கே ஜீவாதாரமான சுவாமி வீரமாமுனிவர், தமிழ் நாட்டிலே சேசு பணி செய்வதற்காக முதல் முதல் இறங்கியதும், கயத்தாற்றுப்பாளையத்தைச் சார்ந்த குருக்கள்பட்டி என்னும் கிராமத்தில் பணிசெய்யத் துவங்கினர்.

அந்தோ! இந்த உலகம், எவன் நல்லவனோ! எவன் பணி செய்வதே எனது கடன் என்று இருக்கின்றானோ! எவன் சிறந்த சன்மார்க்கனாயிருந்து இந்த உலகத்திற்கு நல்லொழுக்கத்தைப் போதிக்கின்றானோ! அவனையே தன் ஆசை தீரச் சோதிக்கின்றது. அதுபோன்று தான் சுவாமி வீரமாமுனிவரையும், கண்டவரும் கேட்டவரும் கதறிக் கண்ணீர் விடும்படி இன்னல்மேல் இன்னல் விளைவித்து, இடுக்கண் என்னும் பாணத்தை எங்கோமும் தொடுத்துவிட்டு, கடைசியாய் எதிர்க்க முடியாமல் ஏமாந்து ஓடியது.

கயத்தாற்றுப்பாளையத்திலே சுவாமிகள் சேவைசெய்து வருங்காலத்து, அங்கே பிரபலமாயிருந்த சேர்வைக்காரன் என்பான் இவரது திருச்சபைக்கு உறவினன் ஆனான். அவனைப் பின்பற்றி, இன்னும் அநேகர், இந்தத் திருச்சபைக்கு உள்ளத்தைப் பறிகொடுத்தனர். இந்த மதமாற்ற விஷயமானது, அங்கே இருந்த பண்டாரங்களுக்கும், போலிச் சாமியார்களுக்கும், அவனது படைகளுக்கும் அறவே பிடிக்கவில்லை. அது காரணமாக, அன்பே உருவும், ஆதரவுமே பணியுமாகக்கொண்ட சுவாமியார் அவர்களை, மனதார வெறுக்கத் தொடங்கினர்.

இவ்வளவு எதிர்ப்புகளையும் தாங்கி தமது காரியமே கருத்தாகக்கொண்ட சுவா

# AGNES EMPORIUM

**54, WEST TOWER STREET,**
**MADURA.**

A New House for Every Variety of
Religious Articles.

## CATHOLIC BOOK SELLERS

Crosses
Candles
Pictures
Medals
Incense

Rosaries
Statues
Scapulars
Altar Lamps
Xmas Cards

*We Manufacture*

## ROSARIES and STATUES

*ENQUIRIES SOLICITED.*

சகலவித பக்திக்குரிய பொருட்களுக்கும்
சிறந்த பண்டகசாலை.

வாருங்கள் ! வந்து எம்மை ஆதரியுங்கள் !

பக்திரசமூட்டும் உயரிய படங்கள் !

கண்கவரும் வர்ணங்களில் தீட்டப்பட்டு பரவசத்தைத் தரும்
திரு இருதய சுரூபங்கள் ! கிறீஸ்து இராஜா சுரூபங்கள் !!

அழகான ஜெபமாலைகள் !

கெட்டியாகக் கட்டப்பட்டவை ; நீடித்து நிலைபெறும் ஜெபமாலைகள்
வேண்டுமானால் எம்மிடம் வாருங்கள் !

# அக்னேஸ் எம்போரியம்,

54, மேலக்கோபுர வாசல், மதுரை.

# ஹூப்பெக்ஸ்

கக்குவான், இருமல், காசம், க்ஷயம்,
முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து.

●

எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

●

நயாரிப்பவர் :

## BHARATH DRUG HOUSE

---

ஏஜண்டுகள் :

**SOUTH INDIAN MFG. Co.,** 44, DHANAPPA MUDALI STREET
MADURA

---

# RAMAN & CO.,

**BRAHMIN BAKERY,**

**TEPPAKULAM P.O., TRICHINOPOLY.**

*Manufacturers of:*

Quality Rusks, Biscuits, Cakes, Bread,
Raggi Malt Biscuits OUR SPECIALITY!

---

# THE NEW ENGLISH BAKERY,

NEAR SIMMAKAL, MADURA.

**Branches at GHORIPALAYAM, MADURA.**

Manufacturers of High Class Biscuits of all kinds, Xmas, New Year and Birthday Cakes of Artistic decoration.

*A Trial will Convince You.*

A. V. RAGAVAN,
*Proprietor.*

தந்தி : 'ஒரிஜினல்', திருச்சி. Tel. Add : '**ORIGINAL**', Trichy.

# M. ராமசாமி செட்டி & கோ.,

TRADE MARK

## ஷராப் வியாபாரம்,

## பெரிய கடைவீதி, திருச்சினுப்பள்ளி.

TRADE MARK

திருச்சி தொழிற்சாலைகள் :

1. இப்ராஹிம் பார்க் ரோட்,
2. மதுரை ரோட்,
3. திருவானைக்காவல் தெற்கு ரதவிதி,
4. டாக்கர் சத்திரம் தெரு,
5. "கிருஷ்ணா விலாஸ்" சான்பஜார்.



தோடு சைஸ்
வைரம் 1-க்கு
ரூ. 1-0-0

பேசரி சைஸ்
வைரம் 1-க்கு
ரூ. 0-12-0

ஓரிஜினல்
கல்ச்சர்
வைரங்கள்

ஓரிஜின்ல்
கல்ச்சர்
வைரங்கள்

*Rangoon Factory :* **252, Mogul Street,** *(Suspended for the present)*

எங்களிடம் கைதேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு
கல்ச்சர் வைரங்களில் தயாரான பலவித
லோலக் தினுசுகள், மூக்குத்தி, பேசரி,
தோடு, கடுக்கன் முதலிய நகை
கள் கியாரண்டியுடன்
கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :

# M. RAMASWAMY CHETTY & Co.,

*Up-to-date Modern, Fashionable, Jewellery Manufacturers,*

**Big Bazaar Street, :: TRICHINOPOLY.**

**PUBLIC ADDRESS EQUIPMENT**

**with Microphone and Loudspeakers is available at moderate cost for all places with or without electric current. By the help of this you can control the crowd, make everyone hear your sermon whatever the crowd or noise may be, and make the occasion more attractive and the hours in between meetings well spent with — good Christian recorded music. —**

*Apply to:* **ARTHUR DAVID,**

**ELECTRIC & RADIO ENGINEER, 52, NEW MAGALIPATTY ROAD, MADURA.**

# R. M. S. & SONS, BAKERY

டவுன் ஹால் ரோடு மதுரை




TOWN HALL ROAD MADURA

## ஆர். எம். எஸ். அன் சன்ஸ், பேக்கரி.

## மிட்லண்ட்

### இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை.

சேர்மன்: குமாரராஜா SIR M. A. முத்தையா செட்டியார் அவர்கள்.

நீங்கள் பாலிசி எடுப்பதற்கும்,

ஏஜன்ஸி எடுப்பதற்கும் ஏற்ற கம்பெனி.

மியார், எதிர்ப்புகளையும், இன்னல்களையும், பொருட்படுத்தாது, தொண்டுசெய்து கொண்டு வரும் காலத்து, வாழுகிற வீட்டிலே குருநாதன் புகுந்ததுபோல், ஓர் கீழ் மகன் அவரை அண்டினன். எங்கெங்கோ, பல பக்கங்களையும் சுற்றி, ஆளுக்குத் தகுந்தாற்போல் வேஷங் காட்டி, அடியும் மிதியும் பெற்றுவந்த அந்த அற்பன் அவரை எப்படியோ மயக்கி, ஒரு புனிதன் மாதிரி நடித்து அவர் இட்ட அன்னத்தை உண்டான்.

உண்ட வீட்டிற்கு இரண்டகமே நினைக்கும் அந்தப் படுபாவி முனிவரிடம் விடைபெற்றுச் சென்றபின், சமீபத்திலிருந்த ஆலங்குளத்தில், மதுரை நாயக்கர் மன்னன் சேனை அரசிறை தண்டுதற்காக வந்திருக்கக்கண்டான். அந்த இழிகுலத்தோன் பக்கிரி வேடம் புனைந்து, அவர்கள் முன் சென்று, தான் ஒரு மகம்மதிய மதஸ்தன் என்றும், மதபோதனை செய்ய ஆங்காங்கே சென்றிருக்கும்போது கிறிஸ்தவ போதகர்கள் என்னை கையப்புடைத்து, நான் வைத்திருந்தவைகளையும்பிடுங்கிக்கொண்டு படுகாயப்படுத்திவிட்டார்கள், இது உங்களுக்குத் தகுமா? அடுக்குமா என்று ஓலமிட்டு முறையிடலானன்.

இதைக் கேட்ட தானைத்தலைவன் கடுஞ்சினங்கொண்டான். அவர்களைச் சிறையிட்டு, அவர்கள் வைத்திருக்கும் பொன்னும், மணியும் கவர்ந்து வருமாறு, தன் மைந்தனுக்குக் கட்டளையிட்டான். உடனே அவனது மைந்தனின்கீழ் ஒரு சிறு படை வெளியேறியது. பாவனைப் பக்கிரியும் வழி காட்டிச் சென்றான்.

படையைக்கண்ட ஊரார் பாம்பைக் கண்டதுபோல் நடுங்கினர். தங்களது ஒப்பற்ற தலைவர் சிறைப்பட்டுவிட்டார் என்று கேள்வியுற்றதும் மணி இழந்த நாகம்போல் கதறினர். அவர்கள் எவ்வளவோ, தண்டத்தலைவனைக் கெஞ்சிக் கேட்டும், அரட்டி உருட்டியும் ஒன்றும் பலனளிக்கவில்லை. இதற்குள், தானைத் தலைவன், பக்கிரியுடன் முனிவர் இல்லம் புகுந்து, சுற்றுமுற்றும் துளாவினன். அவன் எதிர்பார்த்த மணியும், பொன்னும் காணேம். மூலை முடுக்கெல்லாம் தேடி, கடைசியில் இயேசு மதத்தினருக்காக வரங்கி வைத்திருந்த மூலாம் பூசிய சிறு பொற்சுரூபங்களைக் (Medals) கண்டு எடுத்தான். அந்தப் பொற் சுரூபங்களோடு, முனிவரையும் சிறையிட்டுக் கொண்டு நடந்தான். இதற்குள் போலிப் பக்கிரி, இனி இருந்தால் ஆபத்து என்று நழுவிவிட்டான்.

பாவம் சிறைப்பட்ட சுவாமியாருக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. எல்லாம் அவன் செயல் என்று தேவனைத் துதித்துக்கொண்டு அவர்கள் பின்னேடிச் சென்றார். பாவம்! சேசு சேவை செய்து நாளைக் கடத்திவரும் அந்த மகானுக்குக் கிடைத்த சிறையைப் பாருங்கள்.

பாசறையில் அமர்ந்திருந்த தானைத் தலைவன் மூன்னே வீரமாமுனிவர் நிறுத்தப்பட்டார். தானைத் தலைவன் அவரைப் பல கேள்விகள் கேட்டான். அவர் ஆணி அடித்தாற்போல் விட்ட பதில் அவன் உள்ளத்தைத் துளைத்தது. கோபங்கொண்ட தலைவன், முனிவரைக் கொலைசெய்யும்படி உத்தரவிட்டான்.

அந்த வேளையில், சொல்வன்மை படைத்தவர் ஒருவர், இராசாக்கள் குலத்தைச் சார்ந்த ஒருவருமாக இருவரும், எப்படியும் முனிவரை விடுவிக்கவேண்டுமென்று துணிந்து தலைவன் முன்னே வந்து நின்றனர்.

அப்போது, பொற்காசுகளைச் சோதிக்கச் சென்ற ஒருவன் தலைவன் முன்னே நின்று, "தலைவ! இது பொற்காசுகள்ல்ல;

தங்கமுலாம் பூசிய போலிக்காசுகளேயா கும் என்று வினயமாகப் பகர்ந்தான். இதைக்கேட்ட தலைவனின் முகம், ஏமாற் றத்தால் மாறுபட்டது. "இது உண்மை யான பொற்காசுகள்" என்று பலருக்கு முன்னால் பறை சாற்றியவனை நினைக்கவும் அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது. முனிவரின்மேல் இலேசாய் இரக்கம்விழ ஆரம்பித்தது. அப்போதுதான், தன் முன்னால் கோடை யிடிபோன்று பேசிக் கொண்டிருக்கும் சுவாமிகளின் குரல் அவன் காதில் விழுந்தது. சற்று உற்றுக் கவனித்தான். கவனிக்கவே அந்த வார்த் தைகள் அவன் உள்ளத்தைத் தொட்டு நெஞ்சைக் கரைத்தன. சினம் மாறி மனம் தளர்ந்தான். வீரமாமுனிவரை விடுதலை செய்தான். அவரிடமிருந்து பறித்த எல்லா நாணயங்களையும் திருப்பி, அவ ருக்கே சமர்ப்பித்தான். தன் குற்றத்திற் காக மன்னிப்புப்பெறுவதுபோல், அவரி டம் நட்புப்பூண்டு சல்லாபித்தான். கடைசி யாக அவனிடம் விடை பெற்றுக்கொண்டு முனிவர் தன்னகத்தே திரும்பினர்.

ஆனால், அவர் அங்கே வந்ததும் என்ன கண்டார்? பதைபதைத்த மக்களையும், பாழடைந்த கோவிலையும், சீரழிந்த செல் வத்தையும், செழிப்பற்ற முகங்களையும் கண்டார். உள்ளம் உதறி உருக யாது காரணம் என்று விசாரித்தார்.

அந்தோ! அப்போதுதான் அவருக் குத் தெரியவந்தது. கொடுமையாரால் நடந்திருக்கிறது என்று. வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததுபோல், சுவாமியார் ஒருவரால் வளர்க்கப்பட்ட ஒரு கயவன், அவரால், உண்டு, உடுத்து, போற்றி, பாது காக்கப்பட்டு, நன்றாய்ப்படித்து, பட்டம் பெற்று, கயத்தாற்று வட்டத்தின் கவர்ன ராய்வந்து, தன்னைப்போற்றி வளர்த்தாரை மறந்து, தன் சமயத்தையே புறக்கணித்து, அதன்பின், அதைச் சார்ந்தோரையும் துன்புறுத்தி, அவர்களைப் படாதுபடுத்தி இன்னல்விளைவித்து, விட்டுச் சென்றிருக் கிறான் என்பதை அறிந்ததும் அவர் மனம் பட்டபாட்டைச்சொல்லவும்வேண்டுமோ?

நேரே அவனிடம் சென்றார். "இது நீதியா, நியாயமா? இது முறையா? இது உனக்குத் தகுமா" என்று மனம் உருகக் கனிந்த குரலில் அவன் உள்ளமே பதறும் படி கேட்டார். அவன் செய்தது, அநீதி யிலும் அநீதி என்று தெரிந்த சர்க்கார் அவனை ஆறு மாதம் சிறையிலிட்டனர். சிறையிலிருந்து வெளியேறிய அவன் எங் கேயோ போய்விட்டான்.

நிற்க, சிறையினின்று விடுதலைபெற்ற முனிவர் சிறுதும் தளர்ந்தாரில்லை. இடி போன்ற இன்னல்கள் அவரிடத்திலே நெருங்கினும் இயேசுவின் கிருபையால் மின்னல்போல் மறைந்தது. இத்தனை இன்னல்களையும் அவர் தாங்கி, சேசு பணியே தனது பிறப்புரிமை என்று அவர் உணர்ந்து, தனது காரியமே கண் ணுக இருந்தார்.

சுவாமி வீரமாமுனிவர், என்று தமிழ் நாட்டில் காலை வைத்தாரோ அன்றே தமிழ் அன்னையைக்கண்டு, அவளது செல் வாக்கிலே, செழிப்பிலே மயங்கி, தமிழைப் போற்றினர். ஆதிகாலத்திலே எவ்வ ளவோ பேரால் போற்றப்பட்டு, புகழப் பட்டு வந்த அந்த அன்னை, தற்போது தன்னையாரும் கவனிப்பாரற்று கண்ணீர் விடுவதைக் கண்டதும் மனம் நைந்து உரு கினர்.

அன்றே தமிழின் சேவை தனது பிறப் பின் இரண்டாவது உரிமை போதும் என்று அவர் நினைத்தார்.

தமிழ் நாட்டிலே அடிகள் காலடி வைத் ததும் தமிழ்ப் புலவர்களைத் தேடி, தமி ழைப் பயின்று, அவர்களே வியக்கும்

வண்ணம், திறமை பெற்றார். அதன்பின், கம்பனையும், வள்ளுவரையும் அவர்களது பாக்களிலே கண்டு ஆனந்தக் கண்ணீர் சொறிந்தார். இவ்வளவு அருமையான நூல்களைப் படைத்துள்ள இந்தத் தமிழர்களா! இதைப் புறக்கணித்து, பல்வேறு மொழிகளை அறையுங் குறையுமாகக்கற்று, தமிழன்னையை அவமானப்படுத்துகிறார்கள் என்று வியப்புற்றார். சரி, தாமாயினும் முனைந்து நின்று தமிழன்னையின் கண்ணீரைக் கழுவவேண்டுமென்று துணிந்து நின்றார். தமிழ் மொழியின் அருமையான பாக்களையும் பல மொழிகளிலும் மொழி பெயர்த்தார்.

அது மட்டுமா அவர் செய்தார். அவர் செய்த ஒவ்வொன்றையும் எழுத்தால் எழுதி, வாயாற் சொல்லி முடிகின்ற காரியமா? எழுதினும் இடங்கொள்ளுமா? இருந்தும் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். தமிழன்னைக்கும் பணிசெய்யத் தொடங்கிய அவர் மேலும் மேலும் விடாது உழைத்தார்.

தனக்குப்பின் தமிழன்னையின் குழந்தையாகிய தமிழை ஆதரித்துப் பாதுகாக்க வேண்டுமே, தற்போது இருக்கும் தமிழர்களே இதை இவ்வளவு தூரம் புறக்கணித்தால் வரப்போகும் தமிழர் அதை என்ன பாடு படுத்திவைக்கமாட்டார்கள் என்று ஒருகணம் யோசித்தார். ஆகவே, அது எக்காலத்திலும் சீர்குலையாமல் இருக்க ஓர் பாதுகாப்பு ஏற்படுத்தவேண்டுமென்று எண்ணினார். உடனே அதற்காக வேலை செய்யத்துடங்கினார்.

பிற நாட்டாரும், தமிழ் நாட்டாரும், ஒவ்வொரு தமிழனும் வியப்புறும் வண்ணம் அயல் நாட்டிலே, அந்நிய நாட்டிலே, மேல் நாட்டிலே, இத்தாலியிலே பிறந்த சுவாமி வீரமாமுனிவர் தமிழுக்காக, தமிழின் சுவைக்காக, தமிழின் மணம் நாலா பக்கத்திலும் பரவுவதற்காக, அதனுடைய சுவைஎன்றுமே கெடாமல் இருப்பதற்காக தன்னந்தனியாக நின்று, ஆதரிப்பாரற்று அவதிப்படும் தமிழுக்கு, தமிழிலே, தமிழுக்கே ஓர் நாயகன்போன்று அகராதி ஒன்றை அமைத்தார். அது மட்டுமா? அதனுடைய ஒளி இன்றும் பிரகாசிக்க, எடுத்துக்காட்ட, கம்பனும், வள்ளுவரும் கண்டுகளித்துத் துடிதுடிக்கும் வண்ணம், அருமையான சுவைநிறைந்த ஒப்பற்ற, "தேம்பாவணி" என்னும் தலைசிறந்த நூலை தமிழுக்காகச் சீர்செய்தார். அந்தத் தேம்பாவணி என்ற அருமையான நூலை மதுரைச் சங்கத்தார் அரங்கேற்றியதோடு, அந்த ஒப்பற்ற நூலைத் தந்தருளிய அந்தப் பிரானுக்கு, சரியான தமிழில் "வீரமாமுனிவர்" என்று பட்டம் சூட்டினார்கள்.

தமிழன்னை, தனக்காக, தனது சேவைக்காக ஒவ்வொரு தமிழனும் தியாகம்செய்ய வேண்டியிருக்க புறக்கணித்துவிட்டதை ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு அந்நிய நாட்டார் உயிரோடிருந்தும், இறந்தும் தனக்குச் செய்து வரும் அருமையான சேவையை, எந்தத் தமிழனாவது, ஒப்பற்ற தமிழின் தந்தை போன்ற வீரமாமுனிவரை, இன்றாவது நினைக்கின்றானா என்றுதான் கண்ணீர் விடுகின்றாள்.

தமிழர்களே! நானுந்தான் கேட்கின்றேன். தமிழ்! தமிழ்! தமிழுக்கே சேவைசெய்து அரும்பாடுபட்ட அந்த வீரமாமுனிவருக்கு, சிலையடித்துச் சிறப்புச் செய்வதுபோக, அவரை உங்களது உள்ளத்திலே ஒரு கணமாவது நினைத்தீர்களா என்றுதான் கேட்கிறேன்.

மதுரை, கத்தோலிக்கு சேவா சங்கத்தின் ஆதரவில்

சுபானு-வூ புரட்டாசி-மீ 31-உ (17—10—1943) ல்

மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில் நடைபெற்ற

சுவாமி வீரமாமுனிவர் விழாவின்போது

மதுரை, குமரகவி மு. நாராயணசாமி பிள்ளை மகிழ்ந்து நிகழ்த்திய

# 'மாமுனிவர் மாண்பு'

எனும் சொற்பொழிவிற் கூறிய

## சிறப்புப் பாசுரம்

———:o:———

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

தன்மொழியே யறிந்துபிற மொழிபேணாத் தன்மையிலாத்
தகைமை யாளன்
பொன்மொழியாந் தமிழ்மொழியைப் புனிதவமு தெனவுணர்ந்த
புலவர் கோமான்
இன்மொழிதேம் பாவணியோ டரியசது ரகராதி
இலங்கு பன்னூல்
நன்மொழியோன் குருவீர மாமுனிவன் இயற்றியசீர்
நவிலொ ணாதே!

———

# வீரமாமுனிவரும் கவிவன்மையும்

ஆசிரியர் - எம். எஸ். சுந்தரேச ஐயர்,
ஆர். ஸி. போதனமுறைப் பாடசாலை, திண்டிவனம்.

*பாரமா தவத்துத் தூய பண்ணவன் சரித்தி ரத்தைச்
சாரமா யியற்றிக் கன்னித் தமிழணங் கினுக்கே யேற்ற
ஆரமா யிருக்கத் தேம்பா வணியினைத் தந்த அந்த
வீரமா முனிவர் கீர்த்தி விளங்குவ னறிந்தவாறே.

ஐரோப்பாவில், பண்டைக்காலத்தில் மிக பிரசித்தி பெற்றிருந்தது இத்தாலியைச் சேர்ந்த வெனிஸ் மாகாணம். 1680-ம் வருஷம் நவம்பர் மாதம் 8-ம் உ இதில் ஒரு பெரியார் தோன்றினர். அவர்தான் **கான்ஸ்டன்ஸியஸ் பேஸ்கி சுவாமிகள்.** பெஸ்கி என்பது குடும்பப் பெயர். Constans, Constantis-இவை இரண்டும் லத்தின் சொற்கள். ஆங்கிலத்தில் "Constant" என வந்துள்ளது. Steadfast, Resolute, Unshaken, Determined, Firm-என்று அது பொருள்படும். வீரம், தைரியம், வன்மை, உறுதி, வல்லபம், வல்லமை என்று அதனை மொழி பெயர்ப்பர். ஆகையினலே, இப்பெரியாருக்குத் **தைரியநாதரென்றும்,** வீரமா முனிவர் என்றும் தமிழில் பெயர் வழங்கலாயிற்று. வீரமாமுனிவரென்பதே எல்லோராலும் கொண்டாடப்படுவது.

## இந்தியாவுக்கு வந்தது

அறிஞர்களால் வகுக்கப்பட்டுள்ள இல்லற, துறவறங்களில் இவர் துறவறத்தைக் கைக்கொண்டனர். இளமையிலேயே சிறந்த கலா வல்லவராக விளங்கினர். சேசுசபைக் குருமடத்தில் 1698-ம் ஆண்டு தன் 18-ம் வயதில் சேர்ந்து தர்க்க சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், வேத சாஸ்திரம் முதலிய ஞான சாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றனர். லத்தீன், கிரேக்கம், ஆங்கிலம், பிரஞ்சு, போர்த்துகேசியம் முதலிய பாஷைகளில் சிறந்து விளங்கினர். பின்னர் 30-ம் வயதில் குருப்பட்டம் பெற்று இந்தியாவுக்கு வந்து, **மதுரைமா நகரை** அடைந்தார். அங்குத் தமிழ்ப் பாஷையின் நயம் அவரை உருகச்செய்தது. உடனே அப்பாஷையைத் தக்க ஆசிரியரிடம் கற்றுக்கொண்டதல்லாமல் வடமொழி தெலுங்கு, முதலிய பாஷைகளிலும் வல்லவரானர். அக்காலம் **சுப்பிரதீபகக் கவிராயர்** என்ற பெரும் புலவர் வசித்துவந்தார். அவர்தான் இவருக்குத் தமிழாசிரியராக இருந்தாரென்று தெரியவருகிறது.

## தமிழில் ஆராய்ச்சி

தமிழிலுள்ள பண்டைக் காவியங்களையெல்லாம் 25-வருஷ காலம் நன்கு ஆராய்ச்சி செய்தார். சங்க நூற்கள், பஞ்சகாவியங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலிய இலக்கிய நூல்களிலும், அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிலும் அறிவைச் செலுத்தி, அவற்றில் காணப்படும் நயங்களில் ஈடுபட்டுத் தனது வேலையிலும் ஊக்கம் குன்றாமல் செவ்வனே வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

* பாரமா தவத்துத் தூய பண்ணவன் = சூசைமாமுனிவர்.

## நூலாசிரிய ராதல்

முற்காலத்தில் அருமையான விஷயங்களெல்லாம் செய்யுள் வடிவமாகவே எழுதப்பட்டுவந்தன. வசன நடையில் எழுதப்படாமைக்குக் காரணம் அக்காலத்தில் வசதியின்மையேயாம். இவர் மேல்நாட்டார் முறையைப் பின்பற்றித் தமிழ்பாஷையில் வசன நடை எழுதலானார். பிங்கலந்தை, திவாகரம், நிகண்டு முதலிய நூற்களைத் துருவித் துருவி ஆராய்ந்து, ஆங்கிலம் முதலிய பாஷைகளில் "டிக்ஷ்னரி" இருப்பது போல் தமிழில் அகராதியொன்று இயற்றினார். பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்று நான்கு அரும் பிரிவுகளை அது உடைத்தாயிருக்கிறபடியால் "**சதுர அகராதி**" என்று அதற்குப் பெயர் கொடுத்தார்.

பெயரகராதிப் பிரித்துணர் வீராகில்
பயனுய்த் துணர்வீரே பாரீர்—நியமாகச்
சொன்னூற்கும் நன்னூற்கும் தொன்னூற்
கும் முன்னூற்கும்
பன்னூற்கும் ஓதும் பயன்.

* * *

தொடையகராதியுள் சொற்றவவை கற்கில்
அடிதொடை மோனை வழுவா—நொடியில்
கடகடெனச் சொல்லித் தடதடெனப் பேசி
படபடென வாசிப்பாய் பார்.

என்றிவ்வாறு, அவர் காலத்துப் புலவர்கள் இந்நூலைப் புகழ்ந்திருக்கின்றனர்.

## இவரியற்றிய நூற்கள்

இலக்கியத்தில் **தேம்பாவணியும்**, இலக்கணத்தில் **தொன்னூல் விளக்கமும்** மிகச் சிறந்தவை.

### தேம்பாவணி

கற்கண்டு, சர்க்கரை, தேன் இவ்வகளின் சுவையை அனுபவித்தே தெரிந்து கொள்ளவேண்டும். வாயினால் இவைகள் இனிப்பாயிருக்கும், இனிப்பாயிருக்கும் என்று சொன்னால் பயன்படாது. தேம்பாவணியின் சொல் நோக்கும், பொருள் நோக்கும், தொடை நோக்கும் அனுபவிப்பவர்களுக்கே மிகவும் இன்பத்தைக் கொடுக்குமென்பது அறிவுடையோர் கண்ட வுண்மை.

"It is the noblest pœm in honour of St. Joseph written in any literature East or West. In one of the most difficult languages of Southern India. **Rev. Fr. Beschi** produced a pœm which for richness and beauty of language, for easy elegance of metre, popular treatment, and true pœtical conception and execution is the peer of the native classics; in nobility of thought and subject-matter, it is as superior to them as the harmonious civilization of Christianity rises above the confused philosophical dreams and ridiculous fables of idolatry" என்றிவ்வாறு **Baumgartner** என்ற பெரியார் கூறுவதை நாம் கவனிக்கவேண்டும்.

தேம்பாவணி யென்பது வாடாத பூமாலை யென்று பொருள்படும். (தேம்பா = வாடாத; அணி = பூமாலை) இவ்வுண்மையை,

"காம்பாவணி காட்டிய கன்னி நலத்(து)
ஒப்பாவணி யிவ்வணி ஓர்ந்த பிரான்
நாம்பாவணி நம்பியை நல்கிடவோர்
தேம்பாவணி யாங்கொடி சேர்த்த னென்றார்."

ஷை நூல் திருமணப் படலம்.

இச்செய்யுள் மூலமாய் நாம் அறிந்து கொள்ளலாம். தேம் + பா + அணி என்றும் பிரிக்கலாம்.

தேம்பாவணி 36 படலங்களையும், 3,615 செய்யுட்களையும் கொண்டவொரு பெருங் காப்பியம். தேம்பாவணிச் சுவையூட்ட இரண்டொரு செய்யுட்கள் ஈண்டுக் காட்டுகின்றேன்.

அறக்கடல் நீயே; அருட்கடல் நீயே;
அருங்கருணைகரன் நீயே;
திறக்கடல் நீயே; திருக்கடல் நீயே;
திருந்துளம் ஒளிபடஞான
நிறக்கடல் நீயே; நிகர் கடந்துலகில்
நிலையும் நீ; உயிரும் நீ; நிலைநான்
பெறக்கடனீயே; தாயும் நீ; எனக்குப்
பிதாவும் நீ; அனைத்தும் நீ அன்றோ?

* * *

கார்த்திரள் மறையாக் கடலினுள் மூழ்காக்
கடையிலா தொளிர் பரஞ் சுடரே!
நீர்த்திரள் சுருட்டி மாறலையின்றி
நிலைபெறும் செல்வநற் கடலே!
போர்த்திரள் பொருதக் கதவிடா அரணே!
பூவனந் தாங்கிய பொறையே!
சூர்த்திரள் பயக்கும் நோய்த்திரள் துடைத்துத்
துகள் துடைத்துயிர்தரும் அமுதே!

இக்கடவுள் வாழ்த்தாகிய இரண்டு செய்யுட்களும் எவ்வளவு அழகாயிருக்கின்றன பாருங்கள். சொல்லணியும், பொருள் அணியும் மிகவும் போற்றற்குரியனவாயிருப்பதைக்கண்டு மகிழாதார் யாரோ?

"இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்பர் பெரியோர். துறவிகளாகிய ஞானிகள் எப்பொழுதும் தனித்திருத்தலையே விரும்புவர். உழை, குயில், வண்டு, ஞிமிறு, ஓதிமம், கொடி, அரி முதலிய சீவராசிகளை விளித்து, இது உண்மைதானா? சொல்லுங்கள் என்று ஆசிரியர் சித்திரித்திருக்கும் ஒரு கவியானது நம் கண்முன் புகைப்படம்போல் காண்பது, மனதிற்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கிறது. அச்செய்யுள் வருமாறு:—

"துள்ளிவாழ் உழைகாள் கொம்பில்துன்னிவாழ்
குயில் காள்! தாய் தேன்
அள்ளிவாழ் அளிகாள்! தேன்காள் அழல்
நிறக் கமலப் பைப்பூம்
பள்ளிவாழ் ஓதிமங்காள்! பறித்து வாழ்
கொடிகாள்! கோறல்
உள்ளிவாழ் அரிகாள்! சொன்மின் உயிர்
தனித்தலில் தீ துண்டோ?"

(உழை = மான்; அளி = வண்டு; தேன் = ஞிமிறு: பள்ளி = படுக்கை; ஓதிமம் = அன்னம்; கொடி = காகம்; கோறல் = அழித்தல், கொல்லுதல்; அரி = சிங்கம்)

**கலி விருத்தம்**

வெருள்த ருங்குரல் வெஞ்சின வேறுமிழ்ந்து
இருள்த ரும்புயல் பெய்தலில் எத்துவார்
மருள் தரும் புகர் மல்கினு மாறிவாப்
பொருள் தருங் கையைப் போற்றுவர் யாருமே.

* * *

வளர்ந்த பூங்கதிர் மாழ்கிய நெற்குயிர்
உளர்ந்த வான்புயல் ஊட்டிய நீரெனத்
தளர்ந்த வாழ்க்கையைத் தாங்கி இல்லோர்க்
கிடும்
கிளர்ந்த வான் கொடை கேழ்த்தெழும்
ஈகையே,

தக்க உபமானத்தால் ஈகைத்தன்மையை இச்செய்யுட்கள் விளக்குகின்றன.

கடவுள் வாழ்த்து, சதுர்வித புருஷார்த்தங்களையும் விளக்குதல், தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாதல், மலைவளம், கடல் வருணனை, நாட்டுப்படலம், நகரப் படலம், பருவ மாறுபாடு, சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், நிலாத்தோற்றம், திருமணம் புரிதல், பொன்முடி கவித்தல், பூம்பொழில் நுகர்தல், புனல் விளையாடல், தேம்பிழி மதுக்கனி சிறுவரைப் பெறுதல் முதலியன ஒரு பெருங் காப்பியத்தில் உறுப்புக்களாய் வரவேண்டிய இலக்கணமாகையால், இந்நூலில் ஆசிரியர் தக்க இடங்களில் அவைகளை

ஆங்காங்குக் கூறிப்போதல் தமிழ்ச்சுவை உடையார்க்கு நல்ல விருந்தாகும்.

சூழ்திரை உடுத்த பாரில்
  தோன்றிய நவத்தைக் காண்டற்கு
ஆழ்திரை விரைவில் நீக்க
  ஆதவன் கதித்துத் தூண்டும்
தாழ்திரை ஆழ்ந்த பாய் மரத்
  தழல்சினத் துயிர்த்த தென்னக்
கீழ்திரை கவிந்த வானம்
  கேழொளி சிவந்த தன்றே.

—ஐயந்தோற்றுப் படலம்

இதில் அருணோதயம் எவ்வாறு வருணிக்கப்பட்டிருக்கிறதென்று தமிழர்களாகிய நாம் கூர்ந்து கவனிக்கவேண்டியது.

### தொன்னூல் விளக்கம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் விளக்குவது இத்தொன்னூலாகிய பொன்னூல். நன்னூல், நேமிநாதம், இலக்கண விளக்கம், அகப்பொருள், புறப்பொருள், யாப்பருங்கலம், காரிகை தண்டி யலங்காரம், தொல்காப்பியம், பாட்டியல், செய்யுளியல், வீரசோழியம் இவை முதலிய இலக்கணச் சூத்திரங்களே மேற்கோளாகவும், குறள், நாலடி, சங்கச் செய்யுள், ஔவை வாக்கியம் இவை முதலிய இலக்கியச் செய்யுளே உதாரணமாகவுஞ் சேர்த்து, திரு மதுரை செந்தமிழ்த் தேசிகருந் தைரியநாத சுவாமிகளுமாகிய வீரமாமுனிவர் ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். (அதிசெய நாதப்பிள்ளை—தொன்னூல் விளக்கப் பதிப்பு-1838-ம் வருஷம்) இதிலிருந்து இந்நூலின் சிறப்பும், நூலாசிரியரது பெருந்தமிழ்ப் புலமையும் நன்கு அறியக் கிடக்கின்றன.

மேலைத் தேசத்து அறிஞர்கள் தமிழ்ப் பாஷையைக் கற்பதே அரிது. கற்று அப்பாஷையில் இலக்கியங்கள் எழுதுவது அதைவிட அரிது. அப்பாஷைக்கு இலக்கணம் இயற்றுவதென்றால் அதைவிட மிகவும் அரிதான காரியமாகும். இந்நூலிலுள்ள மொத்தச் சூத்திரங்கள் 829.

"சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச்
செவ்வனாடியிற் செறித்தினிது விளக்கித்
திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்"

இந்நூற் பாவில் கூறப்பட்டதுபோல், இவ்வாசிரியரது சூத்திரங்கள் அமைந்துள்ளனவென்பது படிப்போர்க்குத் தெற்றென விளங்கும்.

சொன்னூல் அடையாத் தொகைக்குணத் தொன்று
முன்னூல் தந்த முதல்வனைப் போற்றி
நன்னூல் ஆய்ந்தோர் நவின்ற ஐம்பொருள்
தொன்னூல் விளக்கமுன் சொற்றதும் எழுத்தே

*   *   *

முச்சயத் தொழிற் கொடு முச்சகம் தனித்தாள்
அச்சயன் அடிபணிந் தறைகுவன் சொல்லே.

*   *   *

மெய்ப்பொருள் பகாப்பொருள் வேத முதற் பொருள்
அப்பொருள் அகத்தணிந் தறைகுவல் பொருளே.

*   *   *

யாப்புற நலமெல்லாம் இணைந்தவோர் சட்குணன்
காப்புற அடிதொழீஇக் காட்டுதும் யாப்பே.

*   *   *

கலையணிச் செல்வன் கமலச் சேவடி
தலையணி புனைந்து சாற்றுதும் அணியே.

இச்சூத்திரங்கள் முறையே கடவுள் வாழ்த்தாக ஒவ்வோ ரதிகாரத்திலும் அமைந்துள்ளன. அதிகாரத்திற்குத் தகுந்த மாதிரிச் சூத்திரம் யாத்திருப்பது நமக்கு உவகையைத் தருகிறது.

தொன்னூ லகராதி தேம்பாவணி யென்னும்
முன்னூ லுங்கேளாச் செவிகட்கும் பன்னளும்
பாராத கண்கட்கும் பன்னாத நாவுக்கும்
வாரா தறிவொளிவு வாக்கு.

தருமப்பால் தேம்பாவணியாகச் சாற்றிப்
பொருளக ராதியாய்ப் பூட்டி—அருளின்பந்
தொன்னூல் விளக்கமாய்ச் சொற்றனர் முப்பாலும்
முன்னூலாய் வீர முனி

இந்த இரண்டு வெண்பாக்களும் நம்மவ ரால் படித்து இன்புறற்பாலன. பொருள் வெளிப்படை.

தொன்னூ லென்னும் இந்நூலுக்குக் கலைவல்லவர் "தெருட் குரு" என்னும் சிறந்த நாமஞ் சூட்டிப் போற்றி வந்தென ரென்பது கீழ்க்கண்ட கட்டளைக் கலித்து றையால் நாம் அறிகிறோம்.

அருட்கலை ஞோர்முத் தமிழ் நூல்
உரைத்த அறமுதனுற்
பொருட்களை ஆய்ந்துழி வல்லோர்
தெரித்த புதை பொருளின்
மருட்களை நூக்கிப் பொருட் பயன்
சூட்டி வழுத்துதலால்
தெருட் குரு நாமந்தொன் னூல்விளக்
கிற்குச் சிறந்ததுவே.

ஆகையால், இவ்வரிய நூலைத் தமிழுலகில் பரப்புவதற்கு அறிவுடையோர் முன்வருவாராக.

இன்னும் நம் தைரியநாத சுவாமிகள், திருக்காவலூர்க் கலம்பகம், அன்னை அழுங்கலந்தாதி, கித்தேரி அம்மாள் சரித்திரம், பரமார்த்த குரு கதை, வேத விளக்கம், வேதியரொழுக்கம் முதலிய நூற்களையும் இயற்றியுள்ளார்கள். அவற்றுள் கித்தேரி அம்மாள் சரித்திரம் (Kitteriammalle Saritiram) 1100 செய்யுட்களைக்கொண்டது. இதனைக் கித்தேரி அம்மானை யென்றும் கூறுவர். வேதசாட்சியாய் மரித்த St. Quiteria மீது பாடிய புகழ் நூலாகும் இது. சிலர் மயக்கத்தினால், இந்நூல் St. Catherine மீது இயற்றப்பட்டதென்பர். ஆராய்ச்சி செய்து உண்மையை அறிந்துகொள்வார்களாக. இவ்வாறு தம் வேலையிலும் தமிழ்ப் பாஷையிலும் சிறிதும் சோர்வின்றி உழைத்துவந்த இவர் 1744-ம் வருஷம், அம்பலக்காட்டுக் குரு மடத்தை விசாரிக்க அனுப்பப்பட்டார்.

தமிழ் நாட்டிற்கு வந்து, தமிழ்ப் பணியாற்றி, தமிழ்ப் பாஷையின் சிறப்பை, மேனாட்டாரும் வியந்து புகழும்படி செய்த இப்பெரியார் அம்பலக்காட்டுக் குரு மடத்தில் கி. பி. 1746-ம் ஆண்டில், பெப்ரவரி மீ 4-ம் உ தனது அறுபத்தாறுவது வயதில் பூதவுடம்பை நீத்துப் புகழுடம் பெய்தினர். இந்தியாவில் அவர் உழைத்தது 37 வருடங்கள்.

இவ்வளவு பேராற்றல் வாய்ந்த இவரது வாழ்க்கைச் சரித்திரத்தைத் தக்க ஆதாரங்களைக்கொண்டு விரிவாய்ப் புத்தக ரூபமாக எழுதி, பொதுவாக எல்லோருக்கும் சிறப்பாகத் தமிழர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் அறிவுடைய ஆராய்ச்சியாளர்கள் பயன் படுத்துவார்களேயானால், அது ஒப்புயர்வற்ற ஒரு பேருபகாரச் செயலாகுமென்பது திண்ணம்.

சீர்வீர மாமுனிவர் செப்பியமுன்' னூற்களையும்
ஓர்மோ உரைமோ வரைமோ இப்—பார் மீதில்
வந்திப்பாய் கைத்தவமே வாழ்த்துவாய் நாவகமே
சிந்திப்பாய் நெஞ்சே தினம்.

ஒரு கடவுள் மெய்யென் றுணர்ந்தேம் உலகில்
இருவினையின்பயனுங் கண்டேம்—திரிதமிழும்
தேர்ந்தேம் பொருள்நாற் றிறமுணர்ந்தேம் வீரமுனி
கூர்ந்தஜங் திலக்கணத்தைக் கொண்டு.

சுபம்.

# முனிவரின் தேம்பாவணி

A. ராமமூர்த்தி ராவ், பி.ஏ., பி.எல்., வக்கீல், தூத்துக்குடி.

தமிழன்னையின் தவப்புதல்வர் வீரமா முனிவர். கான்ஸ்டன்டின் ஜோஸப் பெஸ்கி என்பது இவரது இயற்பெயர். இத்தாலியாவில் பிறந்து வளர்ந்து கல்வி பயின்று தெளிந்த பின்னர் சமயத்தொண் டினை யவாவி இயேசு சபையிற் சேர்ந்துத் தொண்டாற்றுங்கால் சமய வளர்ச்சி உழைப்புக்காக இவர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். இந்தியாவில் தமிழ கத்தைத் தன்னகமாக்கிக்கொண்டு மது ரையில் வசித்துவரும்சமயம் தமிழ்மொழி யில் மிக்க ஆர்வம்கொண்டு தக்க ஆசிரி யர்பால் தென்மொழியைச் செவ்வனே கற்று செய்யுள் யாத்தலிலும் சமர்த்தரா னார். தாங் கற்றதோடு நில்லாது நாமின் புறுவது உலகின் புறக்காமுற்று தமிழில் நூற்கள் பல இயற்றினர். அடைக்கல மாலை, காவலூர்க் கலம்பகம், தேம்பா வணி முதலியவை இவரியற்றிய செய்யுள் நூல்கள். இவையன்றி வேதியரொழுக் கம், வேத விளக்கம், பரமார்த்த குரு கதை முதலிய உரை நடை நூல்களையும் சதுரகராதியும் இவரே தந்தவர். தொன் னூல் என்னும் அழகிய ஐந்திலக்கண நூலொன்றியற்றி அதற்கு உரையும் தானே தீட்டினர். தமிழன்னைக்கு இவர் செய்த தொண்டு என்றும் மறக்கற்பால தன்று. என்றுமுள தென்தமிழில் "தேம் பாவணி" என்னும் அழகிய நூலியற்றி இசை கொண்டார். "தேம்பாவணி" பெருங்காப்பிய நடையைப் பின்பற்றி யது. தாய்மொழியல்லாத பிறமொழி யொன்றைக் கற்றுத் தன் மேதையினுல் ஆக்கிய இந்நூல் தமிழ் மக்களனைவரும் படித்தின்புறவேண்டியவைகளுளொன்று.

அச்சுப் பிழைகளின்றி நல்ல பதிப்பாக இந்நூலிதுவரை எல்லார்க்கும் எளிதில் கிடைக்கும்வண்ணம் செய்யாத குறை தான் தமிழ்மக்கள் தேம்பாவணியின் அருமை பெருமைகளைத் தாமே வாசித் தின்புறுவதற்கு முடியாமற் போயிற்று. கற்றூர் சிலர் வாயிலாகவே கேட்டு இன் புற வேண்டுவதாயிற்று. "தேம்பாவணி" யில் கூறப்படும் சரிதமோ உலகனைத்தும் தன் வயத்தே ஈர்க்கும் தேவகுமாரனின் அவதார சரிதமும் அக்கால நிகழ்ச்சிக ளும், பார்புகழும் பாலஸ்தீனவில் பழி பிறங்காப் பண்புடை மக்கள் நோற்ற தவத்தால் தோன்றிச் சேணொளி விளங் கச் செந்நெறி பரப்பிச் சாந்தவதார சத் திய சீலனுய்த் திகழ்ந்த புனித மூர்த்தியின் திருநாமம் எவர் உள் ளத்தைத்தான் மகிழ்விக்காது? எச் சமய நூலுக்கும் தமிழ் மொழி தகவு டன் இடந்தரும் என்பதை வெளிப்படுத் தியதோடு தமிழ் மொழியிடத்துத் தனக் குள்ள தனிப் பெருமார்வத்தையும் வீர மாமுனிவர் தமது நூலிற் காட்டியுள்ளார். கற்பனைக் கதையன்றி உண்மை நிகழ்ச்சி களிலிருந்து காவியமியற்ற முயலும் எப் புலவனுக்கும் தவிர்க்க முடியாத தளைகள் பல உண்டு. அவைகள் பலவிருந்தும் வீரமாமுனிவர் தம் அரிய புலமையைத் தமிழ் நாட்டுக்குத் தந்துள்ளார். தான் நூற்கும் மொழியில் முன் பெருங் காப்பி யங்கள் செய்த புலவர் பெருமக்களின் செய்யுட்களை நுண்ணறிவினல் நுகர்ந்த பண்பு தோன்ற அவரது சொற்களையும் கருத்துக்களையும் பொன்னேபோல் போற்றி வீரமாமுனிவர் தமது காவியத்

திடையிடை தேம்பா அணிகளாய் வைத்திருக்கின்றார்.

வீரமாமுனிவருக்குத் தமிழ் நாடு மிகவும் கடமைப்பட்டுள்ளது. கிறிஸ்தவ சகோதரர்களுக்கு மட்டும்தான் "தேம்பாவணி" உரியதென்று கருதிவிடக்கூடாது. தமிழ் வல்லாரனைவருக்குமே உரியதாகு மிந்நூலை விரைவில் நல்ல பதிப்பாக அடக்க விலைக்கு வழங்க வேண்டிய பொறுப்பு பொதுவாகத் தமிழர்களிடமும் சிறப்பாகக் கிறிஸ்துவ சகோதரர்களிடமும் உண்டு என்பதை நாம் உணர வேண்டியது.

## II

உலகில் இலக்கிய வளம் நிரம்பிய பண்டைய மொழிகளுளொன்றாகிய தமிழிற் சிறந்தெழுந்த நூற்கள் பல. அவைகள் இயற்கை வனப்பு, மக்கள் வாழ்க்கை, நாகரிகத்தின் ஏற்றம், ஆன்ம உணர்ச்சி, சமயப் பற்று முதலிய அங்கங்களைக் கொண்டு கற்பாரும் கேட்பாரும் மகிழும் பான்மையுடையனவாய்த் திகழ்கின்றன. இந்தியநாட்டில் பண்டைக்காலந்தொட்டு வழங்கிவந்த சமய நெறிகளின் உணர்ச்சியையே பெரும்பாலும் இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டன. பின்னர் பல் மதங்கள் பரவி வருங்கால் தமிழ் மக்களிடையும் அவைகள் வேரூன்றின. அவர்களிற் சிலர் உயிரினும் இனிய தமது தாய் மொழியில், பரவும் மத நூல்களில்லாமைக்கு வருந்த வேண்டுவதாயிற்று. பண் கனிந்த சொற்களால் மதுரச் செந்தமிழமைவுடன் பாடும் புலவோர்கள் முந்தைய முறையினின்றும் வழுவத் தயங்கினார்கள். எனவே புது மணம் விரித்து மக்கள் உள்ளத்தை மலரும் மதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட நூல்கள் தேவை என்ற ஆர்வமிருப்பினும் தமிழிலக்கிங்களாக்குவதற்குப் போதிய வசதியின்றியிருந்தது. மற்றும் கருத்துக்கள், தெளிவும், முதிர்வும்பட, பிறமொழி நுண்ணுணர்வும் அவசியமாயிருந்தது. இவ்வாறிருக்கும் சந்தர்ப்பத்தில்தான் பிறமொழிகளில் தலைசிறந்த அறிவுடன் பணியிறைவற்கு ஆற்றுமார்வத்துடன் வீரமாமுனிவர் தண்டமிழ் நாட்டிடை வந்து தங்கினார். தங்கிச் சின்னாளில் தமிழ் இலக்கிய இலக்கண நூற்களைத் தக்கார்பால் கேட்டுத்தெளிந்து தேர்ச்சியுற்றதோடு தமிழர் நாகரிகத்தையும் விரும்பியேற்று அம்மொழியிலேயே காவியச் சுவையும், கவியின்பமும் நிறைந்த "தேம்பாவணி" யை இறைவற்கே அடியுறையாக்கிச் சமயமக்களின் குறையை நீக்கினார். இவரது நூலைப் பயிலுங்கால் தன்னேரிலாத தலைசிறந்த தமிழ் காவியங்களைத் தன்னகத்தேயடக்கிக் நான்முறை வழுவாது தொல்லோர் களியற்றியதுபோலவே தன்னருங் கருத்துக்களைப் பொற் றகட்டிடையே வயிர மணிகள் போலொளிரக்குயிற்றிருப்பதைக் காண்கின்றோம். இவரது நூலிற் பெரும்பாலும் திருக்குறள், சிந்தாமணி, சிலப்பதிகாரம், இராமாயணம் முதலிய மதுர நூற்களின் ஓசை, உவமை, அணி, கருத்து, சொற்றொடர்கள் முதலிய வற்றை பலவிடங்களில் நினைப்பூட்டி மகிழ்விக்கச் செய்யும் பழுத்த தமிழ்ப் புலமை காணப்படுகின்றது.

## III

" பைந்நாகப் பள்ளிமணி வண்ணனிற் பாயல் கொண்டு
கைந்நாகந்துஞ்சுங் கமழ்காந்தளஞ்சாரல் போகி
மைந்நாக வேலிமலி பல்லவதேய நண்ணிக்
கொய்ந்நாகச் சோலைக் கொடியந்நகர் புக்கவாறும்."

(சிந்தாமணி.)

மைந்நாக மென்னவந்த குன்றையு மரபினெய்திக்
கைந்நாக மனையோனுற்ற துணர்த்தினன் கணத்தின்காலை
பைந்நாக மென்ன வீரர்தன் நெடுவரவு பார்க்குங்
கொய்ந்நாக நறுந்தேன் சிந்துங் குன்றிடைக் குதியுங் கொண்டான்.

(கம்பர்.)

பைநாக மெனப் பலமின்ன லெழிஇக்
கைநாக மெனக் கடிதார்த்து நிறை
பெய்நாகமெனப் பிதிர்வந் தனைகன்
மைநாக மெனவுரு கோமன நாம்.

(தே. காட்சி பா. 63, பக்கம் 364.)

"தேம்பாவணி" ச்செய்யுளில் காணும் சொற்களும் நடையும் சிந்தாமணி, இராமாயண கவிகளின் போக்கைத் தழுவியமைந்துள்ளன. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்னும் அரிய தமிழ் நூலொன்றுளது. அதில் கதா நாயகனாகிய கோவலன் கண்ணகியுடன் பாண்டிய நாட்டுத் தலை நகரான மதுரைக்கு வருகின்றான். அந்நகரின் கொடிகள் அசைந்தாடுகின்றன. அதை வருணித்த ஆசிரியர் வருமிருவர்களை நோக்கி " ஈண்டு தீங்குளது இங்கு வராதீர்கள் என்று கைமறிப்பதுபோன்ற " எனச்சுவையுடன் கூறினர். இராமாயணத்திலும் ஒரு நகரத்துக்குட்புகும் சந்தர்ப்பம். அந்நகர் கொடிகளும் ஆடுகின்றன. கதா நாயகி இருக்கும் நகரமானதால் 'சீக்கிரம் வா' என்று கதா நாயகனை அந்நகர் கொடிகளாகிய கைகளினால் கை நீட்டி அழைப்பது போலிருந்ததெனக் கம்பரும் தமது காவியத்தில் வருணித்தார். இவ்விரு செய்யுட்களின் நயங்களையும் ஒருங்குணர்ந்த 'தேம்பாவணி' ஆசிரியர் தன்மதி நலத்தால் அழகிய கற்பனையொன்று செய்வதை மகனேர்ந்த படலத்தில் காணலாம். எருசலேம் நகரம். நகரக் கொடிகளுடன் தேவாலயப் பெருங் கொடியும் ஆடுகின்றது. பூங்கொடியேந்திய சூசையும், தூய கன்னித்தாயும் தேவகுமாரனுடன் மதிலருகே வந்து நகரத்தை நோக்குகின்றார்கள். கொடிகள் அசைகின்றன. ஆசிரியருக்கு நல்ல சந்தர்ப்பம். நகரத்துக்கொடிகள் அசைவது " இவ்வூர் அரசன் தீய குணத்தவன்; சாதுக்களாகிய உங்களுக்கு தீங்கு ஏற்படலாம், வேண்டாம் ; உள்ளே வராதீர்கள்," என்று எச்சரிக்கை செய்து

மறிப்பது போலிருந்ததாம். இக்கொடிகளெல்லாவற்றிற்கும் மேலோங்கி நிற்கும் ஆலயத்துப் பெருங்கொடி நகரக் கொடிகளைப் பார்த்து "பயப்படாதீர்கள்! நீங்கள் அவ்விதம் நினைப்பது சரியல்ல; நமது துன்பமனைத்தையும் தீர்த்து அருள்புரியும் வேத நாயகன் வருகின்றான்," என்று உண்மையறிவித்து கையமர்த்துவதுபோல் இருந்ததென அமைத்த கற்பனை முத்தமிழ் முறைபோகிய உத்தமக் கவிஞர்கட்கு என்றும் திகட்டாத நல்விருந்து.

அல்லு மிழிருளினிருண்ட நெஞ்சவன் செய்யரந்தையின் வெவ்வழலாற்ற
வில்லுமிழ்பசும் பொன் மாடங்கணெற்றி விரித்த பூங்கொடி கடம் மீட்ட
மெல்லுமிழ் மூவர் வருவ கண்டரசனியற்றிய வஞ்சனைக்கஞ்சி
நில்லுமினின் மினென விடைவிடாது நீண்டகை காட்டுவபோன்றே.

(தே. மகனேர்ந்த. பா. 59, ப. 400.)

மண்புடைவான மன்னனை வணங்கி வளம்பெறும் பசிய பொற்கோயில்
விண்புடை தீண்டி மின்மணிக் கோட்டின் மீதொளிர் பதாகை நின்றுட
லொன்புடைக் கொடிகாணில்லுமினின் மினுயிரடுந்துயரற வந்த
வெண்புடை காக்குமருட் புரிநாதனிவனெனவமர்த்திடல் போன்றே.

(தே. மகனேர்ந்த. பா. 60, ப. 400.)

## IV

தீஞ்சுவைக் காவியங்கள் பல பாடிய செந்நாப் புலவோரும் தங்கள் நூற்களுள் வள்ளுவர் குறட்பாக்களைச் சுருக்கியும், விரித்தும், முற்றுமே பெயர்த்தமைத்தும் குறட் கருத்துக்களின் மாட்சியைப் போற்றிவந்துள்ளார்கள். தேம்பாவணியிலும் ஏற்ற விடங்களில் அளவுதெரிந்து சுவை·குன்றாது நயம் தோன்றச் சுருக்கியும் விரித்தும் குறட்பாக்களின் கருத்துகள் போற்றப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சில கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் நயங்கள் ஊன்றி உணரத் தக்கவை.

அன்பு வாய்ந்தவுயிர்நிலை யஃதிலார்க்
கென்பு தோலுடல் போர்த்த" (தே. பா. மா. பா. 65, ப. 152.)

இதனைப் படிக்குங்கால்

அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்ற திருக்குறளடிகள் நினைவுக்கு வருகின்றது.

பளிங்கடுத்தவற்றைக் காட்டும் பான்மையாலிவள் முகத்தி
னுளங்கடுத்தவற்றை யோர்ந்த கபிரியேலுறுதி சொல்வான்

(தே. ஐயந்தோற்று, பா. 9, ப. 216.)

என்பதிலும் "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்னும் குறள் வெண்பாவின் கருத்தும் சொற்களும் ஒலிப்பது காணலாம்.

"உழுதுண்பாருயிர் வாழ்பவர் மற்றெலாந்
தொழுதுண்பார்" (தே. மகிழ்வினை. பா. 36. ப. 278.)

என்பதில் திருக்குறள் கருத்தினை எவ்வாறு வீரமாமுனிவர் கொண்டு உபயோகிக்கின்றார் என்பதும் தெரியலாகும்.

"நிலத்தியல் பாற்றுளி நன்னீர் திரிந்த தோற்ற நிகரெனச்சேர்
குலத்தியல்பாற் கிழமைநிலை திரிகு" மென்றார்.
(தே. மகவருள். பா. 73, ப. 323.)

என்னும் தேம்பாவணிப் பாட்டில் "நிலத் தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க் கினத்தியல்பதாகுமறிவு" என்ற குறட் கருத்து தொனிக்கின்றது. "நுனிக் கொம் பரேறினார் அஃதிறந்தூக்கின் உயிர்க்கிறுதியாய் விடும்" என்ற குறளின் கருத்தைச் சுருக்கமாய்

"நுனிக் கொம்பினு மூக்கினர் நொந்திறப்பார்"
(தே. மகிழ்வினை. பா. 27, ப. 276.)

எனக் கூறியுள்ளமையைக் காண்க.

பூரியர் கணுமுள பொருள்செய் செல்வநீத்
தாரியர் விரும்பிய வருளின் செல்வமாய்ச்
(தே. மகவருள். பா. 79, ப. 324.)

என்பது "அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள" என்னும் குறள்வெண்பாவைத் தழுவியிருப்பது நன்கு புலனும். இது போன்ற எண்ணிறந்த குறட் கருத்துக்களைத் தழுவியுள்ள செய்யுட்கள் பல தேம்பாவணி நூலினுள் காணலாம்.

## V

இரவில் சந்திரனும், மற்றுமொன்று பலவாயிரமாய் வானத்திலொளி பரப்பும் நட்சத்திரங்கள், கிரகமண்டலங்கள் பிரகாசிக்கின்றன. காலையில் கதிரவன் உதித்து செங்கதிர் கிரணங்கள் பரப்பி வானில் ஒளி வீசுங்கால் நமக்கு இரவில் பேரொளி காட்டிய பல் சோதிகளும் கண்ணுக்குப் புலப்படவில்லை. தனித் தனி ஏற்ற இடத்தில் ஒளி வீசிப் பரவும் வன்மை அவைகளிடத்தே அமைந்திருந்தபோதினும் பகலவன் விரிசோதியில் அவைகளின் தன்னொளி பிரகாசியாமல் ஒடுங்குகின்றன. பின் பகலவன் மறைந்த பின்பே தன்னொளி வீசி அதே இடத்தில் நமக்குக் காட்சியளிக்கின்றன. இவ்வண்ணமே தமிழ் இலக்கிய வானமும். நூல்களியற்றி ஒளிபரப்பும் எண்ணிறந்த விண்மீன்கள் போன்றவர் புலவர்கள்.

இப்புலவர்கள் தனித்தனி நிலையில் மிளிரும் பெருமக்கள். தமிழிலக்கிய வானத்தில் சூரியன் உதித்தான். கல்வியிற் பெரியவன் கம்பன் என்ற புகழ்கொண்ட புலவனே அச் சூரியன். முன்தோன்றிய கவிஞர் மரபின் ஒளியனைத்தும் தன்னொளியில் அடங்கும்வண்ணம் புகழ்க் கம்பன் விளங்கினான். 'இரவி என்பான்றன் புகழ்க்கற்றை மற்றையொளிகளைத் தவிர்க்குமாபோல் மன்புகழ்ப் பெருமைக் கவிஞர் மரபினோர் புகழையெல்லாம் தன் புகழாக்கிக்கொண்ட கம்பனது தனிப் பெருங்காப்பிய நடையை மிக நுண்ணிதாக ஆய்ந்துள்ள வன்மையைத் தேம்பாவணி ஆசிரியர் பயன்படுத்திக் கொண்ட பான்மை கற்றோர்க்கெளிதில் புலப்படும். சூரியனது கிரணவொளியில் மற்றையவையடங்குமாப்போல், கலை வளம் செறிந்த கவினிய கவிதை புனைந்த கம்பனும் திருக்குறள், சிந்தாமணி, சிலப்பதிகாரம், சங்க நூல்கள், தந்த கற்பகக் கவிஞர்களின் போக்கையும் சொற்றொடர்களையும் தன்வயமாக்கிக் கற்றோரிதயங் களிக்கும்வண்ணம் தனது காவியத்தில் அடக்கியுள்ளான். மதுரித்தனுதெழுஞ் சொற்களால் தீஞ்சுவைக் காவியம் தீட்டிப் புகழ்கொண்ட வீரமாமுனிவரும் அம்முறையைப் பின்பற்றிப் போற்றியுள்ளார். எண்ணிறந்தனவான பகுதிகளிலிருந்து ஒப்பு காணலாமெனினும் விரிவஞ்சிச் சிலமட்டும் குறிப்பாக எடுத்துக்காட்ட முயல்கின்றேன். பொதுவாகத் தமிழ்ப் பேரிலக்கியங்களில் பாயிரம், ஆறு, நாடு, நகரம், இரை மாட்சி என்னும் பகுதிகள் முறையே வகுத்துள்ளமை காணலாகும். பெரும்பாலும் ஒத்த கருத்துக்களையே சிற்சில பேதங்களுடன் இப்பகுதியில் பாடி முடிப்பது கவிஞர்கள் மரபு. கம்பரின் போக்கைத் 'தேம்பாவணி' தழுவி நிற்பதைப் பல பகுதிகளிலும் காணலாம்.

> சூசை யுற்றன வரங்கட்டுயக் கடல் கடக்கவில்லா
> லோசை யுற்றெழுக மிர்தமுடை கடலென்ன நண்ணிப்
> பூசை யுற்றதனை நக்கப் புக்கெனவுளத்தைத் தூண்டு
> மாசை யுற்றாமனேனு மருங்கதையறையலுற்றேன்
>
> (தே-பாயிரம் பா. 4 பக்கம் 20)

மேலே கண்ட செய்யுள் கம்பர் பாயிரத்தில்

> ஓசை பெற்(று) உயர் பாற்கடல் உற்றொரு
> பூசை முற்றவும் நக்குபு புக்கென
> ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக்
> காசில் கொற்றத் திராமன்கதை யரோ.
>
> (கம்பர் காவியம்)

என்ற செய்யுளைத் தழுவி நிற்பதைத் தெளியலாம். ஓசையும் சொற்றொடர்களும் இன்பம் தருகின்றன. கம்பன் நாட்டுப் படலத்தில் "மூங்கையான் பேசலுற்றானென யானும் மொழியலுற்றேன்" என்பதையும் இதனோடு சேர்த்துச் சிந்திக்கத்தக்கது. மற்றும் "செவ்விய மதுரஞ் சேர்ந்த சீரிய கூரிய தீஞ்சொல்வவ்

விய கவிஞரனைவரும் புகழ்ந்தது வரம்பில்" என்று கம்பர் அயோத்தியைச் சிறப்பித்ததுபோலவே ஈண்டும் "செவ்விய மதுரச் சொல்லாற் சீரிய காட்சியோடும்" என்று தேம்பாவணி நகரப் படலத்தில் கூறியுள்ளதும் நோக்கத்தக்கது.

தெள்வாருரை முகிலுங்கட றிரையுங் கெடமுகியா
வள்வார் முரசதிர் மாநகர் வயின் வாழ்பவர் கொடையைக்
கொள்வாரில குறையல்லது குறையில்லது மெனவே
கள்வாரில கடையாரில கழிவாரில நயவார்.

(தேம்பா-நகரப் படலம் பா. 64 ப. 91)

என்று எருசேலம் நகர் மாட்சியைப்புகழும் கவியால் கம்பரது பின்வரும் கவி வீரமாமுனிவரின் உள்ளத்தை எவ்வாறு ஈர்த்துள்ளதென்பது தெரியவரும்.

தெள்வார் மழையும் திரை ஆழியும் உட்க, நாளும்
வள்வார் முரசம் அதிர்மா நகர் வாழும் மாக்கள்,
கள்வார் இலாமல் பொருள் காவலும் இல்லை யாதும்
கொள்வார் இலாமல் கொடுப்பார்களும் இல்லை மாதோ.

(கம்பர் காவியம்)

பின்னர்,

அவ்விய மொழித்த ருளளிக்குமா மறை
திவ்விய மதுர நூல் செப்புஞ் சாலையும்
நவ்விய வுணர்வுறி யெவையு நாடியுள்
வவ்விய பலகலை வகுக்குஞ் சாலையும்.

(தே. நகர-பா. 33 பக்கம் 76)

என்று காணும் செய்யுளும் கம்பரின் கவிதையில்

உன்னரும் அருமறை யோது மண்டபம்
பன்னரும் கலைதெரி பட்டி மண்டபம்

(கம்பர் காவியம்)

என்று காணும் பாடலையும் ஒப்புநோக்கலாம். கம்பரது கருத்தைச் சிறிது விரித்துணர்த்தியுள்ளமை புலப்படும்.

என்று பெய்மாரியா லெழுந்த வெள்ளமாய்ச்
சென்று மொய்வேலை மேற்றிரண்டவாறு போற்

(தே. 5 ; பா. 53; பக்கம் 167)

என்னும் அடிகளும்

பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய்கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்

(கம்பர் காவியம்)

என்று வரும் கம்பரது அடிகளை நினைப்பூட்டுகின்றன.

# THE MADURA-RAMNAD
# CENTRAL CO-OPERATIVE BANK LTD., No. 975

**(Registered under India Act II of 1912)**

NORTH VELI STREET, MADURA.

**ESTABLISHED IN 1912**

*BRANCHES:*

**At KARAIKUDI, North Kallukatty Street.** —— **At THENI, Bazaar Road.** ——



மதுரை-இராமநாதபுரம் செண்ட்ரல் கோவாப்ரேடிவ் பாங்கு புதுக்கட்டிடம்

(மதுரை கோவாப்ரேடிவ் லேபர் சொசைட்டியால் கட்டப்பட்டது)

நமது பாங்கில் கீழ்கண்டபடி வட்டி கொடுக்கப்படும்:

பிக்சட் டிபாசிட்டுகள் :—ஆறு மாதத்திற்கு 2½ % சத விகிதம்; ஒரு வருஷத்திற்கு 2¾ % சத விகிதம்,
இரண்டு வருஷங்களுக்கும் அதற்கு மேலும் 3% சத விகிதம்.

சேவிங்ஸ் டிபாசிட்டுகள் :—1½ % சத விகிதம்

எல்லா பாங்கு அலுவல்களும் நடத்தப்படும்.

**V. அழகப்பன், B.A., B.L., காரியதரிசி.**

*The Question of*




Unlike advanced mathematical propositions, it is comparatively easy to solve the question of financial stability. The formula is simplicity itself. Add thrift to forethought and tenacity of purpose to sytematic saving—and the total amounts to monetary independence, security and peace of mind. The Palai Central Bank offers special facilities to the small investor. Details will be furnished on request.

●

**PALAI CENTRAL BANK Ltd.,**

**(Incorporated in Travancore with Liability of Members Limited.)**

**PALAI, TRAVANCORE.**

சிற்சில விடங்களில் தேம்பாவணிச் செய்யுளடிகள் தாமே கம்பரது பாட்டை எண்ணச் செய்கின்றன.

புண்காத்த மருந்தன்ன பொலியருட் சேர் மாதவனும்
விண்காத்த வேந்தனைச் சூல் வேய்ந்நோவ்வாக் கன்னிகையும்
மண்காத்த வருள் பரப்பி வழிவருங்கால் வளைத்திவரைக்
கண்காத்த நிமையென்னக் காத்தாரக் ககனத்தார்.

(தே. மகவருள்படலம் பா. 19 ப. 309)

என்னும் செய்யுள் கம்பரது பின்வரும் செய்யுளைத்தானே ஒலிக்கச் செய்கின்றதல்லவா?

எண்ணுதற்(கு) ஆக்(க) அரி(து) இரண்டு மூன்று நாள்
விண்ணவர்க்(கு) ஆக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையின் காத்தனர்.

(கம்பர் காவியம்)

இனிக் கம்பர் எடுத்தாண்ட சந்தங்களைத் தேம்பாவணியில் திறம்பட வகுத்துக் கொண்ட தன்மை பின்வருஞ் செய்யுட்களால் எளிதிலுணரலாகும்.

ஒண்டலங்க எண்டவும் பருந்தொழும் பராபரா
விண்டலங் கலந்திலங்கு வெண்களங்க னெப்பெனு
மண்டலங்க ளெங்கும் யாரும் வாழ விரவெண்குடை
கொண்டலங்கல் கொண்டதேறல் கொண்டவன்பு கொற்றவா.

(தே. காட்சிப்படலம், பா. 6 ப. 345)

பொய்யா விதியோய் பொருவாவருளோ
யுய்யாவுல கென்னி லுனக் கிழிவோ
வய்யா பயனிற் கிதனுகுவதோ
கொய்யா வலியே குறையாத் திருவே.

(தே. காட்சி-பா. 69 ப. 365)

கம்பரது பின்வரும் கவிகளிலமைந்த சந்தம் இவைகளிலுமமைந்து செவிக்கினிமை பயப்பதை நன்குணரலாகும்.

விண்டலங் கலந்திலங்கு திங்களோடு மீதுசூழ்
வண்டலம் பலங்கல் தங்கு பங்கியோடும் வார்சிலைக்
கொண்ட லொன்றிரண்டு கண்ணின் மொண்டு கொண்டென்னுவியை
உண்ட துண்டென் னெஞ்சினின்று முண்டதென்று முண்டரோ.

(கம்பர் காவியம்)

மற்றையது கம்பர் காவியச் சுந்தரகாண்டத்து உருக்காட்டு படலத்தில் கதாநாயகியின் தனி மொழியில் வருஞ் செய்யுட்களைத் தழுவியுள்ளது. மற்றும்,

தண்டலேயகத்து விள்ளுந் நாதினுநொய்தாணியுங்
கண்டக மகத் தென்னெடு துணைவரக் கருதலாமோ.

(தே. மகவருள் பா. 7 ப. 30)

என்று கன்னிமரியாளிடம் சூசை வினயமாய்க் கூறும் தன்மை கம்பர் காவியத்தில் கதாநாயகன் கதாநாயகியைப்பார்த்து

கல்அ ரக்கும் கடுமைய அல்லநின்
சில்அ ரக்குண்ட சேவடிப் போதென்ருன்

(கம்பர் காவியம்)

என்று கூறும் அடிகளைச் சிந்திக்கச் செய்கின்றது. முரட்டுத்தனமாய் வரா்தே என்னுது பெண்களிடம் சாதுர்யமாய்ப் புகழ்ந்து அன்பும் அருளும் ததும்ப நெகிழ்வுடன் எளிய சொற்களால் பெண்களிடம் ஆடவர்கள் பேசவேண்டிய முறையைக் குறிப்பதுபோல் இரு கவிஞர்களும் நயம்படக் கூறியது நோக்கத்தக்கது. பெருங் கவிஞரிடத்து சொற்கள் தயங்காது மனுேபாவத்திற்கேற்ப, லாகவத்துடன் விரைவுங் காட்டி வாசகர்கள் மனத்தைக் களிகூறச் செய்வநியற்கை. அம்மாதிரி சந்தர்ப்பங்கள் தேம்பாவணியிலும் காணலாம். உதாரணமாக கோளரி போன்ற இளந்தாவிதன் தோள் வலிமிக்கவாளரக்கன் கோலியாத்தை எளிதில் இறையருளால் விரைவில் வென்றமையை

கல்லே யேற்றலுங் கவணினேச் சுழற்றலுமக்கல்
லொல்லே யோட்டலு மொருவருங் காண்கிலரிடிக்குஞ்
செல்லே யொத்தன சிலேநுதற்பாய்தலு மன்னு
னெல்லே பாய்ந்திருளிரிந்தென விழ்தலுங் கண்டார்.

(தே. வளன்சனி. பா. 29. ப. 108)

"காண்கிலர்" "கண்டார்" என சமர்த்தித்துச் சொல்லழகும் விரைவும் காட்டி மனக் கண்முன் நேரில் காண்பதுபோல் வீரமாமுனிவர் சித்திரிக்கும் காட்சி மிகவும் ருசிக்கத்தக்கது. கம்பர் காவியத்திலும் கதாநாயகன் வில்லே வளேக்குங்கால் தடுத்திமையாலிரிந்தவர் தாளின் மடுத்ததும் நாண் நுதிவைத்ததும் யாரும் கடுப்பினில் அறியார் கையால் வில்லே எடுத்தது கண்டார். இற்றது கேட்டார் என்று விரைவும், லாகவமும் தோன்ற நயம் படக்கூறியதோடு இதனேயும் ஒப்புக் காண்க.

## VI

தேம்பாவணி ஆசிரியரது ஒலிச் சித்திரங்கள் நயக்கற் பாலன. நாட்டுப் படலத்தில் சோலேவர்ணனே பல புள்ளினங்களும் மயில்களும் சேர்ந்து எழுப்பும் ஒலம், பல் வகுப்புகளடங்கிய பள்ளிக்கூடத்தில் சிறு மாணவர்கள் வாசித்து சந்தையிடுங்கால் எழும் இரைச்சலே ஒத்துளது. இதனே

கரு கருவென வொர்பால் காடைப் புள்ளினம்
ஞரு ஞருவென வொர்பா னயந்த தோகைகள்
புரு குருவுதலொடு புள்பல் லோதையா
லரு துரு வுணர்வுகு மரங்கஞ் சோலையே"

(தே. நாட்டுப்படலம் பா. 45 ப. 45)

என்று ஏற்ற சொற்களாலமைந்த சப்த சித்திரத்தின் இனிமை செவிக்கின்பம். வீரமாமுனிவர் தன் நுண்ணுணர்வில் எழுந்த பல கருத்துக்களை யேற்ற இடங்களில் அழகுறப் பொதிந்து வைத்துள்ளமை தேம்பாவணியில் பரக்கக் காணலாம். உயர்ச்சி, தாழ்ச்சி பாராட்டாது யாவர்க்கும் இன்புசெய்து அன்புருவாய் சூசையும் மரியாளும் வாழ்க்கையில் உலகோடு உலவிய தன்மை எத்தன்மையதென வுணர்த்த வந்த கவிஞர்

தாழுபான்மையோ தகவுடை பாள்மையோ வென்னச்
சூழும் யாரையுஞ் சூழ்ந்து சூழ்வரு நயஞ் செய்வார்
கீழு மேலுமென் றுணர்கிலா துறுப்பெலாங் கிளர்ப்ப
வாழுமே யுயிர் மலிந்துட லுலவிய போன்றே

(தே. ஈரம்பொருத்து பா. 59 ப. 209)

என்று நயம் தோன்றக் கூறினர். இச் செய்யுளில் பொதிந்த கருத்தழகு கற்றோர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் பல் தரப்பட்ட உறுப்புகளமைந்தது யாக்கை. அருமருந்தன்ன நின்ற உயிர் யாக்கையுள் எங்கும் நிறைந்துலவுகின்றது. கீழ் மேல் என்று எவ்வித வித்தியாசமும் பாராட்டாது உச்சிமுதல் உள்ளங்கால் வரை நீக்கமற நிறைந்து நிற்கும் உயிர் போல் சூசையும் மரியாளும் உலகமக்கட் தொகுதியாகிய யாக்கையுள் உலவி இன்பு செய்தனர் என்பது மிகப் பொருத்தமுள்ளது. 'ஓதிய உடம்புதோறும் உயிரென உலாய தென்னும் உவமையின் பொருத்தமும், அழகும், பிரியமும், சகோதரப் பான்மையும் ஊன்றிச் சிந்திக்க சிந்திக்க ஆழ்ந்த கருத்துக்கள் ஊறும் தன்மை இச் செய்யுளை நவில்தொறும் உணரலாம். இன்னும் நாள்தோறும் நாம் காண்பனவற்றை வைத்துக் கவிக் கண்ணால் உயர்ந்த கருத்துக்கள் கற்பித்து இனிமை நிறைந்த எளிய சொற்களால் பசுமரத்தாணிபோல் நம் நெஞ்சில் பதியவைக்குந் தன்மையையும் பல செய்யுட்களில் காண்கின்றோம். உதாரணமாக காயாத அஃதாவது பிறர்க்குப் பயன்படாத மரத்திலுள்ள கிளை நிமிரும். காய்கள் காய்த்துள்ள கிளைகள் நிமிராது; வளைந்து நிற்கும். அதேபோல் செல்வச் செருக்கால் உலோபியராகிய தீயார் நிமிர்ந்து நிற்பார். காய்த்துப் பயன் படும் மரக் கொப்பு வளைந்திருப்பது போலவே பிறர்க்குரிய பெருந்தகையாளராய தெருட்சியுடைய மேலவர் இறுமாந்து தலை தூக்காது அடக்கமுடன் வணங்கிய சென்னியராய் இருப்பர். வளையாத வில்லில் தொடுத்த அம்பும் குறியை அடையாது பயனற்றதாகும். வளைந்தால்தான் காரியத்தைச் சாதிக்கும் தன்மை வில்லினிடத்தே உண்டாகின்றது. வளையாதவரை வில்லும் பயனற்றதே. வீசுங் காற்றை எதிர்க்காமல் வளைந்த

மாரும் தனக்கொரு தீங்குமின்றி உயர்ந்து வளரும். எதிர்த்து நிமிர்ந்து நிற்கு மரமோ காற்றினுல் தாக்குண்டு இடைமுரிந்து கெடும். இவ்வழகிய கருத்தினை விளக்கமுற ஏற்ற சந்தர்ப்பத்தில்

காயா மரமே யல்லாற் காய்த்த சினைகள் நிறுவா
தீயார் செல்வத்தல்லாற் றெருளோர் செருக்கெய்துவரோ
பாயா நெகிழும் பணியாதன வில் பணித்த சரமே
வியா துயரும் வளி நேர்வெருளா வளையுந் தருவே.

(தே. மகிழ்வினை, பா. 18 ப. 273)

என்னும் தேம்பாவணிச் செய்யுளில் அமைக்கப்பட்டுள்ளது.

சில சொற்களை அபூர்வமாகப் பிரயோகிக்கும் இடங்களும் தேம்பாவணியில் காணக் கிடக்கின்றன. உதாரணமாக நாவிற்கழகு கனிந்த அன்போடு கூடிய இன்சொல்; கண்ணிற்கழகு பிறர்துயர்க்கிரங்கும் கண்ணேட்டம்; மிருதுவான கைக்கு மிக்க வழகு கொடை (ஈதல்) என்னும் கொள்கையை சூசையும் மரியாளும் தழுவியுள்ளவர்கள் என்று கூறும் சந்தர்ப்பத்தில் வருங் கவி சிந்திக்கத்தக்கது. 'அணங்கு' என்ற சொல்லுக்கு அழகு என்ற பொருளிருப்பினும் உபயோகித்திருக்கும் விதம் அபூர்வம். சற்றடியில் வேறு கருத்தையும் ஒரே சொல்லால் சமர்த்தித்திருப்பதுவும் வியக்கத்தக்கது.

நாக்கணங்கு கனிந்து நவின்ற சொல்
நோக் கணங்கு கண்ணேட்ட நொதுத்தகை
யூக்கணங்கிடுந் தான மென்றுள்ளுவார்
கோக் கணங்கொடு வோங்கு குலத்தினர்.

(தே. மகிழ்வினை பா. 38 ப. 278)

[அணங்கு = அழகு; கண்ணேட்டம் = தானே பிறர்க்கிரங்கி நோக்கும் தன்மை; நொதுத்த = மலர்போன்று மென்மையுடைய; கோகணம் = அரசர் கணம்.]

தேவ குமாரன் திருவவதாரத்தைக் கூறவந்த விடத்து தங் கருத்தைத் திறம்படக் கூற எடுத்தாண்ட உவமை கழி பேருவகை தரும் பான்மையது. சீலமும், பக்தியும் நிரம்பிய வீரமாமுனிவர்

வாய்ப்படா நுழை பளிங்கின் வாய் கதிர்
போய்ப்படா வொளி படரும் போன்றுதாய்
நோய்ப்படா தருங் கன்னி நூக்கிலா
தாய்ப்படா வயத்த மலன் றேன்றினன்

(தே. மகவருள். பா. 95 ப. 328)

என்று வர்ணித்திருப்பது மிக மெச்சத்தக்கது. இதில் காணும் ஒவ்வொரு சொல்லும் பொருளுடன் பொருந்திப் பன்னயங்கள் தோன்ற நிற்கும். பல்கால் ஊன்றி யுணர்ந்து மீண்டும் மீண்டும் சிந்தித்துத் தெளிந்து மகிழத்தக்கது என்பது கற்றோரனைவரும் ஒப்புக்கொள்வர்.

'வையத்தார் திருவிரும்பி மறுவுற்றுரென்று, எளிமை வடிவம் பூண்டு, மெய்யைத் தான் உலகுணர்த்த விருப்பமொடு, மனுவாய் அவதரித்த, விசைய வேந்தனுகிய தேவ குமாரனை, அறிவுடைய மூவேந்தர்கள் காண வருகின்றுர்கள். ஆண்டவன் தந்த உணர்வொடு நவ மீன் வழி காட்ட தேவ குமாரனிருக்கு மிடத்திற்கு வந்தணைந்தார்கள்; உள்ளிறைஞ்சிப் புக்குமுன் நடந்தவற்றை "விழியின்றி யிறையீந்த மேதையினுல்" தெரிந்து உளத்து வியப்புற்று மூவேந்தரும் தேவ குமாரன் திருவடிகளில் ஏக காலத்தில் வணக்கமொடு தாழ்கின்றுர்கள். இச் சந்தர்ப்பத்தில் மூவேந்தர்களும் கண்களிப்ப வுருவாய்த் தோன்றிக் கிடைத்தற்கரிய காட்சிதரும் தேவ குமாரனைத் தாழ்ந்து தொழுவதை சுவையுடைய சொற்சித்திரமாக வீரமாமுனிவர் தீட்டியுள்ளார். மூன்று முடிவேந்தர் அரசர்க்குரிய உறுப்பிலக்கணங்களமைந்த கம்பீரத் தோற்றமுடையவர்கள். நீண்ட வாயில்கள் அமைந்து விண்ணளாவும் பொன் மாளிகையில் இயல்பாக வசித்துவரும் பூபாலர்கள் பாலனைக் கோலம் காட்டும் தேவ குமாரன் விரும்பித் தன்னிடமாய்க் கொண்ட சிறு மலைக் குகையில் இது பொழுதுவந்து நின்றுர்கள். அது பொழுது குகையினும் சூசை, மரியாள், தேவ குமாரன் ஆகிய மூவர்கள், வந்தவர்களும் மூவர். மூவேந்தர்களும் நவரத்னச் சுடர்மணியாற் செய்த பைம்பொன்வாய்ந்த கிரண மணிமுடிகள் சிரத்தில் தாங்கியுள்ளார்கள். அவைகள் மூன்றும் முறையே முச்சுடர்களான சூரியன், சந்திரன், அக்னி இவைகளின் ஒளியைப் பக்கமெங்கும் பரப்புகின்றன.

மண்களிப்ப மனுவானுன் முகிழ்இளந்தாள்களில் மகுடங்களின் ஒளிபாய மூன்று மலைகள் விழ்வதுபோல் ஒருங்கு தாழ்கின்றுர்கள். உறுப்புகளனைத்தும் நிலந்தோய நீள்வணக்கம்செய்துநெஞ்சு நெக்குருகி நீருகு கண்கள் விடுந்த ஆனந்தக் கடலில் ஆழ்ந்து அதன் அலைகளில் திளைத்துத் தொழத்தொழ விழ்ந்து எழுந்து எழுந்து மீண்டும் மீண்டும் தேவ குமாரனை இறைஞ்சுகின்றுர்கள். இக் காட்சி பின்வரும் நயம்செறிந்த செய்யுளிலமைந்துள்ளது.

மும்மலை விழ்ந்தென விழ்ந்து முச்சுடர்போன் மும்முடிகள் முகிளந்தாளில்
விம்மலை வில்லுறப் பெய்து மேவிய நெஞ்சுருகிக் கண் விடுத்த நீராற்
பொம்மலையிற் பெருகின்பப் புணரியினுண் மூவரங்கண் பொலிக மூழ்கி
யிம்மலையிற் றெழுத் தொழ விழ்ந்தெழுந் தெழுந்து
கோவேந்தை யிறைஞ்சிட்டாரே.

(தே. காட்சிப் படலம். பா. 112. பக். 377)

மற்றும் எருசேலம் நகரின்கண் பகல் பழித்து எரிபரந்து விளங்குமாலயத்து தேவ குமாரனை யேந்தி சூசையும் மரியாளும் புக்கபோது சிமையோன் எனும் சீர்கெழு முனிவன் திருக்குமாரனைக்கண்டு கரைசெயற்கரிய பேருவகைக் கடல் பெருக கரங்கள் கூப்பிப் பின்னர் தேவ குமாரனை இரு கைகளாலும் ஆர்வமுற வேந்தி அழியா வின்பமுற்றுனெனக் கூறும் செய்யுளும் அதனை யடுத்து வரும்

துதிச் செய்யுட்களும் கல்லுங் கரைந் துருகுவண்ணம் ஓசையும், ஒழுக்கும் அழகும் அமையப்பெற்று நம் நெஞ்சை அள்ளிக் கொள்ளைக் கொள்கின்றன.

பாருடம்பு யிராய் வந்த பரமனைக் கரத்திலேந்தி
யீருடம்பு யிரொன்றாக வெழுந்தவன் புவப்பிற் பொங்கிச்
சேருடம் பிரண்டொற்றாகச் சேர்த்துபு தழுவியன்பின்
னேருடம்பெழி விடுற்ற நிலைமையிற் பாடலுற்றான்.

(தே. மகனேர்ந்த படலம் பா. 79. பக். 407)

இஃது சிமையோன் தழுவுவதை வர்ணிப்பது மற்றும் செய்யுட்களின் நலங்களைத் தேம்பாவணியைக் கற்று ஊன்றி உணர்ந்துகொள்க. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவர் வீரமாமுனிவர் என்பது தெற்றெனப் புலப்படும்.

## VII

வீரமாமுனிவர் இயற்றியுள்ள தேம்பாவணியை எல்லாரும் நன்கு கற்றின்புற வேண்டுமென்பதொன்றே எனது பேரவாவாதலின் காப்பிய நயங்கள்க் கூடும்வரை விளக்கி இக்கட்டுரை எழுதியுள்ளேன். "நவில்தொறும் நூனயம் போலும்" என்று பண்டைத் தமிழ் நூல் கூறும் வண்ணம் புத்தம்புதிய கருத்துக்கள் மீண்டும் மீண்டும் வாசிக்க கடலலைகள்போல் எழுந்துகொண்டே இருக்கும். ரசிகர்களுக்கு அஃது அருவிருந்தாகும். கடலில் ஆழ்ந்திருக்கும் எண்ணிறந்த வளங்களை முற்றிலும் காண்பது இயலாதது; அதுபோலவே இசைகெழு புலவர்கள் தீட்டிப் பெருகவைக்கும் நூற்கடலும் என்றாலும் தமிழார்வமுடைய சகோதரர்கள் தேம்பாவணியில் யான் பெற்ற வின்பம்பெற வேண்டுமென்ற பேரவாலே என்னை இக்கட்டுரை எழுதத் தூண்டியது. அறிஞர்கள் ஆய்ந்து குறை களைந்து பயன் கொள்வாராக.


மைத்தரி ஆடைகளில்!
நவீன ரகங்கள்
கெட்டிச்சாயம்
அழகிய பார்டர்கள்
நீடித்த உழைப்பு
புடவைகள், வேஷ்டிகள்
அங்க வஸ்திரங்கள்
கிடைக்குமிடம், மதுரை.
நெசவாளர் கூட்டுறவு விற்பனைசங்கம்
2 II, கீழமாரட்டுவீதி, மதுரை.

**17—10—1943 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற**

## சுவாமி வீரமாமுனிவர் விழாவில்

*மதுரை, சென்ட் ஜோஸப்ஸ் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,*

**வித்வான், S. ஆழ்வாரையங்கார் இயற்றிய**

# வாழ்த்துப் பாக்கள்

———:o:———

*அறுசீர் ஆசிரிய விருத்தம்*

**1**

சீரா ரித்தா லியநாட்டிற் சிறந்து தோன்றிப் பன்மொழியும்
நேரா யாய்ந்து தமிழ்நாடு போந்து நிகரில் தமிழ்மொழியைப்
பாரோர் வியக்கப் பயின்றுசு தேய நாட்டார் பண்ணியநல்
லோரார் தவத்தால் வருவளன்சீர் இசைத்தார் தேம்பா வணியன்றே.

**2**

அப்பெரியார் பெயர்வீர மாமுனிவ ரென்றுலகோ ரழைத்து வப்பார்
செப்பரிய தமிழ்நூல்கள் பலவியற்றிச் செந்தமிழ்க்குத் தொண்டு செய்தார்
இப்புவியிற் கிறித்துமத வெழிற்குருவா யுபதேச மினிது செய்தார்
ஒப்பரிய வவர்விழா வின்றுநிகழ் சிறப்பெம்மா லுரைக்கொ ணாதே.

*வெண்பா*

நன்று விழாவை நடத்தினோர் சொற்பொழிவை
இன்றிவண் செய்தோர் இனிதேவந்—தென்றமிலா
வானந்தம் பெற்ற வவையோ ரிவர்வாழி
ஈனந் துடைத்திங் கினிது.

# தேம்பாவணியின் கவிநயம்

ஆக்கியோர் : அ. முத்துசாமிப்பாவலர்,
(தமிழாசிரியர், அர்ச். மரியன்னை உயர்நிலைப் பள்ளி, மதுரை.)

## தேம்பாவணியின் சிறப்பு

தேம்பாவணி, என்பது, வீரமாமுனிவர் என்னும் தமிழ்ப் பெயர் புனைந்த கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற இத்தாலிய இராஜ ரிஷியால் இயற்றப் பெற்ற செந்தமிழ் வளங்கனிந்த சீரிய நூலாகும். இது, வளன் என்னும் சூசையப்பரின் ஒப்புயர்வற்ற திப்பியக் கதையை உரைப்பது; பெருங்காப்பிய இலக்கணம் ஒருங்கே நிரம்பப்பெற்றது; அருகிய இலக்கணம் அமைந்தது; பெருகிய கற்பனை பெற்றது; சொல் நயம் பொருள் நயம் செறிந்தது; தொடை நயம், நடை நயம் மலிந்தது; தமிழகத்தின் தலை சிறந்த புலவர்களாகிய திருவள்ளுவர், திருத்தக்க தேவர், கம்பர், சேக்கிழார் போன்ற நல்லிசைப் புலவர்களின் அரும்பெருங் கருத்துக்கள் என்ற திருமணிகள் பொதிந்து வைக்கப்பெற்ற சிறந்த கருவூலமாகத் திகழ்வது; செய்யுள் நடை சிறிது கருகுதலுடைய தேனும், தமிழில் ஆர்வமும், பற்றும், ஊன்றிய கவனமும் உடையார்க்குப் பொருள் இனிது விளங்குவது; கற்பவர் உளங்கவர் பொற்பு மிகப்படைத்தது; சுருங்கக் கூறின், தமிழொடு பிறந்து, தமிழொடு வளர்ந்து, தமிழ் மரபு அறிந்து பாடிய பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்களின் நூல்கட்கு இந்நூல் எவ்வாற்றானும் பின்னடைவது அன்று என்பது, நடுநின்று ஆராய்வர்க்கு வெள்ளிடைமலை போல் தெள்ளிதின் விளங்கும் என்பது ஒருதலை.

## தேம்பாவணி என்னும் தொடர்ப்பொருள் விளக்கம்

இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் தேம்பாவணி என்பதாம். இது தேம்பா + அணி எனப் பிரிந்து, வாடாத மலர் மாலை என்று பொருள் தரும்.

தேம்பா = வாடாத; அணி = மலர் மாலை. அணியப்படும் காரணம்பற்றி வருவன எல்லாம் அணியெனப்படும். ஆயினும், தேம்பா என்ற அடைமொழியால் இங்கு மலர் மாலையைக் குறிக்கும். தேம்பா = ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இது அணி என்னும் பெயர் கொண்டு, இடையே வகரவுடம்படுமெய் பெற்று, தேம்பாவணி என்று ஆயிற்று. எனவே, இரண்டு சொல் ஒரு சந்தி பெற்ற தேம்பாவணி என்னும் இத்தொகாநிலைத் தொடர்மொழி, வாடாத மலராற் கட்டப்பட்ட மாலை எனப் பொருள்பட்டு, பின் அழியாத கவியாற் புனையப்பட்ட இக்காவியத்திற்கு உவமையாகுபெயராயிற்று.

பாட்டுடைத் தலைவராகிய சூசைமுனிவரின் திருக்கரத்தில் இலங்கும் நறுமணக் கொடியிற் பூத்த மலர்கள் 3,615 ஆகவும், அம்மலர்களாற் கட்டப்பட்ட மாலை 36 ஆகவும், கணக்கிடப்படுதலின், அம்முறையை மேற்கொண்டு, ஆசிரியர் அம்முனிவரின் வரலாறு கூறும் இந்நூலையும், 3615 செய்யுட்களால் 36 படலங்களாக தேம்பாவணி என்னும் பெயருடன் இயற்றியது, மிகமிகப் பொருத்தம் உடையதே. இதனை ஆசிரியர் “வேரியங்கொடியோன்

காதை விளம்பவக் கொடிவிள்பைம்பூ— ஆரியனூரிற் றேம்பாவணியெனப் பிணித்தல் செய்வாம்" என நான்முகத்துக் கூறியவாற்றான் அறியலாம்.

அல்லது நீப்பி என்பவள், தன் அருமைத் திருமகனாகிய சூசையைக் கையில் ஏந்தி, ஆண்டவனுடைய திருவடிகளைத் துதித்து, இக்குழந்தை தரும ஒழுக்கத்திற் சிறந்து வளரும்படி ஆசிர்வதிக்கவேண்டும் என்று மன்றாடியபோது, வானத்தில் ஓர் தேவ வாக்குத் தோன்றி, அழியாத அருளைப்பெற்ற இம்மகன் என் மார்பில் அணியத்தகுந்த தேம்பாவணி (வாடாத மலர் மாலை) யாவான் என்று அருளிச்செய்தது. இதனை "மேலோர் குரல் தோன்றி ஆடா நிலையறத் தென்மார்பிற் றேம்பாவணியாவான்—வாடா வருள் மகன்" என்று ஆசிரியர் கூறுவதால் அறியலாம். இதனால் சூசையப்பருக்குத் 'தேம்பாவணி,' என்ற ஓர். திருப் பெயரும் உண்டு என்பது பெறப்படும். எனவே 'தேம்பாவணி என்ற சூசையின் பெயர், அவர் வரலாறு கூறும் நூலுக்கு ஆயிற்று; மணிமேகலை என்பது போல, என்று இவ்வாறு பொருள் கூறினும் பொருந்தும். இவ்விரு பொருளையும் விடுத்து, தேம்பாவணி என்பதற்கு வெவ்வேறு வகையிற் பொருள் கூறலாம். ஆயினும், அவையெல்லாம் ஆசிரியர் கருத்திற்கு ஒரு சிறிதும் ஒவ்வாமையோடு, இடர்ப்பட்டுப் பொருள் கூறுவதாயும் அமையும்; என்பது நூலிடைப் பயின்றார்க்கு நன்கு விளங்கும்.

## தேம்பாவணிக்கு முதல் நூல்

ஆகிர்த என்னும் பட்டணத்தில் இருந்த ஓர் கன்னிப் பெண் தவ ஒழுக்கத்தில் ஒரு சிறிதும் தவறாது விளங்கி, கடவுளைத் திருமகனைப் பெற்ற தேவ தாயாகிய கன்னிமரியின்பால் அன்பு பூண்டு ஒழுகினாள். அக்காலத்தில் வானோர்க்கரசியாகிய மரியன்னை அக்கன்னி முன்னர்த் தோன்றி, அவள் பெருமை புலப்படும்படி தனது மரியாள் என்னும் பெயரை அவளுக்குக் கொடுத்தருளியதும் அன்றி, தன் காவலராகிய சூசைமுனிவரின் வரலாற்றை விரிவாக எடுத்துரைத்து, மகளே! யாவரும் கேட்டு உய்யும்பொருட்டு இவ்வரலாற்றை யான் கூறியபடி எழுதிவைப்பாய் என்று கட்டளையிட அவளும் அவ்வாறே எழுதிவைத்தாள்; இங்ஙனம் ஆகிர்தமரியாள் மூல மொழியில் எழுதிவைத்த சூசைமுனிவரின் திருக்கதையை, தமிழ் மொழியில் ஆசைபற்றி அறையலுற்றேன் என்ற கருத்துப்பட ஆசிரியர்

வருந்திய நசையால் நானும் வரைந்தவை வரைந்து காட்டத்
திருந்திய தமிழ்ச்சொ லில்லாற் செவிப்புலன் கைப்ப நல்லோர்
போருந்திய குறைக ணோக்கிற் புணர்ந்தமட் கலத்தைப் பாரா(து)
அருந்திய வமுது நன்றே லருத்தியோ டருந்தல் செய்வார்

என்று கூறுவதால், ஆகிர்தமரியாள் மூல மொழில் எழுதிவைத்த சூசைமுனிவரின் திருக் கதையே இந்நூற்கு முதல் நூல் என்பது இனிது பெறப்படும். இச்செய்யுளில் ஆசிரியர், கிடைத்தற்கு அரிய பேர் அமுதம் மட்பாத்திரத்தில் பெய்துவைக்கப்பட்டிருப்பினும் உண்பவர், பாத்திரத்தின் இழிபு நோக்காது, அமுதத்தின் சிறப்பு ஒன்றையே நோக்கி விருப்பத்தோடு உண்பதுபோல, சூசைமுனிவரின் அருமைத்

நீப்பி—சூசைமுனிவரின் திருத் தாயார்.

திருக்கதை, என்னுடைய சொற்குற்றம் பொருட்குற்றம் நிரம்பிய தமிழ்ச் செய்யுட்களில் பொதிந்து வைக்கப்பட்டிருப்பினும், கற்பவர், செய்யுட்களில் உள்ள குற்றத்தைக் கருதாமல் அவற்றில் அமைந்திருக்கும் கதை இனிமை ஒன்றையே கருதி ஏற்றுக்கொள்ளக்கடவர் என்று அழகிய உவமை மூலம் தம் கருத்தைப் புலப்படுத்தி, புலவர்கள் தம் நூலிற் குற்றங் காணாதபடி அவையடக்கம் கூறிய முறை மிக நன்ருய் அமைந்துள்ளது.

இதுகாறும் கூறியவற்ருல் தேம்பாவணியின் சிறப்பும், தேம்பாவணி என்ற தொடருக்குப் பொருளும், இந்நூற்கு முதல் நூல் இன்னது என்பதும், நூன் முகத்து ஆசிரியர் அவையடக்கம் கூறிய முறையும், ஒருவாறு விளக்கப்பட்டன.

## கவி நயம்

தேம்பாவணி, என்பது ஓர் பரந்து பட்ட கடல் போன்றது. அதன்கட் புகுந்து கவி நயம் ஆராய்தல், நுண்மாணுழைபுலம் மிக்கவர்க்கே அன்றி, என் போன்ருர்க்கு ஒரு சிறிதும் இயலுவது அன்று. எனினும், ஆசை வெட்கம் அறியாது என்றபடி, ஆசையால் உந்தப்பட்டு, பிறர் கூறும் இழிவுரையையும் நோக்காது, சற்று பதம்பார்ப்பதுபோல ஒருசில செய்யுட்களுக்கு இயன்றவரை நயம் எழுத முன்வந்துள்ளேன். ஆதலால் இதனைக் கண்ணுறும் பேரறிஞர்கள், குற்றங் குறைகள் கண்டுழியும் செற்றம் கொள்ளாது மன்னிப்பார்களாக.

பாட்டுடைத் தலைவனுகிய சூசைமுனிவன் அவதரித்த பெருமை பெற்றது, பரிசுத்த பூமியாகிய யூதேயா நாடு. இந்நாடு, இக்காலத்தில், பலஸ்தீன என்னும் பெயர் பெற்று ஆசியா கண்டத்தில் உள்ளது. எனவே சூசைமுனிவர் திருக்கதையைக் கூறத்தொடங்கிய கவிஞர், அம்முனிவர் அவதரித்த யூதேயா நாட்டின் வளத்தை முற்கூறவேண்டியது காவிய மரபு ஆதலால், அம்முறைபற்றி அந்நாட்டு வளத்தை முற்கூறத் தொடங்கி, நாட்டு வளத்திற்கு மழை காரணமாக இருத்தலின், அம்மழையைப் பெய்யும் கார்மேகங்கள் மின்னி, இடியிடித்து, இடைவிடாது மழை பொழிதலை,

போர்புறங்கொடு பொருந்தல ருரத்திற் றேய்ந் தோளிர்வேற்
சீர்புறங்கொடு திசை தொறு மிருளற மின்னி
வார்புறங்கொடு வளர்முர சொலியென வதிர்ந்து
நீர்புறங்கொடு நீன்முகில் முழங்கின மாதோ

என்றும்,

கடையேனச் செறி கருணையோ டேற்றிய வள்ளர்
கோடையேனச் செழுங் குன்றேடு வயின்றேறுங் குளிர
மிடையனேச் சோரிவியன் முகில் வரைவில பொழிவ.

என்றும் வருணிக்கின்ருர். இவ்விரு செய்யுளின் கருத்துப் பின்வருமாறு :—

எருசலேம் பட்டணத்திலிருந்து யூதேயா நாட்டை ஆண்டுவந்த தாவீது மன்னன் பகைவர்மேல் விட்ட வேலானது, அப்பகைவர்களின் மார்பில் துளைத்து முதுகுப்புறத்தின் வழியாக ஊடுருவிச் செல்லும்போது மின்னுவதுபோல கார்

மேகங்கள், திக்குகள் தோறும் இருளற மின்னி, வெற்றியடைந்த அம்மன்னனின் போர்க்களத்தில் அடிக்கப்படும் வெற்றி முரசு முழங்குவதுபோல, அம்மேகங்கள் ஆகாயத்தின் இடமெல்லாம் முழங்கி, வள்ளல்கள் தியாகம் கொடுத்தற் பொருட்டுத் தாம் கொண்டுவந்த பொருள்களை எல்லாம் இரப்பவர்க்கு வரையறை இன்றிக் கொடுத்து, எஞ்சியதைத் திரும்பக் கொண்டுபோகாமல் அவரிடத்தே முழுதும் பொழிந்துவிடுவதுபோல, இம்மேகங்களும் தாம் உட்கொண்ட நீரை எல்லாம் திரும்பக் கொண்டுபோகாமல் மலைகளிலும், வயல்களிலும், மேடுகளிலும், பள்ளங்களிலும், எங்கும் வரைவு இன்றிப் பொழிந்தன என்பதாம். இங்கு, கார்மேகங்கள் மின்னி இடியிடித்து, இடைவிடாது மழை பொழிதற்கு ஆசிரியர் காட்டிய உவமைகள் எல்லாம் கருத்தை வருத்தமின்றிப் பொருத்தமாக விளக்கும் கண்ணாடிகளாக இலங்குகின்றன.

இனி, யூதேயா நாட்டின் மலைமீது மழைத் தாரைகள் விழுவதையும், வெள்ளை நிற அருவிகள் துள்ளிக் குதித்துத் தரைமீது புரண்டு ஓடுவதையும், ஆசிரியர்

புள்ளி மால்வரை பொன்னுல கிடத்தெடுத் துய்த்தல்
உள்ளி வான்விடு வடமெனத் தாரைக ளொழுக
வெள்ளி நீண்டொடர் விசித்ததைப் பிடித்தெனச் சூழத்
துள்ளி வீழுயர் தூங்கிய வருவியின் றேற்றம்.

என வருணிக்கிறார். இச்செய்யுட் கருத்து :—இச்செல்வ மலை இங்கிருப்பதைவிட, பொன்னுலகத்தில் இருப்பது நலம் எனக் கருதிய வானோர்கள், இம் மலையை இறுகப் பிணித்து வானுலகத்திற் கொண்டு சேர்ப்பதற்காக, அங்கிருந்து விட்ட வடக்கயிறுகள்போலத் தாரைகள் இடைவிடாது ஒழுகிக்கொண்டிருக்கையில், இச்சூழ்ச்சியை அறிந்த பூமி, அம் மலை தன்னிலையிற் பெயராதபடி வெள்ளிச் சங்கிலியால் பிணித்து உறுதியாகப் பிடித்துக்கொண்டதுபோல, வெண்ணிற அருவிகள் நான்கு புறத்திலும் வழிந்தோடுகின்றன. இங்கு, மலைமீது, மழைத்தாரைகள் ஒழுகுவதும், அதனால் வெண்ணிற அருவிகள் துள்ளிவிழுவதும், ஆகிய இயற்கையில், புலவர் மேற்கண்டவாறு தம் கற்பனைத் திறமையை ஏற்றிக் கூறிய அழகு மிகமிகப் பாராட்டத்தகுந்தது.

இங்ஙனம், வழிந்தோடும் அருவி நீர்ப் பெருக்கமானது, மலைபடு பொருள்களாகிய மணிகள், யானைத் தந்தங்கள், தேன் கூடுகள், கிழங்குகள் போன்றவைகளையும், மற்றும் அம்மலையைச் சார்ந்த பிற இடங்களிலுள்ள பொருள்களையும் அலைத்து வாரிக்கொண்டு செல்வது, ஓர் நாட்டிற் புகுந்து, அங்குள்ள பொருள்களையெல்லாம் அந்நாட்டு மக்கள் நெஞ்சு புண்ணாகும்படி கொள்ளைகொண்டு செல்லுகின்ற பகை வேந்தரின் செயலை ஒக்கும் என்று நயம்பட வருணிக்கிறார்.

மேலும், மலையிலிருந்து ஓடிவரும் அந்நதி, தன்னைத் தடுத்துநிற்கும் குன்றுகள் கற்பாறைகளுக்கு அஞ்சாமல் அவற்றைத் தாண்டி, மருத நிலத்திற்கு வந்து, அங்கும் நில்லாது ஓடி, நெய்தல் நிலத்தை அடுத்துத் தான் சேரும் இடமாகிய கடலை நோக்கிச் செல்வது, துறவொழுக்கத்தை மேற்கொண்ட பெரியோர்கள், தம் ஒழுக்கத்திற்கு இடையூறுசெய்யும் காமம், வெகுளி, மயக்கங்களையெல்லாம் கடந்து, உலகப்பொருளனைத்தும் நிலை

யில்லாதன என்று வெறுத்து, தம் குறிக் கோளாகிய வீட்டுலகம் (மோட்சவுலகம்) ஒன்றையே தேடிச்செல்வதை ஒக்கும் என்னும் கருத்துப்பட, ஆசிரியர்

அஞ்சிலா வேதி ரடுக்கிய கல்லெலாங் கடந்தே
எஞ்சிலா வேழி லிமைத்தநீண் மருதமும் நீக்கித்
துஞ்சிலா நதி தொடர்ந்தகல் கருங்கடல் நோக்கல்
விஞ்சை யாரெலாம் வெறுத்து வீடடைகுதல் போன்றே

என்று வருணிக்கிருர்.

இவ்வாறு ஓடிவரும் வெள்ள நீரைப் புறத்தே போகாமல் அணைகட்டித் தடுத்து, ஒரு வழிப்படுத்தி, கால்வாய்களின் மூல மாக உழவர்கள் வயலிற் கொண்டுபோய்ப் பாய்ச்சுவது, மெய், வாய், கண், மூக்குச் செவி என்ற, தம் ஐம்பொறிகளையும் புற விடயங்களிலே போகாமல் தடுத்து, புண் ணியவழியிலே செலுத்துகின்ற துறவி களின் செயலை ஒக்கும் என்னும் கருத்துப் பட,

சேறியுலாம் புனல் சிறைசெய்து பயன்பட வோதுக்கி
வேறியுலா மலர் மிடைந்தகல் வயல் வழி விடுவோர்
பொறியுலாம் வழி போக்கில தியல்பட வடக்கி
நெறியுலாவற நேரவை நிறுத்தினர் போன்றே

என்று கூறுகிருர். இவற்ருல் ஆசிரியரின் விரிந்த உலகியலறிவும், பரந்த நூலறிவும், எடுத்துக்கொண்ட பொருளை இனிதுவிளக் கும் திறமையும் பிறவும் நன்கு விளங்கும்.

இனி, அவ்வெள்ளத்தை நிலத்திற் பாய்ச்சிய உழவர்கள், இந்நிலமானது, எல்லாவகைப் பொருட்களையும் விளைவித் துக்கொடுக்கும் தாய், என்றும் கருதாமல் அதன் நெஞ்சு கிழியும்படி கலப்பையால் ஆழ உழுது வருத்துகின்ற நிலையிலும், அந்நிலமானது சிறிதும் சலிப்பின்றி உண வுப் பொருட்களை மிகுதியும் சுரந்து கொடுப்பது, தவ ஒழுக்கத்தை மேற் கொண்ட பெரியோர்கள், பிறர், தமக்குத் துன்பம் செய்தநிலையிலும் அவர்க்குத் தாமும் துன்பம் செய்யாது, தம்மால் இயன்றவரையும் உதவிசெய்யக் கருதுதலை ஒக்கும் என்னும் கருத்தை யமைத்து ஆசிரியர்

உவர்க்குந் தாழ்கடலுடுத்தகல் விரிதலை ஞாலம்
எவர்க் குந் தாயென எண்ணிலாக் கிழிபடக்கீறும்
அவர்க்குந் தானுண வளித்தலே நோய் செய்வார்க்குதவி
தவர்க்குந் தாவருந் தருமமேன் றியற்றுதல் போன்றே

என்று சித்திரிக்கிருர். இங்கு, இயற்கைப் பொருள்களிலிருந்து மனிதர்கள் கற்றுக் கொள்ளவேண்டிய நன்முறைகள் பலப் பல. அவற்றுள், நிலத்திலிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய இன்றியமையாத முறை ஒன்று உளது: அது, "இன்னு செய்தாரை யொறுத்தலவர் நாண—நன் னயஞ் செய்துவிடல்," என்றும் இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் —என்னபயத்தோ சால்பு" என்றும் திரு வள்ளுவப் பெருந்தகை கூறியபடி, தீமை செய்தார்க்கும் நன்மைசெய்தல் என்னும் சிறந்த முறையேயாம் என்று மக்களுக்கு அறிவுறுத்துவார்போல நிலத்திலிருந்து

இவ்வுண்மையை வெளியிட்ட ஆசிரியரின் உயர்ந்த கருத்து, ஊன்றி நோக்கி மகிழ் தற்குரியது.

வயல்களிலுள்ள செந்நெற்பயிர்கள், தொடக்கத்தில், செல்வச் செருக்குள்ள கீழ்மக்களின் தலை, யாருக்கும் கீழ்ப்படிதல் இன்றி நிமிர்ந்து நிற்பதுபோலத் தலை நிமிர்ந்து நின்று பின்பு, நற்குணமுள்ள பெரியோர்களின் தலை, வணங்கி நிற்பது போலக் கதிர் முற்றிய நிலையில் வளைந்து சாய்ந்து, பழுத்து, விளைந்தன ; அவ்வாறு விளைந்த அந்நெற்கதிர்களை அறுத்து அரி யரியாகக் கட்டிக்கொண்டுபோய், யூதேயா நாட்டில் போர் உண்டு என்றால், இந் நெற்போரே ஆகும்; வேறு போர் இல்லை; என்னும்படி உழவர்கள் அவற்றைப் பல நெற்போர்களாகச் செய்வார்கள் என்னும் கருத்தை உள்ளடக்கி, ஆசிரியர்

பூரியா ரதிருப்போல் தலை பசிய கூழ் நிறுவி
நீரினார் தலை நேர நேர் வளைவோடு பழுத்த
ஆரமானு நெல் லறுத்தரி கோண்டுபோ யங்கட்
போரிதா மேனக் களித்தனர் போர்பல புனைவார்

என்று அழகுபட வருணிக்கிறார். இங்கு நெற்பயிர்கள் முன்பு, தலைநிமிர்ந்து நின்றதற்கும், கதிர் முற்றிய நிலையில் வளைந்து கிடந்ததற்கும், ஆசிரியர் காட்டிய உவமைகளால் அவர் பழந் தமிழ் நூல்களிற் பயின்று திளைத்தவர் என்பதும், கவிஞர்க்கு இன்றியமையாது வேண்டற்பாலது ஆகிய உற்று நோக்கும் திறமை முற்றும் கைவரப்பெற்றவர் என்பதும் தெரிகின்றன. இச் செய்யுளின் இறுதியிலுள்ள "போரிதாமெனக்களித்தனர் போர் பல புனைவார்" என்னுந் தொடரால், அந் நாட்டு மக்கள், ஒற்றுமையை விரும்புவது அல்லால் மனவேற்றுமை விளைவிக்கும் போராட்டங்களை ஒரு சிறிதும் விரும்பார்கள் என்பது வெளியாகின்றது.

இனி, பொய்யும், மெய்யும் கலந்து கிடந்த நிலையில் பெரியோர்கள், தம் பகுத்தறிவால் இது பொய், இது மெய் எனப் பிரித்தறிந்து, பொய்யை விலக்கி, மெய்யைக் கொள்ளுவதுபோல, வைக்கோலும் நெல்லும் கலந்துகிடந்தநிலையில் உழவர்கள், எருமைக்கடாக்களால் மிதிப்பித்து, வைக்கோலை நீக்கி, பரிசுத்தமான அந் நெற்களைத் தொகுத்து, முன்பு, அங்கு வந்த இரவலர்க்கு அறத்தின்பொருட்டுக் கொடுத்து, எஞ்சியதைப் பின்பு தாங்கள் உண்ணுவதற்காகவும், பிறர்க்குக் கொடுப்பதற்காகவும் களஞ்சியங்களிற் சேர்த்து வைப்பார்கள் என்ற கருத்துத்தோன்ற ஆசிரியர்

மெய் கலந்த போய் விலக்கி மெய் கோள்பவர் வினைபோல்
வை கலந்த நெல் பகட்டினுற் றெழித்துவை மறுத்துக்
கைகலந் தடுத் தேற்கு நர்க்களி த்தபின் களித்துத்
துய் கலந்த நெல் லுண்கவு மீகவுந் தொகுப்பார்

என்று வருணிக்கிறார். இச் செய்யுளின் ஈற்றில் அமைந்துள்ள "துய்கலந்த நெல் லுண்கவு மீகவும் தொகுப்பார்" என்ற தொடரால் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்னும் ஆன்றோர் கூற்றின்படி செல்வம் பெற்றதற்குப் பயன், அச் செல்வத்தைத் தம் அளவிற் பயன்படுத்துவதுமட்டும் அன்றிப் பிறர்க்கும் பயன்படுத்துவதே என்ற சீரிய கொள்கையைக் கடைப்பிடிப்பவர் அந்நாட்டு மக்கள் என்பது நன்கு புலனாகிறது.

இதுகாறும் எடுத்துக்காட்டிய செய்யுட்களிலிருந்து, அணிகளுக்கெல்லாம் தாயகமாகிய உவமை அணியைக் கையாள்வதில் இவ்வாசிரியர் மிக வல்லுநர் என்பதும், இவர் கையாளும் உவமைகள் எல்லாம், இயற்கை உருவம் தாங்கி, எளிமையும் இனிமையும் கலந்து, கற்பவர் மனத்திற் பதிந்து, கழிபேருவகை யூட்டும் தன்மையன என்பதும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்.

இனி, அந்நாட்டிலுள்ள சோலையை எடுத்துக்கொண்டு சோலை, நாடகசாலையாகக் காட்சி அளிக்கின்றது என்னும் கருத்து விளங்க, ஆசிரியர்

மேல் வள ரலர்ப்படம் விரித்து வீணைசெய்
பால் வளர் சுரும்பிசை பாட மாங்குயில்
வால் வளர் மயினடம் காண மற்றைப்புள்
சால் வளர் நாடகசாலை சோலையே

என்று சித்தரிக்கிறார். இதில் சோலை, நாடகசாலையாதலால் எவ்வாறு கூடும்? என்று நமக்கு வியப்புத் தோன்றுவது இயல்பே. இங்கு சற்று ஆழ்ந்து நோக்குவோமானால் அவ்வுண்மை புலனாகும். நாடகசாலையில் மரங்கள், செடிகள் கொடிகள் மலர்கள் வரையப்பெற்ற காட்சிக்கு இனிய அழகிய திரைகள் பக்கங்களில் தொங்கவிடப்பட்டு, பூவேலைப்பாடமைந்த மேற்கட்டிகள்மேலே பரப்பப்பட்டு இருக்கும்; திரை அருகே சிலர் இசை கூட்டுவர்; அவ்விசைக்குத் தகுதியாக, பாடகர் பின்னாற் பாடுவர்; அப்பாடலுக்குத் தகுதியாக மேடைமீது ஓர் அழகிய இளம் பெண் நாட்டியம் ஆடுவள்; அவ்வாடலை ஆங்குக் குழுமியவர் கண்டு தலையசைத்து வியந்துகொண்டிருப்பர்; இத்தகைய காட்சியே நாடகசாலையிற் காணப்படும். அது போலவே பசுஞ் சோலையிலும், மரங்களும், செடிகளும், கொடிகளும், மலர்களும் நிரம்பித் திரைகள்போல இயற்கைக் காட்சி அளிப்பதாலும், வண்டுகள் மலர்களிலிருந்து, இசைகூட்டுவதுபோல ரீங்காரம் செய்வதாலும், அவ்விசைக்குத்தக, குயில்கள் பாடுவதாலும், அப்பாடலுக்குத்தக மயில்கள் தோகையை விரித்துக்கொண்டு மரக்கிளைகளில் ஆடுவதாலும், மற்றைப் பறவைகள் தலையசைத்து அவ்வாடலைக் கண்டுகளிப்பதாலும், அச்சோலை நாடகசாலையாகத் திகழ்கின்றது என்று உய்த்துணர்ந்தகாலை நம் உள்ளம் அடையும் மகிழ்விற்கு எல்லையும் உண்டோ? இங்கு, சோலைக் காட்சியை நாடகசாலைக் காட்சியோடு இணைத்து திறம்பட விளக்கிய கவிஞரின் கற்பனா சக்தி உச்சநிலையை அடைகிறது.

இதுகாறும் தேம்பாவணியிலுள்ள யூதேயா நாட்டுவளம் கூறும் செய்யுட்களுள், ஒரு சிலவற்றின் நயங்கள் ஆராயப்பட்டன. இனி யூதேயா நாட்டின் தலைநகராக விளங்கிய எருசலேம் நகரின் சிறப்பும், அதை தலைநகராகக்கொண்டு யூதேயா நாட்டை அக்காலத்தில் ஆண்டுவந்த தாவீது மன்னன் சிறப்பும், எருசலேம் நகரத்தின் நடுநாயகமாக விளங்கும் தேவாலயச்சிறப்பும், கூறும் செய்யுட்களுள் ஒரு சிலவற்றின் நயங்கள் ஆராயப்படும்.

## எருசலேம் நகர்ச்சிறப்பு

பூவுலக மக்கள், மெய்ம்மறையிற் கூறப்பட்ட அறச்செயல்களை அறவே மறந்து, மறச்செயல்களிற் புகுந்து, அழிவுற்றனர் என்று இரக்கங்கொண்டு, அருளே உரு

வாய் அமைந்த ஆண்டவன், அம்மனுமக்களை மீட்டுக் காப்பதற்காக, அவதாரம் செய்ய நினைந்து, தனக்குரிய இடமாகத் தெரிந்தெடுத்த பெருமை பெற்றது; எம் பெருமானாகிய கடவுள், மனுமகனாக அவதரித்த காலத்து அவருடைய சீர்பாதம் தங்கி இருந்தது; வானுலகத்திற்கு மேலாக இருக்கும் மோட்ச நகரின் மாட்சி பூவுலக மக்களின் கட்புலனுக்குத் தோன்றாதது என்று எண்ணிய கடவுள், அம் மோட்ச நகருக்கு ஒப்பான ஒரு நகரத்தைக் காண்பிக்க உவமையாகக் கூறப் பெற்ற சீர்மை பெற்றது; கடவுள் முதலிய வானோர்களும், தீர்க்கதரிசிகளும், குருப்பிரசாதிகளும், அருந்தவ முனிவர்களும், புகழ்ந்து கூறப்பெற்றது; கருணை நிறைந்த கடவுள், மனுமகனாகத் தோன்றிப் பாடுபட்ட காலத்தில், அப்பெருமான் திருமேனியிலிருந்து சிந்திய திரு இரத்தத்தைத் திரு முடியாகத் தரித்துக்கொண்டதால் வீட்டுலகத்தினும் மேம்பட்டது; எருசலேம் நகர் என, அந்நகரத்திற்கு இயற்கையாக அமைந்துள்ள சிறப்புக்களை எடுத்துரைத்து, இத்தகைய நகரை, ஊமையாகிய நான் புனைந்துரை வகையால் புகழ்ந்து பேசவும் இடம் உண்டோ? என்று முடிக்கும் முறை மிகமிக அழகுடைத்தாம். இந்நகரின் சிறப்பை இதைவிடச் சிறந்த முறையில் விளக்கவல்லவர் யார்?

## தாவீது மன்னன் சிறப்பு

இனி, அந்நாளில் ஆட்சிபுரிந்த தாவீதுமன்னனின் சிறப்பை விளக்குவான் தொடங்கி, ஆசிரியர்

> கோடாதன வுயர் கோலொடு குளிர் மாறில குடையும்
> வாடாதன தனிவாகையும் மதமாறில களிறும்
> ஓடாதன வடல்தானையும் உளகோன்

எனக் குறிக்கின்றார். இச் செய்யுளில் அமைந்துள்ள சந்த இன்பம், படிப்பவர் உள்ளத்தில் கிளர்ச்சியையும் உணர்ச்சியையும் ஊட்டி, ஆட்டக் குதிரையின் அடியெடுப்பை அனைவர்க்கும் நினைவூட்டுவதாகும். இங்கு, 'கோடாதனவுயர்கோல்' என்பதால், பகைவர் அயலவர் நண்பினர் என்ற முத்திறத்தார்களுக்கும் ஒப்ப நீதி வழங்கும் அம்மன்னனின் ஆட்சிச் சிறப்பையும், 'குளிர் மாறில குடை' என்பதால் அந்நாட்டு மக்கள் அனைவர்க்கும் ஒப்பக் குளிர்ச்சி தருவதில் ஒரு சிறிதும் மாறுபடாத அவன் குடையின் சிறப்பையும், 'வாடாதன தனிவாகை' என்பதால் போன போன போர்முனைகளில் எல்லாம் வெற்றி காண்பது அல்லாமல் தோல்வியை அறியாத அவன் வெற்றிச் சிறப்பையும், 'மதமாறிலகளிறு' என்பதால் அவன் யானைச் சேனையின் சிறப்பையும், 'ஓடாதன அடல்தானை' என்பதால் அடிக்கும் கோலுக்கு அஞ்சாது தலை தூக்கும் அரவு போல பகைவேந்தரின் முன்னணிப் படையின் மின்னல் தாக்குதலையும் பொறுத்து முன்னேறுவது அல்லாமல் பின்வாங்குதலை ஒருபொழுதும் அறியாத அவன் காலாட்படையின் சிறப்பையும், விளக்கி அவற்றின் மூலம் அவ்வரசனின் பெருஞ் சிறப்பு நன்கு புலனாமாறு செய்த ஆசிரியரின் கவிநயம் பலபடப் பாராட்டற்கு உரியது.

மேலும், அவ்வரசனைப்பற்றி ஆசிரியர் பலபடக்கூறி, முடிவாக "நீதிக்கொழுந்து சேர்கொழு கொம்பானன்" எனச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்றார். இளங் கொடிகள்பற்றிப் படர்வதற்கு ஆதாரமாக

உள்ள கொழுகொம்புபோல, நீதி என்னும் கொடி பற்றிப் படர்ந்து, வளர்ந்து செழிப்பதற்கு நிலைக்களன் ஆகத் தாவீது மன்னன் விளங்கினான் என்பது இத்தொடரின் கருத்து. இங்ஙனம் சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் என்னும் அழகு படக் கூறும் முறை, திருவள்ளுவர், கம்பர், சேக்கிழார்போன்ற தெய்வீகப் புலவர்கட்கே சாலும்; ஏனையோர்க்கு அமையாது என்பது தேற்றம்.

இத்தகைய சீரிய இயல்பு வாய்ந்த தாவீது மன்னனின் ஆட்சியில் வாழ்வார்க்கு யாதொரு குறையும், தீங்கும் நேரமாட்டா என்பது வெளிப்படை. ஆனால், ஆங்கு, குறை உண்டு என்றும், அங்குள்ளவர்கள் எப்பொழுதும் உளம் மெலிவர் என்றும், ஆசிரியர் குறிக்கின்றார். இதை நோக்கும்போது ஒன்றில், தாவீது மன்னனைப்பற்றி ஆசிரியர் கூறியன எல்லாம் புனைந்துரையாகல் வேண்டும்; அல்லது, ஆசிரியர் கூற்றுப் பொய்யாதல் வேண்டும் என்னும் முடிவுக்கே நாம் வருவோம். இங்குத்தான் ஆசிரியரின் கவித்திறமை நன்கு வெளிப்படுகின்றது.

ஆங்குள்ள குறையைப்பற்றிக் கூறுமிடத்து, ஆசிரியர் "கொடையைக் கொள்வாரில் குறையல்லது குறையில்லது" என்று குறிப்பிடுகின்றார். இதனால் ஆங்கு வாழ்வார்க்கு ஆடையில்லை, அணியில்லை, வீடுயில்லை, காடுயில்லை, துணியில்லை, மணியில்லை என்பனபோன்ற குறை ஒன்றும் இல்லை என்பதும், தாம் அறவழியில் ஈட்டிய பொருளை அறப்பயன் கருதி ஈய வேண்டும் என்று நினைத்தால் அப்பொருளைப் பெற்றுக்கொள்ளுவதற்கு யாசகர் இல்லாத குறையே உண்டு என்பதும் பெறப்படும்.

ஆங்குள்ளவரின் மெலிவைப்பற்றிக் கூறுமிடத்து "விருந்தோடுணவருகின்றவரிலரென்றுள மெலிவார்" என்று குறிப்பிடுகின்றார். இதனால் ஆங்கு வாழ்வார்க்கு வேறு வகையான மெலிவு ஒன்றுமில்லை என்பதும், தமது இல்லங்களில் விருந்தினரை உபசரிப்பதற்காக ஆக்கிய அறுசுவையோடு கூடிய உணவை, உண்டு களிப்பதற்கு வருவார் ஒருவரும் இல்லையே என்ற மெலிவே உண்டு என்பதும் பெறப்படும். இங்ஙனம் குறையையும், மெலிவையும் வேறு வகையில் நயம்பட விளக்கி ஆங்குள்ளவர்க்கு அறம்புரிவதிலுள்ள ஆர்வத்தைப் புலப்படுத்திய ஆசிரியரின் புலமைத்திறன் போற்றற்கு உரியது.

## கோயிலின் சிறப்பு

இனி, எருசலேம் நகரத்தின் நடுநின்று மிளிரும் கோயிலை வருணிக்கத் தொடங்கிய ஆசிரியர், "இன்னருங்கவின்கண்டயர் வுறீ இவுரையும் இமைப்புமில்லாயினமாதோ" என்று அதன் சிறப்பை வெளியிடுகின்றார். ஓர் தேவாலயத்தின் சிறப்புத் தோன்ற வேண்டுமாயின், அங்குச் செல்பவர், ஊமையராயினும் நன்கு பேசுவார்கள்; குருடர்கள் ஆயினும் கண்பெறுவார்கள் என்று கூறவேண்டும் அன்றோ? அவ்வாறு அன்றி, ஆசிரியர் எருசலேம் நகரத் தேவாலயத்திற்குச் செல்பவர் வாய் வார்த்தையும், கண் இமைத்தலும் இழந்து விடுவர் எனக் குறிப்பது நமக்கு விந்தையாகவே தோன்றும். ஆயினும் உண்மை என்னவெனில், அத்தேவாலயத்திற்குச் செல்பவர், ஆங்குச் சுவர்களில் தீட்டப்பெற்றிருக்கும் உயிர் ஓவியங்களைக் கண்டு, வியந்து, அவற்றின் அழகில் ஈடுபட்டு, மனத்தைப் பறிகொடுத்து, மதிமயங்கி, அவற்றைப்பற்றிக் கூறுவதற்குவகை அறியாது வாயிழந்தும், அவ்வோவியங்களைக்

கண்கொட்டாது பார்ப்பதால் கண் இமைத்தலை இழந்தும் விடுவார்கள் என்பதே. இங்ஙனம், கோயிலின் சிறப்பைச் சாதுரியமாகக் கூறிய ஆசிரியரின் கற்பனைத் திறமையை என்னென்று புகல்வது.

இன்னோரன்ன கற்பனைச் சித்திரங்கள் தேம்பாவணியிற் பல இடத்தும் காணப்படும். அவற்றை விரித்தெழுதப்புகின் பல கட்டுரைகளாய் அமையும்; ஆதலின் விரிவஞ்சி இத்துடன் முடிக்கின்றேன். இச்சிறு கட்டுரையிற் காணப்படும் குற்றங்களைந்து குணம்மெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன் என்பதை மீண்டும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.


When You buy

Truthful
READY MADE CLOTHES

You buy beauty for you and Save Money too!

THE WESTERN OPTICAL COY.,
81, EAST AVANI MOOLA STREET, MADURA.
தி வெஸ்டர்ன் ஆப்டிகல் கம்பெனி,
81, கிழ் ஆவணி மூலவிதி, மதுரை.

ஐயா, எங்களிடம் உயர்ந்த ரக கண்கண்ணாடிகளும், நவினமானுசான பிரேம்களும், கூடு வகையருக்களும் கிடைக்கும்.



வாட்சுகள், கிராமபோன்கள் கியாரண்டியுடன் குறித்த நேரத்தில் ரிப்பேர் செய்து தரக்கூடும்.

கைத்தரி ஆடைகளில்!
நவீன ரகங்கள்
கெட்டிச்சாயம்
அழகிய பார்டர்கள்
நீடித்த உழைப்பு
புடவைகள், வேஷ்டிகள்
அங்க வஸ்திரங்கள்
கிடைக்குமிடம், மதுரை.
நெசவாளர் கூட்டுறவு விற்பனைசங்கம்
211, கீழமாரட்டுவீதி மதுரை.

# மெய்ப் புலவர்

திரு. ரம்போலா மஸ்கரனுஸ், M.A.

போலிப் புலமையும் போலிப் புலமையை ஆதரிக்கும் பிரசுர நிலயங்களும் பெருகிவருகின்ற இந்நாளில் மெய்ப்புலவர் யார் என்று தெளிதல் நிரம்பவும் தேவையானதொரு காரியமாகும். நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள். பொய்ப் புலமை தாண்டவமாடும் இக்காலத்தில்தான் மெய்ப்புலமையின் மேன்மையை உள்ளவாறு அறிந்து கொள்ளும்படியான ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது என்னலாம்.

புலவன் என்ற சொல்லுக்கு அறிகின்றவன் என்பது பொருள். இங்கே அறிவு குறிப்பாக காட்சியறிவை யுணர்த்தும். என்னே? ஏனைய அறிஞர்கள் காண்பதில்லேயோ, புலவர்கள் மட்டுந்தான் காண்கிருர்களோ என்ற ஐயம் எழலாம். பிற அறிஞர்களும் காண்கிருர்கள். ஆனல் அவர்கள் காண்பதொரு வகை. புலவர்கள் காண்பது பிறிதொரு வகை. அவர்கள் காண்பதற்கும் புலவர்கள் காண்பதற்கும் பாரதூர வேறுபாடு உண்டு. ஒரு பெரியவர் சொன்னபடி "மரத்தைப் பார்க்கின்றபோது கட்டையைப் பார்க்கின்ருன் விஞ்ஞானி. கட்டையைப் பார்க்கின்றபோது உயிர் களிநடம் புரிகின்றதான மரத்தைப் பார்க்கின்ருன் கலேஞன்."

மெய்ப்புலவனுக்கு சொல்லடுக்கும், யாப்பமைதியும் அணி அலங்காரமும் வெறுங் கருவிகளே. பொருள் ஆழந்தான் அவனுடைய குறிக்கோள். சொல்லடுக்கு, யாப்பமைதி, அணி நலம் ஆகிய இவை உடல், பொருள், உயிர். "பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல சொல்லாற் பொருட் கிடனுக வுணர்வினில் வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" என்றது இதுபற்றித்தான் என்க. புலவன் சொல்லே ஆளுகின்ருன்; சொல்லால் ஆளப்படுகின்ருனில்லே. "எனே வைத்தி, எனே வைத்தி:எனப்பதங்கள் இடையிடை நின்றிரந்து வேண்ட இனி வைப்பாம், இனி வைப்பாம், பொறுத்திடுமின், பொறுத்திடுமின் என்று கூறி" உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளே, உண்மை உணர்ச்சிகளேச் செவ்விய முறையிலே சொன்னயம்படச் சொல்லும் ஆற்றல் மெய்ப்புலவனுக்கு இயல்பாம். மக்கள் பன்னெடுங்காலம் செய்யும் பேருழைப்பின் பயனுய்க் காணக்கூடிய உண்மைகளே அவன் ஒரே நொடியில் கண்டு அவ்வுண்மைகள் அவர்தம் உளக் கோயிலிலே என்றும் நின்று விளங்குமாறு செய்கிருன். அவனும் அமரத் தன்மை பெறுகிருன். அழிந்தும் அழியாத் தன்மை பெறுகிருன். இறந்தும் இறவாத சிறப்புடன் இருக்கிருன்.

அவன் சொல்லும் பொருள், எண்ணும் பொருளாக அமைகின்றது. நவில்தொறும், நவில்தொறும் நவநயங் காணும்படி மிளிர்கின்றது, அவனது பாடல். அவன் சொல்லே அடுக்கி, இல்லாத ஒன்றினே இயற்றி, அல்லது இருக்கின்ற பொருளுக்கு எவராலும் அளிக்கமுடியாத ஏற்றம் அளித்து நமக்கு நல்குகின்ருன். நாம் நம்மை மறந்து அதிலேயே லயித்து விடுகிருேம். நம்முடைய பார்வைக்கு உயிரற்றுப் புல்லிதாய்த் தோன்றும் பொருட்கள் அவனுடைய காட்சிக்கு பேருண்மைகளேப் பேசும் பென்னம் பெரும் உயிர்ப் பொருட்களாய்த் தோன்று

கின்றன. காற்றிலே அசையும் மிகப் புன்மையான மலர் அவன் கண்ணீர் வடிக்கவுங் கூடாதபடி அத்துணை ஆழ்ந்த எண்ணங்களை அவனிடம் எழுப்பிவிடக்கூடும். அவனோடு மரங்கள் சல்லாபிக்கும். நீரோடைகள் அவனுக்கு நல்ல நூல்களாய் அமையும். கற்பாறைகளிடமிருந்து அவன் உபதேசம் பெறுவான்.

உயர்ந்த அநுபவ உணர்ச்சி மெய்ப் புலவனுக்குரியது. அவ்வுணர்ச்சியின் மொழிபெயர்ப்பே அவனுடைய பாடல். இத்தகைய அநுபவ உணர்ச்சியும் அதனைப் பாட்டிலே மொழிபெயர்க்கும் ஆற்றலும் ஒருசேர எல்லார்க்கும் வாய்ப்பதில்லை. இவை இயற்கையில் வாய்க்கப் பெற்ற நன்மக்களே, கவிஞர்கள்என ஏற்றுதற்குரியவர். "கவிஞர்கள் பிறக்கிறார்கள்" என்ற இலத்தீன் பழமொழி ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. கவிஞர் எனப் பெயர் பெறுவோர் கருவிலேயே கவி பாடுந் திரு அமைந்த செல்வர்கள் என்பது இப்பழமொழியின் திரண்டபொருளாகும்.

நந்தமிழ் நிலத்திற் றோன்றிய இளங்கோ, திருத்தக்க தேவர், கம்பர் ஆகிய இன்னோர் பிறவிக் கவிஞர்கள் என்பதில் இம்மியளவும் ஐயமுண்டோ? இவர்கள் இயற்றிய சிலப்பதிகாரமும் சிந்தாமணியும் இராமாயணமும் விழுமிய கருத்துக்களையும் நுண்பொருட்களையும், இயற்கை வருணனைகளையும் ஏனைய புலமைச் சிறப்புகளையும் தம்மகத்தே கொண்ட கலைக் கோயில்களாகத் திகழ்கின்றனவென்பதை எவரே மறுக்கவல்லார்?

மேற்கூறிய காப்பியக் கவிஞர்களோடு ஒருசேர வைத்தெண்ணப்படத் தக்கவர் இத்தாலிய நாட்டிலிருந்து இந்நாடு போந்த சங். வீரமாமுனிவர். இவர் தேம்பாவணி என்னும் தீந்தமிழ்ப் பெருங் காப்பியத்தையும், திருக்காவலூர்க் கலம்பகம் போன்ற அரிய சிறு நூற்களையும் இயற்றியுள்ளார். திரு. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை கூறுகின்றபடி காவிய நயத்திலே சிந்தாமணியோடு போட்டி போடுகின்ற அளவில் அத்துணை திறம்பட யாக்கப்பெற்ற முத்தமிழ்ச் சுவைகளும் பொருந்திய உயர்காவியம் தேம்பாவணியாம். இதைப் பயில்கின்றவர், சுவாமியவர்கள் கம்பரது காவிய அமைப்பைப் பின்பற்றி, சிந்தாமணியின் இலக்கியச் சுவை யொரு சிறிதும் நந்தாவகையில் தம் காப்பியத்தைச் செய்து முடித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுகொள்வர். தேம்பாவணியும் பிற சிறு நூல்களும் இவரது சமய பக்தியையும் தமிழ் உணர்ச்சியையும், நுண்மாண் நுழை புலமையையும் தெற்றென விளக்கிக் காட்டும் கவியோவியங்களாகக் காட்சியளிக்கின்றன. இறையன்பு, இயற்கை எழில், ஈடும் எடுப்புமில்லாத உயரிய குறிக்கோள்கள், சொற்சுவை, இன்னோசை, பொருள் ஆழம் இவை எல்லாம் சேர்ந்து உருப்பெற்றெழுந்தாலன்ன இவர் பாடல் விளங்குகின்றது.

இரண்டாந்தரப் புலவர் குழுவிலே வீரமாமுனிவருக்கு முதல் இடம் அளிக்கலாம் என்று கூறிவிட்டு, "நான் தேம்பாவணியைப்பற்றி எண்ண, எண்ண, ஒரு அந்நிய நாட்டினர் தமிழில் இவ்வளவு உயர்ந்த நிலை எய்தலாயிற்றே என்பது பற்றி எனக்கு அதிகமதிகமாக ஆச்சரியமுண்டாகின்றது" என்றார் கால்டுவெல் ஐயர். இவர்தம் கூற்றுப் பொருந்துமாறென்னை? அறிஞர் பூரணலிங்கம்பிள்ளை கூறுகின்றபடி திருத்தக்க தேவரோடு

போட்டிபோடும் அளவில் திறம்படப் பாவியற்றிய வீரமாமுனிவருக்கு இரண்டாந்தரப் புலவர் குழுவிலேதானா இடங்கொடுக்கவேண்டும்? காய்தல் உவத்தலின்றி நடுநிலைமையோடு கவிநய ஆராய்ச்சியில் ஈடுபடுவார்க்கு வீரமாமுனிவர் தேவர் அனைய புலவர், கம்பரையொத்த காவிய கர்த்தா என்ற உண்மை தெரியாமற்போகாது. கால்டுவெல் ஐயர் கருதுகின்றபடி அந்நிய நாட்டினர் இவ்வளவு உயர்நிலை எய்தியதைப்பற்றி ஆச்சரியப்பட இடமில்லை. அந்நிய நாட்டினராய் இருந்த காரணத்தாலேயே இத்துணை உயர்நிலை எய்தினர் என்று கொளல் பொருந்தும். தாய்மொழிதானே என்ற அலட்சிய புத்தியோடு தமிழ்பயிலும் மாணவர்களைக் காட்டிலும் தமக்குப் புதுமொழி என்ற நினைவோடு கருத்தூன்றிப் பயிலும் பிறமொழி மாணவர்கள் தமிழிலே தமிழர்களைக் காட்டிலும் மிகுந்த அறிவுபெறுவது நாம் கண்கூடாய்க் காண்பதொன்றாம். வீரமாமுனிவரிடம் தமிழ்மொழியார்வம் மிக்கிருந்தது என்பதை அவர்தம் வரலாற்றிலிருந்து அறிகின்றோம். இவர் ரோமை மாநகரில் கலைபயிலுங் காலத்திலேயே இவருடைய சிரேஷ்ட குருக்கள் இவருக்கு இயற்கையாயமைந்திருந்த மொழிநூல் திறமையைக் கருதியே இவரை அயல்நாட்டு சமயபோதனைக்கு அனுப்பிவைத்தார்கள் என்பது இவரது வரலாற்றிலிருந்தும் நாம் அறியும் செய்தியாகும். இறைபணி செய்தல்வேண்டும் என்ற ஏக சிந்தனையால் உந்தப்பட்டு அப்பணியைத் திறம்படச் செய்ய நாட்டுமொழித் துணை வேண்டற்பாலது என்பதை தெள்ளிதின் அறிந்து முனிவர் அம்மொழிப் பயிற்சியில் முயன்றுழைத்தாராதலின், இறைவன் அருட்டுணையால் இலகுவில் மொழிப்புலமை பெற்றார் என்று நாம் கொள்ளுதல் தகும். இந்நிலையில் முனிவர்தம் புலமைப் புகழ் ஐயுற்று ஆராயப்படாத உலகறிந்த நல்ல புகழென்பது தேற்றமாம்.

சுப்பிரதீபக் கவிராயரைக் கொண்டு பெஸ்கி சுவாமிகள் நூல் எழுதினார்கள் என்ற கருத்துப்பட திரு. மு. அருணாசலம் அவர்கள் கூளப்பநாயக்கன் காதல் என்ற நூலின் முகவுரையில் குறித்திருக்கின்றார்கள். கவிதோறும் கத்தோலிக்கு சமய மணங்கமழ் பெருங்காப்பியமொன்றை, கத்தோலிக் சமய வரலாறுங் கொள்கைகளும் மல்கியதொரு காப்பியமொன்றை, ஒரு புறச்சமயத்தினர்—அவர் எவ்வளவுதூரம் கத்தோலிக் சமய போதனையை அறிந்திருந்தாலும்—இயற்றியிருக்கக்கூடும் என்று எண்ணுவதற்கு இடமில்லை. கவிராயர் கத்தோலிக் சமய போதனையை அறிந்திருந்தார் என்பதற்கு ஆதாரமில்லை. அவர் சுவாமியவர்களுக்குத் தமிழாசிரியராயிருந்தார் என்பதற்குங்கூட உறுதியான சான்றுகள் இல்லை. எனவே "கவிராயர் இவருக்கு (சங். பெஸ்கி சுவாமிகளுக்கு) தமிழ் கற்பித்ததுமட்டுமின்றி, பல தமிழ் நூல்களை இயற்றித் தந்து, இவர் தமிழ் நூல்கள் பல இயற்றவும் துணைபுரிந்தார்" என்று திரு. அருணாசலம் அவர்கள் கூறுதற்கு எதை ஆதாரமாகக் கொண்டார்களோ தெரியவில்லை. முற்றுந் துறந்த முனிவர் புகழ் விரும்பி பிறர் நூலை தம் நூலாகக் கூறும் ஒழுகலாறு அவர்தம் துறவுக்கே இழுக்காம். எனவே இக்கூற்று பொருந்தாதென விடுக்க.

சுவாமியவர்கள் இயற்றிய கிளாவிஸ் (Clavis) என்ற இலத்தீன் நூலிலே செய்

யுள் இவ்வாறு இயற்றப்பெற வேண்டும் என்று கூறுகிறார்கள். தமிழ்ப் புலவர்கள் பலர் யாப்பு அமைதியை அநுசரியாமல் இசைப் பொருத்தத்தை நோக்கியே பாவியற்றுந் தன்மையை வன்மையாய்க் கண்டிக்கிறார்கள். யாப்பமைதியின் தேவையை வலியுறுத்துகிறார்கள். எனினும் யாப்பமைதிமட்டும் செய்யுளின் உயர்வைக் காட்டாதென்றும், பாட்டிலே பொருள் ஆழமிருத்தல் வேண்டும் என்றும், படித்தமாத்திரத்திலே சாதாரண பொருளுடையதாகத் தோன்றினும் நுணுகிப் பார்க்கின்றபொழுது ஆழ்ந்த பொருளுடையதா யிருத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றார்கள். இவ்வாறு எடுத்துச் சொல்லும் நல் இலக்கணங்களெல்லாம் அவருடைய இலக்கியங்களாகிய தேம்பாவணி திருக்காவலூர்க் கலம்பகம் முதலிய நூற்களில் அமைந்திருக்கக் காணலாம்.

தமிழ் மொழிக்குப் பலதுறைகளிலும் தொண்டாற்றி, "என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்ட" பெருமக்கள் வரிசையிற் சேர்ந்த இம்மெய்ப் புலவர் பெருமானைத் தமிழுலகம் சரியாக அறிந்துகொள்ளுகின்ற வழியில் ஆவன செய்ய தமிழ்க் கத்தோலிக் சமுகம் விறுகொண்டெழ வேண்டும்.

---


## எதிர்பாராத அதிர்ஷ்டம்

மிகவும் குறைந்த விலைக்குச் சிறந்த நாவல்களும், செந்தமிழ் நூல்களும், இனிய சிறிய கதைப் புத்தகங்களும், லாட்டுகளாக அளிக்கப்படுகிறது. அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| ரூ. 16 | விலையுள்ள | நாவல்களும் இதர புத்தகங்களும் | ரூ. 4 0 0 |
| ரூ. 20 | ,, | 60 செந்தமிழ்ச் சிறு கதைப் புத்தகங்கள் | ரூ. 5 0 0 |
| ரூ. 5½ | ,, | 15 இனிய தமிழ்ப் புத்தகங்கள் | ரூ. 1 14 0 |
| ரூ. 7½ | ,, | 22 புத்தகங்கள்கொண்ட புத்தகக்கதை விருந்து | ரூ. 2 8 0 |
| ரூ. 12 | ,, | 25 அரிய செந்தமிழ் நூல்கள் | ரூ. 4 0 0 |

தபால், ரயில் செலவுகள் பிரத்யேகம், விரைவில் ஆர்டர் செய்க.

உரை காண்பார்க்கும், போட்டிப் பந்தய விடை எழுதுவோர்க்கும் பயன்படத் தக்க இன்றியமையாத தமிழ் அகராதிகள்

| | | | |
|---|---|---|---|
| வீரமாமுனிவர் சதுர்கராதி | ரூ. 3 0 0 | மதுரைத் தமிழ்ப் பேரகராதி | ரூ. 10 0 0 |
| குறைந்த ஸ்பெஷல் விலை | ரூ. 2 4 0 | குறைந்த ஸ்பெஷல் விலை | ரூ. 8 0 0 |
| நளவெண்பா மூலமும் உரையும் | ரூ. 1 8 0 | திருப்புகழ் 642 பாடல் சந்தக்குழிப்பும் அரும் பதவுரையும் (1-ம் பாகம்) | ரூ. 2 0 0 |
| நன்னூல் மூலமும் முகவை இராமாநுசக் கவிராயர் விருத்தியுரையும் | ரூ. 2 8 0 | திருப்புகழ் 614 பாடல் ஷை (2-ம் பாகம்) | ரூ. 2 0 0 |
| ஹிந்தி ஆசான் | ரூ. 1 2 0 | ஷை 2 பாகமும் சேர்ந்த கட்டடம் | ரூ. 3 12 0 |

### இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்

ஸ்ரீ கோபால் மஹால்
வடக்குச் சித்திரை வீதி,
மதுரை.

புத்தக வியாபாரம்

289, சைனா பஜார்,
சென்னை.

## சங். வீரமாமுனிவர்மீது பாடப்பெற்ற

# வாழ்த்துப்பா

—:o:—

(தூத்துக்குடி, பண்டித எம். பி. மஸ்கரனுஸ்)

1. அன்னையர்கள் பலர்கூடிப் புரிந்த தான
அருந்தவத்தில் பிறந்தனநம் அழகு மாதா
உன்னதமேய் தமிழ்மாதா நெடுநாட் செய்த
ஒப்பரிய புண்ணியத்தின் உருவாய் வந்த
நன்னயமார் கொன்ஸ்தந்தின் ஜோசெப் பெஸ்கி
நாவலரும் பாவலரும் நயந்து வாழ்த்தும்
மன்னுபுகழ் பெரும்புலவ னவன்நன் ஞானம்
மாபெரிய வைபவமாய் மதித்து வாழ்வாம்.

2. வித்வஜனர் பெஸ்கியது திறமை கண்டு
வீரமா முனிவனென வேய்ந்தார் நாமம்
தத்துவத்தை யுணர்ந்தவரால் அன்றோ யின்னுன்
தயிரியதே சிகனெனும்பேர் தரிக்கப் பெற்ருன்
முத்தமிழும் ஒருங்கிணைந்து வடிவ மான
முதிர்கலைஞ னிவன்நூலின் முறைமை யோர்ந்தோர்
இத்தகைய வுயர்கவியை யாங்கள் காண
எத்தவமோ செய்தமென இயம்பு வாரால்.

3. பிங்கலமும் திவாகரமும் நிகண்டும் தேடிப்
பேரனுப்புக் கொள்ளாத பெற்றி காண
இங்கெவரும் நினையாத பொழுதே பெஸ்கி
எழிலியதோர் அகராதி யியற்றித் தந்தான்
தங்குதடை யில்லாமல் எவரும் கற்பான்
சன்மார்க்க போதனைகள் தவரு தோங்க
அங்கனியும் நல்லமுதும் பாலும் தேனும்
அமைதருதேம் பாவணிநூல் அளித்தான் சிங்கம்.

4. நன்னூலும் அதன்முதனூல் பலவும் தேர்ந்த
நயத்தையெலாம் திரட்டியிவன் நமக்குத் தந்த
தொன்னூலை விளக்கமொடு படிப்பார் வேறு
துறைபுகுந்து விதியுணரத் துணிவார் கொல்லோ
பொன்னூலில் நவமணியைக் கோத்தா லொத்த
பொலங்காவற் கலம்பகத்துப் பொலிவு கண்டார்
எந்நூலை விழைகுவர்கொல் பெஸ்கி பேரை
இரவுபகல் புகழாமல் இருப்பார் யாரே?

5. அந்தாதி மாலைஉலா வசன நூல்கள்
அம்மானை அருள்புலவர் ஆங்காங் குண்டு
பிந்தாத குணமுடைய அவரெல் லோரும்
பின்பற்று வழிவகைகள் பெய்த வாறு
சிந்தாத நெறிதெளிந்த இவனே முன்னல்
செப்பியநூல் அத்தனையும் செய்துவைத்தான்
எந்நாதை திருநாளைப் பெருநா ளாக
எவர்கொள்ளார் எவர்விள்ளார் இகத்தில் அம்மா!

6. ஒன்றிரண்டு பாஷைமட்டும் தெரிந்தா னல்லன்
ஒன்பதுக்கும் மேலாக உணர்ந்த வள்ளல்
அன்றரிய குரவனெடு நின்று னில்லன்
அரசினுக்கோர் அமைச்சனுமாய் அமர்ந்த செம்மல்
மன்றுதுதி கவிஞரொடும் இருந்தான் அல்லன்
மருத்துவர்க்கும் வயித்தியனு வதிந்த வாமன்
இன்றிருந்து நாளையிலா மனிதன் அல்லன்
என்றைக்கும் இறவாத இயல்போன் என்பார்

7. கல்லூரி இவன்நாமம் கவர வேண்டும்
கழகங்கள் இன்னவன்பேர் காண வேண்டும்
நல்லதிரு வுருவங்கள் இவனைப் போல
நாட்டிடத்து நாம்பரப்பும் நயங்கள் வேண்டும்
சொல்லுவதில் எழுதுவதில் பெஸ்கி தந்த
சுகிர்தமொழி முதன்முதலில் துலங்க வேண்டும்
எல்லவரும் எவ்விடத்தும் இவனை என்றும்
எந்தையெனக் கண்டடையும் இதயம் வேண்டும்.

# தேம்பாவணியின் மாட்சி

சாத்தூர் திரு. T. S. கந்தசாமி முதலியார், B.A.

இத்தாலியா தேசத்தினின்று செந்தமிழ் நாடு வந்து, தமிழ் மொழியையும், தமிழ வழக்கையும் மாசறக்கற்று தமிழ் மொழிப்புலமை யெய்திய பெரும் புலவரும் கவிஞருமாய் விளங்கிய வீரமாமுனிவர் செய்தருளிய பெருங்காப்பியம் தேம்பாவணி எனப் பெயர் பெறும்.

தேம்பாவணி சூசையப்பர் தெய்வ சரிதையை தமிழ் சுவை ததும்புமாறு சொல்லிச் செல்லும் ஒரு சுவைமிக்க காவியம். அதனை ஆக்கிய கவிஞர் ஐரோப்பிய நாட்டினராயினும், அவர் தமிழ் மொழியின் கண்ணுள்ள அழகிய திருக்குறள் என்னும் நீதி நூல்களையும், சிவகசிந்தாமணி முதலிய காவியங்களையும் நன்குகதோய்ந்து பயின்று அவற்றில் காணப்பெறும் சொற்களையும், பொருட்களையும் தம்மனதிடைக் கொண்டு தம் நூலில் அவற்றை ஆங்காங்கு விரவ பயன்படுத்தியுள்ளார்.

தேம்பாவணியைப் படிப்போர் யாரும் அதன் சொல் நோக்கத்திலும் பொருள் நோக்கத்திலும் ஈடுபடாமலிரார். அந்நூலைப் படிக்குந்தோறும் கலைஞர்கள் இன்பம் எய்துவர் அதன் நயங்கள் பலவற்றையும் விரிவுரையாளர்கள் பலர் எனக்கு முன் பேசிப் போந்தமையால் அவர்களால் பேசப்பெறாது விடப்பட்ட சிற்சில பகுதிகளைமட்டும் நான் குறித்துச் சொல்லலாம் என்னும் கருத்துடையேன்.

தேம்பாவணி ஒரு பெருங் காப்பியம் எனக்கூறினேன். பெருங் காப்பியத்திற்கு ஈடும், எடுப்புமில்லாத ஒரு தலைவன் வேண்டும். அக்காப்பியத் தலைவன் ஈண்டு சூசைமாமுனிவர் மண்ணுலகிலகில் பிறந்தாரெனினும் மாசற்ற அறத்தில் தலைநின்ற தாவீது மன்னனின் வழியில் தோன்றி மிக இளைஞராக மூன்று வயதுடையவராயிருந்தபொழுதே கடவுளின் திருவடிகளை காணவேணுமென்னும் பெரும் விருப்புடையவராய் இல்லறம், துறவறம்என்னும் இரு நதிகளில் துறவில் பற்றுடையவராய் உலகின் செல்வங்களில் சிறிதும் பற்றில்லாதவராய் வறுமையும், நோயும் தம்மை வந்துற்ற காலத்தும் அவற்றால் மனம் தளராதவராய் மரியம்மையாரை மணந்தும் துறவறத்தினின்றும் சிறிதும் நழுவாதவராய் உலக மக்கள் அனைவருடைய பாவத்தையும் போக்குதற்கு உலகத்தில் பிறந்தருள திருவுளம் கொண்ட கடவுளுக்கும் வளர்ப்புத்தந்தையாயிருக்கும் பேர்பெற்று வானுலகடைந்து குலத்தோடு வானாட்சியும் செய்து கடவுளை அடைய விரும்பும் மக்களுக்கு ஏற்ற வரங்களை நல்கும் திருவுடையராவர். கடவுளடியாரின் தலைநின்ற சூசையப்பரினும் சிறந்த காவியத் தலைவன் இல்லை என்றே சொல்லலாம். அத்தகைய காவியத் தலைவருள்ளும் கடவுளடியார்களே சிரிய காவியத் தலைவராவதற்கு உரியவர். கடவுளடியார் சரிதங்களைக் கூறவந்த ஆசிரியருள் சேக்கிழார் ஒருவர், வீரமா முனிவரும் ஒருவர். கவிசெய்வதற்கு ஆற்றலுடையவர் யாரும் அடியார் சரிதங்களைக் கூறிவிடலாம் என்று எண்ணுதல் தவறு; முடியாத காரியம். அடியார் சரிதம் கூறும் கவி, தானும் ஓர் அடியாராக இருத்தலோடு அடியாரிடத்திலும் அடியார் அன்புடையராயிருத்தல் வேண்டும்.

வீரமாமுனிவரும் இறைவன் அடியார்க்கு அடியார்களிடத்து பெரும் காதலுடையார். காவியத்தைத் துடங்கும் காலத்து காவியத் தலைவருடைய நாட்டையும், நாமத்தையும் தோய்ந்து கூறுதல் பண்டைத் தமிழ் வழக்கு. அவ்வழக்கைப்



CHRIST THE KING—கிறீஸ்து ராஜா

பற்றியே நில உலகில் சிறந்ததும், சூசை பிறப்பகமுமா யுள்ளதுமாகிய யூதேயா நாட்டையும், எருசலேம் நகரத்தையும் வர்ணிக்கப் புகுந்தவிடத்து, அவைகளைத் தமிழ் மரபுபற்றியே பலவகை அணி செய்து கூறுகிறார்.

நெற்பயிர்கள் நிறைந்த வயலை வர்ணிக்கப்புகுந்த சேக்கிழார் கூறுவதை நோக்குக. வயல்களில் நெற்பயிர்கள் முதிர்ந்து நன்றாக வளர்ந்து நெற்கதிர்களை தாங்க மாட்டாமையால் நெற்பயிர்கள் யாவும் தலை வணங்கி வளர்ந்து கிடக்கின்றன. அதனைக் கண்ணுற்றார் சேக்கிழார். அவ்வயல்கள் நிறைந்த நாடு கடவுளடிகள் நிறைந்த நாடு. அதனை விரித்துக் கூறப்புகுந்த சேக்கிழார் உள்ளம் கடவுளிடத்தும் அவர்களடியார்களிடத்தும் கொண்டுள்ள மெய்க் காதல் நிறைந்தது.

ஆதலால், நெற்பயிர்கள் கதிர்கள் முற்றி வளர்ந்து ஒன்றோடொன்று நோக்கியிருப்பதைக் கண்ட கவிஞர் மனக்கண்ணின் முன்னே கடவுளடியார்கள் பலர் ஓரிடத்து ஒன்றாய்க் கூடியவிடத்து, அன்பின் பெருக்கத்தாலே ஒருவரையொருவர் தலை வணங்கி நின்ற காட்சியைக்கண்டு பக்தியின் பாலனாகிய பாமனுக்கு ஆராதனை செலுத்த பக்தர்கள் தலைவணங்குகின்ற தன்மைபோல், நெற்கதிர்கள் வணங்கி நின்றன எனக் கூறுகின்றார். அதுவேபோல் நம் வீரமாமுனிவரும் குறிஞ்சி நிலத்தில் இருந்து குறிஞ்சிநிலப் பொருட்களாகிய மணி, முதலியவைகளை வாரிக்கொண்டு நுரையோடு கூடிய வெள்ளத்தைக் கொண்டு ஓடுகிறது. ஆற்றுவெள்ளம் அப்படி ஓடுங்கால் முல்லை நிலத்திலுள்ள வாசமலர் தேனோடு பெருகுகிற மருதநிலச் சோலைகளில் தவழ்ந்து அச்செல்வங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிக் கடலை நோக்கிச் செல்லாநிற்கும். இதனை உலகச் செல்வங்களின் இடையே யிருப்பினும் அவைகளையெல்லாம் வெறுத்து மோட்சமொன்றே விரைந்து நாடிச் செல்லும் தபசிகளுக்கு ஒப்பிடுகிறார்.

அஞ்சிலா வேதி ரடக்கிய கல்லெலாங் கடந்தே
யெஞ்சிலா வெழிலிமைத்த நீண் மருதமு நீக்கித்
துஞ்சிலா நதி துடர்ந்த கல் கருங்கடனோக்கல்
விஞ்ரையா ரெல்லாம் வெறுத்து வீடிவழியபோன்றே.

(27-ம் படலம் 8-ம் பாட்டு)

மற்றும் ஓரிடத்தில் ஐம்பொறிகளையும் அவை செல்லும் வழியில் விடாது அடக்கிப் புண்ணிய வழியில் செலுத்தும் பெரியோர்கள்போல உழவர்கள் அவ்வெள்ள நீரை புறத்தேவிடாது தடுத்து வயலிடைக்குச் செலுத்துவார்கள். இத்தகைய உவமை கூறுதல் முனிவர்கள் போன்ற அடியார்களிடத்துமட்டுமே காணலாம்.

கடவுள்பாலன்புடையார் பெரும்பாலர் காவியத்திலே திருவுடையார் இளமைப் பருவத்திலேயே கடவுள் பக்தி நிரம்பப் பெற்றவர்கள். சைவ சமய ஆச்சாரியர்களில் ஒருவராகிய திருஞான சம்பந்தர் தம் மூன்றாவது வயதிலேயே பக்தி முதிரப் பெற்றுக் கடவுளை “தோடுடைய செவியன்” என்னும் திருப்பாசுரத்தால் போற்றினர். சூசைமாமுனியும் தம் மூன்றுவது வயதிலேயே தெளிந்த மெய்யுணர்வுடையவராய் ஆண்டவர் பாதத்தை நெற்றி தரையில்பட விழுந்து வணங்குகிறார்.

கன்னிமரியம்மையாரும் தம்முடைய மூன்றாவது வயதிலேயே கடவுளிடத்து பேரன்புடையவராய் விளங்கினர். பெரியார் தோன்றும் திரு மரபு அவர் தம்

தாய் தந்தையரின் மரபுகள் மிகப் புனித முடையவைகளாயிருக்கும். இவ்வுண்மை எல்லாச் சமயங்களுடையவும் மெய்யடியார் சரித்திரத்தும் காணலாம். அவ்வுண் மையை சூசையப்பர் மரியம்மையாகிய இவர்கள் சரித்திரங்களுள்ளும் காணக் கிடக்கின்றது. அம்மாசற்ற இருவர் திரு மரபிலேதான் மானிடர்க்கெல்லாம் அருள் சுரக்கவேண்டிய திவ்விய சேசுவும் வந்து தோன்றினர் என நம்முனிவர் தேம்பா வணியில் கூறிப்போயிருக்கின்றார்.

ஞான சம்பந்தரின் பெற்ரேர் கடவுளை நோக்கிச் தவஞ்செய்த பொழுது உலகிற் கெல்லாம் ஞான ஒளியைக் கொடுக்கும் ஒரு புதல்வன் வேண்டும் என்று கடவுளி டத்துக் குறைபிரந்து வேண்டினர் எனவும் அவ்வேண்டுகோட்கிணங்கி அவ்விருவரிட மும் திருஞானசம்பந்தர் திரு அவதாரம் செய்யக் கடவுள் அருள்சுரந்தனர் என வும் கூறுவர். சூசையும் மரியம்மையாரும் கடவுளை நோக்கி வணங்கும் காலத்து எல்லா உலகத்தார் இன்னல்களையும் போக்க மனதிரங்கி அவர்களுக்கு அருள் சுரக்குமாறு கடவுளை உலகத்தில் மனித உருவத்தில் திரு அவதாரம் செய்யுமாறு பலகாலமும் வேண்டினர். அவ்விருவ ரிடத்தேதான் கடவுளும் சேசுவாகத் திரு அவதாரம் செய்ய திருவுள்ளங்கொண்டார் எனத் தேம்பாவணியில் காண்கின்றோம்.

சூசையப்பரும் மரியம்மையாரும் துற விலே பற்றுடையவர்களாய் துறவிலே என்றும் ஏற்றம் பெற்று நிற்கவேண்டு மென்னும் கருத்துடையவர்களாய் வாழ்ந்துவந்தனர். அங்ஙனமிருக்கையில் அவ்விருவரும் அன்பின் பயனாய் கபிரி யேல் என்னும் வானவர் அவ்விருவர் முன் பும் தோன்றி அவ்விருவர் கருத்தையும் மாற்றுவித்து மணம் செய்வதற்கு உடன் படுமாறு செய்தார். அவ்வானவர் சொல் லுக்கு இருவரும் செவிசாய்த்தனர் எனி னும் தத்தம் பிரம்மச்சாரிய நிலை (கற்பு நிலை) குலையாதிருக்க வேண்டுமென்று வரங்கேட்டுப் பெற்றனர். அவ்வரம் பெற்று அவ்விருவருக்கும் மணம் நிகழ்ந் தது. அவ்விருவரும் இல்லறம் நடத்தி னர். அவ்விருவரும் ஒருவருக்கொருவர், வீடுபெற்றைத் துவிக்கும் வாழ்க்கைத்துணை வராக விளங்கினர். இவ்விடத்தில் இல்ல றம் துறவறம் எனப்படும் ஈரறங்களையும், இவர்களிடத்து பொருத்திக்காட்டும் தனிச்சிறப்பு நம்வீரமாமுனிவர் ஒருவ ருக்கேயுண்டு. அவ்விருவரும் துறவறத் தைக் கடைப்பிடித்து ஒழுகும் உறுதிப்பா டுடையவரெனும் அவ்வுறுதிப்பாட்டை தம் திருமணத்தின் முன் ஒருவருக்கொரு வர் கூறப்பெற்றிலர். ஆதலால் மணஞ் செய்தபின் தத்தம் கருத்தை ஒருவருக் கொருவர் கூறி அவை ஒருமித்தலைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தனர். இல்லறத் தின் பெறும் நலன்களையெல்லாம் அவ்விரு வரும் பெற்றனர். துறவறத்தின் நலன்க ளையும் அவர்கள் பெற்றார்கள். இல்லறத் தின் குறைகளை அவர்கள் ஒழித்தார்கள். இரண்டு அறங்களையும் ஒரு தலைவன் தலைவியிடத்தே பொருத்திக்காட்டியவர் நான் அறிந்தவளவில் வீரமாமுனிவர் ஒரு வரே. "தாவீது அரசர் மரபில் மூவுல கங்களையும் துறந்தவர் அரசர்க்கரசன் பிறந்தருள்வான்" என்ற வேதமொழி மெய்ப்பிக்கவேண்டி கபிரியேல் என்னும் வானவன் மணம் நிகழ்ந்த சில காலத்துக் குப் பின் மரியம்மாளிடம் தோன்றி அவளு டைய கருவில் அத்தேவ குமாரன் தோன் றுவார் என அருள் செய்தனர். அதைக் கேட்ட மரியம்மையார் தம் கற்பு நிலையின் விரதத்துக்கு வழுவாகுமெனக் கருதி அவ் வானவனிடம் விண்ணப்பித்தபோது அவ் வானவனும் அது கடவுளின் ஆணையாம் என விளக்கமுறச் சொல்ல அதற்குடன் பட்டாள் கன்னிமரி. சிறிது காலத்தில் மரியம்மையாரும் கருவுற்றார். அவரோடு

உடன் உரையாது வாழும் அவர் கணவனுர் சூசைமுனிவருக்கு அவள் கருவுற்றிருக்கின்ருள் என்னும் செய்தி குறிப்பினுல் தோன்ற மனம்நொந்து வருந்தினர். தம் பத்தா வருந்துவதையும் அவ்வருந்தலுக்குக் காரணம் இன்னதென்றறிந்த மரியம்மையார் தம் கருத்தை நேரே தன் அன்பருக்குக் கூறுதற்கு மனம் இயலாதவராய் இருந்தார். அவ்வம்மையார் அக்காரணத்தைக் கூறி தம் துணைவரை தெளிவுபடுத்தியிருக்கலாம். அங்ஙனம் செய்யாதிருந்ததற்குக் காரணம் யாது? கபிரியேல் என்னும் வானவன் தம்மிடத்தில் கூறியது ஓர் மறைவு. அதாவது தேவ இரகசியம் என்பதை அவ்வம்மையார் அறிவார். அத்தேவ இரகசியத்தைத் தாமே விளம்புவது ஆகாதெனக் கருதினுர். அது அவர் பெருந்தகமை. பின் என்ன செய்தனர்? தம் கணவருக்குண்டான ஐயுறவை தீர்ப்பது ஆண்டவரின் கடமை எனக் கருதி, அவர் ஐயுறவைத் தீர்க்குமாறு இறைவனிடம் விண்ணப்பித்தனர். அவ் விண்ணப்பத்திற்கிணங்கி இறைவனும் கபிரியேல் தூதனையே மீண்டும் அனுப்பி நிகழ்ந்தவற்றை சூசையப்பருக்குக் கூறி அவர் ஐயத்தைப் போக்கினர். தமக்கும் கடவுளுக்கும் நிகழ்ந்ததோர் இரகசியத்தை வெளிப்படுத்துதல் எவ்வாற்ருனும் தகாதென அவ்வம்மையார் கருதினர். கடவுளடியாரிடத்து காணப்படும் குணங்களெல்லாம் அர்ச். சூசையப்பர் சரித்திரத்தில் மிகச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதைக் காண்க.

முடிவில் அவர் பரலோக வீடுபெற்றதோடு நிலவுலகத்திலும் ஆட்சிபெற்று நில உலகமும் தம்மை வணங்கும் அடியார்களுக்கு வரங்கள் நல்குமாறு உரோமாபுரியிலும் திருக்கோவில் கொண்டுள்ளார் என வீரமாமுனிவர் கூறி முடிப்பது ஓர் இனிய முடிவைத் தருகின்றது. சூசையப்பர் சரிதையைக் கூறும் காவியங்கள் மிகச் சில. அவற்றுள்ளும் தேம்பாவணிபோல் சிறந்துள்ளது வேறு எம்மொழியிலும் இல்லை என அறிஞர் கூறுவர்.

வீரமாமுனிவர் வாழ்க!

---

## திருவள்ளுவரைப்பற்றி
## வீரமாமுனிவரின் புகழ்

"திருவள்ளுவ நாயனுர் பயனென் றெடுத்துத் தேற்றப் பொருள்வகைக் கியற்றமிழாய் விரித்துரைப்பப் பதிகமாவது, வேதநான்முத லெவ்வகை நூலுங் கல்லாதுணரவுஞ் சொல்லாதுணர்த்தவும் வல்லவராகி, மெய்ஞ்ஞானத் திருக்கடலாகிய வொரு மெய்க் கடவுடன் றிருவடி மலரே தலைக்கணியெனக் கொண்டேத்தி, யிருளிராவிடத்து விளங்கிய வொரு மீன் போலவும் பாலைச்சுரத் தரிதலர்ந்த பதுமம் போலவு மெய்யாஞ்சுருதி விளக்கா திருளே மொய்த்த நாட்டின் கண்ணுங் கடவுளேற்றிய ஞானத் திருவிளக்கெறிப்பத் தெளிந்துணர்ந் தெங்கு மொரு விளக்கென நின்றுயர்ந்த திருவள்ளுவர்........"

வீரமாமுனிவர்.
(தொன்னூல் விளக்கம்.)

# வீரமாமுனிவரின் தாய்நாட்டன்பு

**1**

சென்னுக நீர்பொழியத் தேன்பொழியும்
புன்னுகம் திருவிற் பூப்பக்
கன்னுக நீருமிழக் கவிநாகம் வெருண்டஞ்சக்
கல்லூர்ந்த
கொன்னுகம் ஒப்பமணி கொழித்தருவி பாய்ந்தோடக்
கொழுஞ்செய் வாய்ப்பப்
பொன்னுக மொய்ப்பவளர் புகழித்தாலிய நாட்டுப்
பொலிவிதன்றோ ?

**2**

விரைவாய்ப் பூந்தாழையுலாம் வெள்வளைபூ
வயலூர்ந்து மிளிர்முத்தீன்ற
கரைவாய்ப்பூஞ் சுனைபூப்பக் கனியாழ்வண்
டிமிர்ந்தோ கரங் களிகூர்ந்தாடுஞ்
சுரைவாய்ப்பூம்பொழில் காய்ப்பஈ றறமு
முச்சீறுஞ் சுகமோரேழு
நிரைவாய்ப்பூங் குடியாக நிமிரித்தா
லிய நாட்டு நிலையிதன்றோ?

**3**

பொருளீன்ற பெருஞ்செல்வப் பொலிவொழிக்கும்
வளம்புணரப் புகன்றநாடு
மருளீன்ற அவாவொழிப்ப வையகத்தினுதித்த
மறை யென்றேதுந்
தெருளீன்ற விளக்காகி அவனியெலாமாளுமித்தா
லிய நாடன்றோ ?

**4**

எனையீன்ற இணையா இத்தாலியநாடு
அளவின்றி இயலும் மாட்சி
சுனையீன்ற மலர்வாயான் துளி மதுப்போல்
இன்பழகும் சொல்லாற் சொன்னுன்."

(தேம்பாவணி)

தேம்பாவணியின்

# கதாநாயகரின் சனன மான்மியம்

திரு. S. செல்வராஜு முதலியார், B.A., L.T., தமிழ்ப் பண்டிதர்.

### சூசைமாமுனிவர் பிறப்பின் மகிமை

கடல் புடையுடுத்த இப் பூவுலகத்தில் சகல ஆன்மாக்களும் பாவமாகிய கடலைக் கடந்து, முத்தியாகிய கரையை யடைதற்காகவே, தன்னுயிரளித்துக் கருணைபொழியும்வண்ணம் வந்தவதரித்த எம்பெருமானுக்குத் கைத்தாதையாகவும், அப்பெருமானைக் கன்னி முத்திரை கெடாமல் ஈன்றளித்த மூவுலக வாசியாகிய மரியம்மாளுக்குப் பத்தாவாகவும் தெரிந்துகொள்ளப் பெற்ற பிதாப்பிதாவாகிய சூசை மாமுனிவரை அறிந்து வழிபட்டுயாதார் யாவர்?

கன்னியர்களாகிய தாரகை நடுவண், சோடச கலைகளும் நிறைந்துள்ள பூரண சந்திரன்போல் விளங்கும் தெரசம்மாள் மொழிந்த அமுதவாக்கின்படி, அம்முனிவர் பெருமானது பாதாரவிந்தத்தை நாடி அநுகூலம் அடையாதவரும் உண்டோ? அம்முனிவரை, ஆடையும், ஆகாரமுமின்றி அயரும் ஆதுலர்க்கு ஆதரவென்றும், தொழிலாளிகளுக்குத் தோன்றாத் துணையென்றும், விண்ணுலகின்பம் எய்துதற்பொருட்டு ஐம்புலனடக்கும் விரத்தருக்கு வீரமென்றும் பரிசுத்த திருச்சபை கூறுவதும் வீணாகுமோ? அன்றியும்,

அவருடைய அடைக்கலத்திலளிக்கப் பட்ட ஆலயங்களுக்கும், தெய்வ வழிபாட்டிற்குரிய செபக்கூடங்களுக்கும், சர்சனர் கூடிய சபைகளுக்கும், மாதவமியற்றும் மடங்களுக்கும், கலைநலமளிக்குங் கலாசாலைகளுக்கும் கணக்குண்டோ? இந்நிலவுலகத்தில் பிறந்த ஆண்மக்களுக்குள் அவரைப்போல் பேறு பெற்றோர் ஒருவருமில்லை. வானுலகத்தில் வாழும் பத்திச் சுவாலகர், ஞானாதிக்கர் முதலிய வானவர்களும் "வையத்தார் வானகத்தார் வணங்குகின்ற வரம்பெற்றமதிவல்லோனே!" என அம்முனிவரைப் புகழ்வாரானால், அம்முனிவர் பெருமானது புகழை நம்போலியர் எடுத்துரைக்க இயலுமோ?

மணி முடி சூடிய மன்னர் மன்னரும், பேரறம் வாய்ந்த பிதாப் பிதாக்களும், திரிகாலவுணர்ச்சியுற்ற தீர்க்கதரிசிகளும் தத்தம் கட்புலனும் செவிப்புலனும் பலனடையத் திருவுருவத்தைக் காணவும், திருமொழியைக் கேட்பவும் அளவிறந்த அவாவுற்றிருந்தும், காணாமலும், கேளாமலும் நின்ற உலக விரட்சகரைக் கண்ணாரக்கண்டு, அவரது அமிர்த மொழியைச் செவியாரக் கேட்டதுமன்றி, அவரைத் தமது திருக்கரத்தி லேந்தவும் முத்தமிடவும், வாழ்ந்திருந்தான். இவ்வண்ணந் தாவீதரசன் வாழுநாள் ஒரு நாள் நிராமயனாகிய கடவுள் திருவுள மகிழ்ந்து அவ்வரசனை நோக்கி: "உனது சந்ததியில் பல தலைமுறைகள் சென்றபின்பு தோன்றும் ஒரு புத்திரனால் நீ மகிழ்ச்சி யடையும்படி செய்வோம். இதுவல்லாமல், அப்புத்திரன் மூன்றுலகத்தையும் ஆள வரங் கொடுப்போம்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அது பிற்காலத்தில் இத்தாவீதரசன் கோத்திரத்தில் ஒரு திருமகனாக நமது இரட்சகர் திரு அவதாரஞ் செய்தமையால் அவ்வரம் நிறைவேறிற்று என்னலாமாயினும், அத்தேவகுமாரன் வானமுதலிய எல்லாவுலகங்களையும் ஆளுகை செய்வது ஓர் அரிய செய்கையன்று. அது, அத்தேவ திருக்குமாரனுக்கு இயற்கையாகிய செயலேயாகும். ஆனால், இம்மண்ணுலகில் சகல மனிதரும் இயற்கையாய்ப் பிறக்குந் தன்மையாக அத்தாவீதரசன் கோத்திரத்திற் பிறந்த வேறொரு புத்திரனுக்கு, விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் ஆளும்படியான வரங்கொடுத்தருளினாரெனக்கொள்ளுதலே உசிதமாகும்.

அப்புத்திரன் யாரெனில், யாவரும் துதிக்கத்தக்க வரங்களையடைந்து, காமம் வெகுளி முதலிய குற்றங்களைக் கடிந்து, எவ்வுலகிற்கும், அரசனுகக் காணப்பட்ட சூசைமாமுனிவரே. எமது பிதாவாகிய சர்வேசுரன் யாவராலும் உயர்த்திக் கூறப் படும் தன்மைவாய்ந்த தமது வல்லமையைக் காட்டும்படி, இம்முனிவரைச் சிறந்த செல் வமுடைய தாவீதரசன் கோத்திரத்தில் தோற்றுவித்து, பொய்யான இவ்வுலக வாழ்விற்குரிய செல்வ சம்பத்தில் சிறிது மில்லாமல், வறுமையொடு கைத்தொழில் செய்து, உணவைத் தேடியுண்ணச் செய் தாரானுலும், பின்பு இம் முனிவர்பெரு மான் செய்த புண்ணியத்தின் வல்லமையி னுல், அழகிய வானுலகத்திற்கும், மற்ற எல்லா வுலகத்திற்கும் அரசனுயிருக்க அப் பெருமானை யாவரும் வணங்கும்படி செய் தருளினுர்.

இவ்வரிய சூசை யெம்பெருமானுக்குத் தந்தை தாயார், சகோபு ; நீப்பி, என்னும் திருநாமமுடையவராவர். இவ்விருவரும் நாடோறும் இல்லற தருமத்திற் கூறப்பட்ட விதிகளைக் கைக்கொண்டு, விலக்கானவை களை நீக்கி உத்தமமாய் ஒழுகுவராயினர். அன்றியும், பொறுமையாகிய கயிற்றி னுலே புகழையும், இனிய சொல்லாகிய வெற்றிபொருந்திய கயிற்றினுலே விருந் தினரையும், ஞானசிரியாலே உபதேசிக் கப்பட்ட வேதப் பொருளாகிய கயிற்றி னுலே தமது நெஞ்சையும், நல்ல தரும மாகிய கயிற்றினுலே செல்வத்தையும் அசையாமற் கட்டும் ஆற்றலுடையவரா யினர்.

அனந்த ஞானமும், வல்லபமுமுள்ள கடவுள், தாவீதரசனுக்குச் சொன்னபடி நிறைவேற்றக் குறித்தகாலத்தில், மேற் குறித்த சகோபு என்பவரது மனைவியாகிய நீப்பி யென்னும் பெண்மணியினது திரு வுதரத்தில் சூசைமாமுனிவர் உற்பவிக்கத் திருவுளமானுர். நீப்பி என்னும் அந்தப் பெண்மணியினது திருவயிற்றில் சிறப்பா கத் தோன்றிய திருக் கருப்பமானது, மல ரிலுண்டான தேனின் இயல்போ ! அழ கிய சங்கானது தந்த விளக்கமாகிய ஒரு பெரு முத்தின் தன்மையோ! எனப் புகழா நின்றது. அம்மாதரசி, ஏனைய மாதர்கள் சூலால் அனுபவிக்குந் துன்பநோயின்றி, அகத்தில் உண்டான இன்ப மிகுதியினுல் முகத்தில் அழகு தோன்றப் பெற்றிருந் தாள். வளர்க்கவும் பாதுகாக்கவும், இறு திக்காலத்தில் அப்பெருமானுல் அணைக்க வும் ஆறுதல் கூறவும் பெற்று, அவரது திருமடியிற்றுனே உயிர்விடவும் பேறு பெற்றவர் இம்முனிவர் பெருமானன்றே?

அப்பெருமான் தாவீதரசன் மரபிற் றேன்றிய மேம்பாட்டினுல், அம்மன்னர் மன்னனது சிறப்பினை முன்னே கூறவேண் டுவது முறைமையாதலின் சிறிது கூறு வாம். அஃதெங்ஙனமென்றுல், மாட்சிமை நிறைந்த தாவீதரசன், சத்திய வேதமாகிய பூங்கொடி தளர்வின்றிப் படர்வதற்கு ஒப் புயர்வற்ற கொழுகொம்பாகி நின்றுன். அப்பெருந்தகை இளமைப் பருவத்தில் தெய்வ வல்லமையாலியற்றிய பராக்கிரமச் செயலையறியாதார் யார்? ஈன்ற தாயினும் இன்னருள் சுரக்கும் சத்திய வேதத்தைப் பகைத்து, நெடுங் காலமாகத் துன்பமே புரிந்து, மலைகளில் வாசஞ்செய்யும் பிலித் தையர்களாகிய கண்டகர்களுக்குத் தலைவ னுகும் கோலியாத் என்னும் இராக்கதன் இசரவேலரை யிகழ்ந்து, போர்புரிய வந்த போது,

“ வெல்வை வேல்செயு மிடலதுன்
மிடலடா நானே
வெல்வை யாதர வியற்றெதி
ரிலாத்திறக் கடவுள்

வல்லை யோடுனை மாய்த்துடல்
புட்கிரை யாக
வொல்செய் வேனெனா வுடைகவண்
சுழற்றின னிளையோன் "

இளைஞனாகிய தாவீதன் கோலியாத் என்னும் அரக்கர் தலைவனைப் பார்த்து, 'அடா பாவியே, உன்னுடைய வல்லமை முழுமையும் வெல்லத் தகுந்த கூர்மையாகிய வேலாயுதத்தினால் செய்யப்படும் வல்லமையை யுடையது ; நானோவென்றால் சமயத்திற்குத் தகுதியாக உதவியைச் செய்கின்றபோராற்றலையுடைய எம்பெருமானது வலது திருக்கரத்தின் வல்லமையினால் உன்னைக் கொன்று, உன்னுடைய உடம்பைப் பறவைகளுக்கு உணவாக விரைவிற் செய்வேன்' என்று சொல்லிக்கொண்டே தன்னுடைய கவணைச் சுழற்றிக் கல்லை யெறிந்தான்.

" கல்லை யேற்றலுங் கவணினைச்
சுழற்றலு மக்கல்
ஒல்லை யோட்டலு மொருவருங்
கண்டில ரிடிக்கும்
செல்லை யொத்தனன் சிலைநுதற்
பாய்தலு மன்னன்
எல்லை பாய்ந்திரு ளிரிந்தென
வீழ்தலுங் கண்டார் "

தாவீதன் கவணில் கல்லை வைத்ததும், அந்தக் கவணினைச் சுழற்றினதும், அக்கல்லை விரைவில் எரிந்ததும் (ஆகிய இச்செயல்களை) அங்குள்ளார் ஒருவரும் காணாதவராகி, இடித்து முழங்குகின்ற மேகத்தையொத்த அவ்விராக்க தனது வில்வடிவமாகிய நெற்றியில் அக்கல் பாய்ந்த மாத்திரத்தில், அவன் சூரிய கிரணங்களால் இருள் ஒழிந்ததுபோல (த்தரையில்) விழுந்த அச்செயல் மாத்திரங் கண்டார்கள்.

இவ்வாறு தாவீதரசன் அக்கொடிய அரக்கர் தலைவனையும் கொன்று, அரக்கர்களையுங்கொன்று பிரதாபமும், பிறராற் செய்தற்கரிய தவத்தோனாகிச் சகல வரங்களும் பெற்று, விண்ணுலகத்தவருள் ஒருவனாக இப்பூவுலகில் ஒருவன் உண்ட வாயின் வழியாகப் பல அவயவங்கள் தோறும் பரவிச் செல்லும் நச்சின் தன்மையைப் போல, பூவுலகம் படைக்கப்பட்ட முற்காலத்தில் எல்லா மனிதர்களுக்கும் ஆதித் தந்தையாகிய ஆதன் என்பவன் ஆண்டவனால் விலக்கப்பட்டுத் தான் உண்ட கனியின் வழியாக நேர்ந்த குற்றத்தின் காரணமாக, அந்த ஆதனுடைய புத்திரர்களான எல்லா மனிதர்களிடத்தும் கருப்பத்தின் வழியாகச் சேர்ந்து கிடக்கின்ற தொன்றுதொட்டுவருஞ் சென்மப் பாவமானது, எல்லா மனிதர்களுக்கும் பிறந்தபின் ஒழியும் வகையை ஆண்டவன் பொறுக்கமாட்டாமல், அந்தச் சென்மப் பாவம் சூசைமாமுனிவருக்குத் திருக்கருப்பத்திலேயே ஒழியும்படி திருவுளங் கொண்டார்.

அங்ஙனமெண்ணிய கடவுள், மாதர் திலகமாகிய நீப்பியின் உதரத்தில் திருக்கர்ப்பம் உண்டான ஏழு மாதம் பூர்த்தியாவதற்குமுன்னே, எல்லாத் தீவினைகளுமொழிய ஒரு விசேட பெருங் கருணைப் பயனால் அன்புகொண்டு, அந்தத் திருக்கருப்பத்திலேயே அந்தச் சென்மப் பாவத்தை ஒழித்தருளினார். இவ்வாறு ஜென்மப் பாவத்தை நீக்கி யொழித்த ஒப்பற்ற மேன்மையினால், தெய்வத் திருவருளாகிய பல நன்மைகளும், ஆண்டவனருளிச்செய்த வரத்தொகையும் அந்தத் திருக்கருப்பத்திலுள்ள திவ்விய குழந்தையினிடத்து உண்டாயிருக்கும் செய்தியை யறியாமல், உள்ளத்தில் அளவில்லா மகிழ்ச்சி கொண்டிருந்த தாயாகிய அந்த நீப்பி என்பவள், தான் மகிழ்வுகொண்டதற்குக் கார

ணந் தெரியாமல், அதிசயப்பட்டுக் கருப் பத்தினுண்டாகும் சோர்வில்லாமல் மேம்பட்டிருந்தாள்.

புலவர்கள் சொற்றொடர்களினல் அலங் கரித்துப் பேசுகின்ற உவமானங்களுக் கடங்காமல் நின்ற, சிறந்ததோர் தெய்வ சுந்தரத்தோடு பொன்மயமான திருச்சூல் முதிர்ந்து, இரவின் இருளொழிய வானத் தில் தோன்றும் பூரண சந்திரனைப்போலத் தேவகாந்தி நிரம்பிய திருமுக மண்டலத் தோடு பூமியில் சனித்த அருமைத் திருமக னுடைய கட்டழகைப் பார்த்து, அந்தத் திவ்விய குழந்தையைப் பெற்ற நீப்பி யென்னுந் தாயானவள், இயற்கைப் பல மாதருங் கொள்ளும் பிரசவ வேதனைத் துன்பங்களில்லாமல், பெரு மகிழ்ச்சியா கிய ஒப்பு சொல்லுதற் கரிதாகிய பலனை யடைந்தாள்.

மன்னர் பிரான் தாவீதன் குலத்துதித்த
மறுவில் சகோபன் தனது மனைவி
நீப்பி
பன்னரிய தவப்பலத்தாற் கருப்பந்
தாங்கிப்
பசுங்கதிரி னொளிபோலப் பாரி
னின்றாள்
சொன்னவிந்தக் கருக்கொண்ட
ஏழாந்திங்கள்
துய்யபரன் கருணையினுற் துயர்
விளக்கும்
ஜென்மவினை யகன்று தெய்வ
வரமிகுந்து
சிறந்திட்டான் சூசைமுனி பிறந்
திட்டானே.

(பு. ஆரோக்கிய நாயகர்)

இந்தத் திருக் குழந்தையைத் தாயோடு கண்டவர்களாகிய யாவரும் தங்களுடைய மனத்தில் மகிழ்ச்சியுண்டாக, ஒருமேலான முதிர்ந்த இன்பத்தைக் கொண்டவர்களாய் பிறந்த திவ்விய குழந்தை உள்ளத்தி லடைந்த தேவகருணை அவ்வுள்ளத்திலடங் காமல் மேலெழுந்து வழிந்தாற்போல, எழு தப்பட்ட திருமுக மண்டலத்தின் வடி வழகு வீசிய கிரணங்களைக் கண்களாகிய வாயினுல் உண்டவர்களாய், அக்காட்சியி னல் தெளிவான பேரறிவைப் பெற்றவர்க ளாய், திருப்பாலனை நோக்கி "இவன் ஆண்டவனுடைய திருவடிகளுக்குச் சமிர்ப்பிக்கத்தக்க ஒரு குளிர்ந்த தெய்வ மணம் வீசும் மலர்மாலையாவான்" என்று பலமுறையும் வாழ்த்தி ஆசிர்வதித்து, "மங்கள வெற்றி யுண்டாகுக" எனக் கூறினர்கள்.

இழைக்கப்பட்ட தங்கத்தினுல் மிக்க ஒளியடைந்த இரத்தினத்தின் வடிவழ குள்ள தனது திருமகனை வளர்க்தோங்கும் இன்பமுள்ள தாயானவள் விருப்பத்தோடு பார்த்து, "தரும வொழுக்கமாகிய பீடத் தின்மேல் சிறப்புற்றிருந்து நீ வளரக்கட வாய்! வளன் என்னுஞ் சூசையே!" என்று திருநாமகரணமிட்டழைத்தனள். நீப்பியாகிய அரிய நற்றாயின லிடப்பெற்ற "சூசை" என்னும் அந்த மகத்துவத் திரு நாமமானது, வானோர்களால் புகழ்ந்து பாராட்டத்தக்கதும், மாதர்க்கணிகலமா கும் மரியாயி யென்னு மூவுலகவரசி தனது இன்னுயிரென மதிக்கத்தக்க சிறப்புற் றோங்கியதும் என்பதை :—

'அமரர் போற்றுறுதன் காந்த ளும
மிசை யார்ந்த வார்வமுல குணர்தர
அமல னற்சனன வாயிறத் தறு நூ
றமையு நாற்பதெட் டாண்டதில்
விமல நாயகியோ ரிந்துத் தானிமறை
விரும்ப நல்லறிவு ரைத்துநீ
சமயில் தீட்சையதில் சூசை நாமமது
தரிக்க வென்றுரை செய்தனள்'

இக்கவி :—கடவுள் திரு அவதாரஞ் செய்த ஆயிரத்து அறுநூற்று நாற்பத் தெட்டாம் வருடத்தில், ஒரு மகமதியன்

நமது சத்திய மறையின் உண்மை புணர விரும்பியபொழுது, ஞானசிரியராகிய குருவானவர் அம்மகம்மதியனுக்கு வேதத்தின் நுண்ணிய பொருள்களை யெடுத்துப் போதித்து, ஞானதீட்சையளிக்க நாள் குறித்திருக்க, அதற்கு முந்திய தினத்தின் நடுச்சாமத்தில் தேவ தாயர், அந்த இஸ்லாமியனுக்குக் காட்சியளித்து, அளவற்ற ஞானநெறிகளை உபதேசித்ததுமன்றி 'நாளையதினம் உனக்குக் குருவானவர் ஞானஸ்நானம் அளிக்கும் சமயத்தில் எமது ஞானக் காவலராது நாமமாகிய **சூசை** என்னுந் திருப்பெயரையே தரித்துக்கொள்வாய்' என்று இன்பத்துடனுரைத்து, ஆசிர்வதித்துச் சென்றனர்—என்றுரைப்பதனல், யாவரும் நன்கு அறியலாகும்.

**த**ன் கைகளில் அத்திருமகனை யேந்தி, பின்னர் ஆசை மிகுந்த சொற்களினல் ஆண்டவனுடைய திருவடிகளைத் துதித்து வணங்கி, "இந்தக் குழந்தையாகிய சூசையென்பான் இளம்பிறைச்சந்திரனைப்போல் நாள்தோறும் தரும வொழுக்கத்தோடு வளர்ந்து பெருகும்படி உனது ஆசிர்வாதத்தை அருள் செய்வாய்" என்று மன்றுடினள் மாதர் திலகமாகிய நீப்பி. தான் ஈன்ற திருப்பாலகன், செல்வம், வீரம், அரசுரிமை முதலியவற்ருல் சிறந்து விளங்க வேண்டுமென எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை நோக்கி வேண்டல் செய்யாது, மேற்கூறியபடி பிரார்த்தித்ததற்குக் காரணம் :

**யா**ன் என்னும் அகப்பற்றும் எனது என்னும் புறப்பற்றும் சற்றுமின்றி முற்றத்துறந்த முனிவார், ஞான மென்னும் மலையின் சிகரத்தில் தங்கி நிற்றலால், கருணைகாரனகிய கடவுளது திருவருள் பெற்றுயர்ந்து எம்மை வருத்தும்படி மதங்கொண்ட யானை துரத்திவந்தாலும் பயப்படோம்; புலியுஞ் சிங்கமும் தொடர்ந்தாலும் சிறிதும் அஞ்சோம் என்று கூறி, திரிகால வர்த்தமான முணரும் ஆற்றல் பெற்று அன்புற்று இன்புற்று இருப்பதினல், எச்செல்வத்துள்ளும் அருட் செல்வமே சிறந்ததென்பதை அந்த நீப்பி என்னுந் தாய் நன்ருக அறிந்துணர்ந்ததேயாகும்.

**இ**வ்வாறு நீப்பியென்னும் அரியதாயானவள் பிரார்த்தித்த வளவில், வானுலகத்திற்கு அரசனகிய கடவுள் மோட்சவுலகத்தின் முடியாத பேரின்பத்தைத் தன்னடியார்களுக்குத் தருகின்ற கிருபாநோக்கத்தினல், இந்தத் திருக் குழந்தையைப் பார்த்துக் குறையாத வரங்களைத் தருகின்ற ஆசிர்வாதஞ் செய்ய, அப்போது ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்குத் (தேவ வாக்கு) தோன்றி, "அழியாத திருவருளைப் பெற்ற இம்மகனே என் மார்பில், அணியத்தகுந்த தேம்பாவணி (வாடாத மாலை) ஆவான்" என்று அருளிச்செய்ய, அது பொழுது ஆனந்த மேலீட்டால் வானவர் பலரும் பூமாரி பொழிந்தனர்.

**இ**ருளை நூற்று இழைத்தாற்போலக் கருமையான அழகிய கூந்தலையுடைய நீப்பியென்பவள் தன் திரு மகனுடைய மாட்சிமையெல்லாங் கேட்டு, எவ்வகைப் பட்ட நூல்களினுலுஞ் சொல்லப்பட்ட பல வகைத் துதிகளுக்கு மேலான பின்பு, மெய் நூலாகிய சத்தியவேத முறைப்படி குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம், ஒழுக்க நூலில் வல்லவர்களான குருமார்கள் வந்து, குறைவற நிறைவேற்றி இன்பமாக ஆசிர்வதித்து வாழ்த்திச் சென்ருர்கள்.

**ச**ந்திரனைச் சூழ்ந்த நட்சத்திரங்களைப் போல அத்திருக் குழந்தையைச் சூழ இருந்த உறவினர்கள் அப்பாலனது சிர் பாதங்களில் கிண்கிணிச் சதங்கையும் சிலம்பும் ஆரவாரிக்கத் தரித்து, விளக்கமான

இரத்தின மோதிரத்தைத் திரு விரல்களில் இட்டு, குளிர்ந்த மலர்களாகிய மெத்தையின்மீது கிடத்தித் திருமுகமண்டலத்தின் பேரழகைக் கண்டு, "கடல்சூழ்ந்த பூவுலகத்திற்கு இவனே ஒரு திலகமாவான்" என்று பொதுவாகத் துதித்தார்கள். மீளவும் சிறப்பாக அவ்வுறவினருள் சிலர் "வானத்தின்மேல் விளங்க அமைந்த சூரியனே ஒரு திருக் குழந்தையாகப் பூமியில் வந்து உதித்ததோ என்று சொல்லி மகிழ்ந்தார்கள். சிலர் "இவன் காட்டிலுள்ள தவத்தை நன்றாக இந் நாட்டின்கண் இப்பொழுது நம்மெல்லோருக்கும் காட்டத் தகுந்த மாட்சிமையுடையவனாவான்" என்றுரைத்துப் புகழ்ந்தார்கள். சிலர் "இவன் எல்லா நூல்களிலும் மேலான சத்தியவேத நூலை யாவருக்கும் விளக்கிக் காட்ட வந்த ஒப்பற்ற ஞானச்சுடரோ" என்று துதித்தார்கள். இவ்வாறு பலரும் பற்பல புகழ்ச்சிகளைப் பலமுறையாக உரைத்துரைத்தும் விடாதவர்களாகி உள்ளத்திற்கொண்ட பெரு மகிழ்ச்சியையும் விட்டு நீங்காதவர்களாய் இன்புற்று அன்புற்றுக் கொண்டாடினார்கள்.

---

**FOR STYLE AND DURABILITY**

**SARATHI HANDLOOM TEXTILES,**

**MADURA & MADRAS.**

**கைத்தறி ஆடைகளில்!**

நவீன ரகங்கள்
கெட்டிச்சாயம்
அழகிய பார்டர்கள்
நீடித்த உழைப்பு

புடவைகள், வேஷ்டிகள்
அங்க வஸ்திரங்கள்

கிடைக்குமிடம், மதுரை.

நெசவாளர் கூட்டுறவு விற்பனைசங்கம்
21, கீழமாரட்டுவீதி மதுரை.

# — வீரமாமுனிவரும் தொன்னூல் விளக்கமும் —

ஸ்ரீ S. K. நாராயண அய்யங்கார்,

தமிழ்ப் பண்டிதர், அர்ச். ஞானப்பிரகாசியார் உயர்தரப் பெண் பாடசாலை, தூத்துக்குடி.

உலகம் போற்றும் உத்தமச் செந்தமிழ் தேசிகரான வீரமாமுனிவர் இந்தியாவிற்கு 1710-ம் வருடம் வந்தார். இப்பெரியாரின் திருவடித்தலம் பெற உலகம் போற்றும் உத்தம நகரான கோவா கிடைக்கப் பெற்றது. முளைக் கிளம்பும் பொழுது திருத்துழாய் மலர் மணம் பெற்று விளங்குவதுபோல் இவரும் இளமையிலேயே தெய்வமணங் கமழப் பெற்றமையால், பல மொழிகளிலும் கற்றுத் தேர்ந்து விளங்கினர். "முன்னவனே முன்னின்று அருள் புரியின் முடியாத பொருளுளதோ?" இவர் வடமொழியிலும் தென் மொழியிலும் காணப்பெறும் இலக்கிய இலக்கண நூல்களைக் கற்றோர் வாய்க்கேட்டுக் கற்றுத் தேர்ந்து மலையிடைப்பட்ட தீபம்போல் விளங்கினர். இவரை மாணவராகப் பெறும் பாக்கியம் சுப்பிரதீபக் கவிராயருக்கே கிடைத்தது. இது நிற்க,

தமிழிலக்கணங்களைப் பாடங்கேட்கும் பொழுதே வடமொழி இலக்கணங்களையும் உடன் கற்றுத்தேர்ந்து ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டுணர்ந்து பொருள் விளங்காமல் இடர்ப்படுமிடங்களை நன்கு அறிந்து பின்வரும் மாணவர்கள் ஐயந்திரிபற எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியெனும் ஐந்திலக்கணங்களைக் கசடறக் கற்கும் பொருட்டே தொன்னூல் விளக்கமெனும் இந்நூலை இப்பெரியார் எழுதிப் போந்தார்.

சிறப்புப் பாயிரத்தின்கீழ் இவர் பின் வருமாறு விரிவுரை எழுதியிருத்தலை நோக்குமிடத்து தொன்னூல் விளக்கமெழுதுவதற்குரிய காரணம் உள்ளங்கை நெல்லியங்கனிபோன்று நன்கு விளங்கும்.

"ஒளிவிடா மூடின தீபத்தாற் பயனில்லை" யென்றதுபோல, முன்னோர் தந்த இலக்கண நூலெல்லாஞ் செந்தமிழ்ச் சிறந்த மொழியோடு மூடிக் கிடப்ப, இக்காலத்து அவ்விளக்கொளியை காண்பாரில்லாததற்கொரு பயனுமில்லை. தென்மொழியார்க்கும் வடமொழியைத் தானுணர்த்தக்கருதி அவர் முன்னறிந்த தமிழ்ச் சொற் கொண்டலவோ வடமொழிப்பயனை யுணர்த்தல் வேண்டுமாகையான் மூத்தோர் புதைத்த நூனலம் விளங்கவும் கல்லாதவரும் பயன் கண்டு உணரவும் நானே அதன் மேற்கவிந்த போர்வையினை நீக்கி அறிஞர்முன் கொளுத்தின தீபம் எவர்க்கு மெறிப்பக் கையிலேந்தினாற்போல அவர்முன் செந்தமிழ் மொழியான் மறைத்த இவ்விலக்கண நூலை இளந்தமிழ் உரையால் வெளிப் பொருளாக்க நினைத்தேன். ஆயினும் முன்னோர் தந்த யாவையும் விரித்துரைத்தால் இந்நூலும் பெருகிக் கண்டவர் அஞ்சித் துணியார் என்று கருதி முன்னம் மிக வறியவேண்டுவதொன்றைத் தெரிந்து தருவேன்" என்று எழுதியுள்ளமை காண்க.

ஐந்திலக்கணப் பொருட்களைக் கல்லாதவரும் கண்டுணரும்படி தெளிவாக விளக்க இத்தொன்னூல் இலக்கணத்தை இவர் எழுதும்படி நேர்ந்தது. பவணந்தியார் எழுதிய நன்னூல் சூத்திரத்தை இவர் எடுத்தாளுந் திறன் போற்றத்தக்கது.

எழுத்தியல் (61) சூத்திரத்தில் பவணந்தியார் பெயராமாறு உணர்த்துமிடத்து, "இடுகுறி காரணப் பெயர் பொதுசிறப்பின" என்றவிடத்து, நம்புலவர் "இடுகுறி காரணமிவை பொதுச் சிறப்பென விரண்டாகு மெழுத்தின் பெயரே" என்று கூறியுள்ளமை காண்க. இதற்கு உதாரணந் தந்து விளக்கியமை அறியத்தக்கது. நாடு எனு மொழியீற்றெழுத்து (கு)

இடுகுறிப் பொதுப்பெயரால், உயிர் மெய் என்றும், இடுகுறிச் சிறப்புப்பெயரால் (கு) என்றும், காரணப் பொதுப்பெயரால் குற்றெழுத்து என்றும், காரணச் சிறப்புப் பெயரால் குற்றியலுகரம் என்றும், பிறவும் ஏற்கும் பெயரொடு வழங்கும் என்றார். இதனை மயிலைநாதர் உரையினின்றும் அறியலாம்.

நவிரவும் நமது தைரியநாதர் என்ற வீரமாமுனிவர் சில நன்னூல் சூத்திரங்களை ஒரே சூத்திரமாகத் தொகுத்து எழுதி அச் சூத்திரங்களில் எடுத்தாளப்படும் உதாரணங்களையெல்லாம் தொகுத்து எழுதுவதுடன் மேற்கோள் உதாரணங்கள் கம்பன், ஜீவகசிந்தாமணி, குறள் முதலிய நூல்களினின்றும் தாமியற்றிய திருக்காவலூர் கலம்பகம், தேம்பாவணி, அன்னையழுங் கலந்தாதி முதலியவற்றினின்றும் எடுத்துக் காட்டியுள்ளார் என்பது அறியத்தக்கது. உதாரணமாக நன்னூல் 63, 64, 65-ம் சூத்திரங்களை ஒரே சூத்திரமாக தமது தொன்னூலில் எட்டாஞ் சூத்திரமாக எழுதியுள்ளார். உதாரணங்கள் காட்டி விளக்குமிடத்து வேறு நன்னூல் சூத்திரங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறார். இவர் வடமொழி இலக்கணங்களை நன்கு பயின்றுள்ளார் என்பது இவர் தம்நூலில் வடமொழிப் பெயர்களை ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளமையே தக்க சான்றாகும். உதாரணமாக மெய்க்கு—புள்ளி, உடல், உடம்பு, ஒற்று, அல், வியஞ்சனம் என்றும், குற்றிற்கு – குறில், குறுமை, இரச்சுவம் என்றும், நெடிற்கு – நெடில் நெடுமை, தீர்க்கம் என்றும் கூறுவர்.

மெய்யின் வடிவும் உயிர்மெய்யின் வடிவும் பலமுறை வேறுபடாமையாலும், எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம் எப்போது ஒரு வடிவாகையாலும், மயக்க நீக்க வேண்டி குற்றெழுத்தின்மேல் நீண்ட புள்ளியும் ஒற்றெழுத்தின்மேல் சுழித்த புள்ளியும் கொடுத்தல் வேண்டுமென எண்ணி அதற்கு ஒரு தனிச் சூத்திரம் ஒன்று எழுதித் தந்தார்.

“நீட்டல் சுழித்தல்
குறில்மெய்க் கிருபுள்ளி.”

இச்சூத்திரத்தை வைத்து நமது ஞானப் புலவர் முதலோத்துச் சொல்லணியில் நான்காவதான சொல்லொப்பணியைக் கூறி விளக்குமிடத்து சமவணிக்கு இலக்கணங்கூறி அதற்கு மேற்கோள் காட்டுஞ் செய்யுளினிய ஒரு நகைச் சுவையினை சித்திரிக்கிறார். அது வருமாறு,

நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண் மரமா
நீர்நிலையோ புள்ளிபெற நெருப்பாஞ்—சீரளவு
பாட்டோன்றேழிப்ப விசையாம் அதனளவு
மீட்டு என்றேழிப்ப மிடறு

என்பதினுள் ஓதி—கூந்தல் (இது நேரிழையார் கூந்தல் குறிலுக்கு புள்ளி கொடுப்பதால் ஒதி—மரம்,) (ஏரி—நீர்நிலை, எரி—நெருப்பு) (காந்தாரம்—பாட்டு, கந்தரம்—இசை ; கந்தரம்—மிடறு (கழுத்து).

பொருளதிகாரத்தில் 183-ஞ் சூத்திரத்தில் சாதித் தொழிலுரிமை (Caste Employment) என்ற தலைப்பில்,

வன்னியர் மன்னர் வணிகர் சூத்திரர்
என்னிவர் நால்வர்க்கியல்வன வுரைக்கி
லோதற் றேழிலரித் துயர்ந்தோர் மூவர்க்கு
மல்லாத கல்வி யெல்லார்க்கு முரித்தே.

இச்சூத்திரத்திற்கு மேற்கோளாக "ஓதற் றொழிலுரித்துயர்ந்தோர் மூவர்க்கும்" என்றும் "அல்லாக் கல்வி யெல்லார்க்கு முரித்தே" என்று காட்டியபின் தமது சூத்திரத்திற்கு உரை எழுதி தமது கருத்தையும் வெளியிடுகிறார். நாவினாற் கற்கும் தொழிலுள் வேதத்தை யோதி உணர்தல் அந்தணர் அரசர் வணிகரென மூவர்க்கும் உரித்தேயொழிய சூத்திரர்க்குத் தகர்தெனவும் வேத நூல் ஒழித்த கல்வி யாளவும் உணர்தல் நால்வர்க்குரித்து எனவும் கூறுவார் எனக்கொள்க. ஆயினும் வாயினாலுணப்படும் உடற்குணா யார்க்கும் பொதுமைவாகையிற் காதலானப்படுமுமார்க்குணாவாகிய மெய்ம்மறையோதல் சிலர்க்கு விலக்கல் கொடுமையன்றோ. மீளவும் மறையே பரகதி வழியைக் காட்டுவதாகையால் அனைவரும் பொதுப்பட அக்கதிக் குரியராய்ப் பிறந்தபின்னர் அவ்வழியுணர்தல் பொதுமைத்து அன்றென விதிப்பது நிறையோ என்று மனம் வருந்தி எழுதுவதைக் காண்க.

இனி இயற்சொல்லின் இலக்கணங்கூறுமிடத்து நன்னூலார் "செந்தமிழாகித் திரியாதார்க்கும் தம்பொருள் விளக்குந் தன்மைய வியற்சொல்" என்றார். செந்தமிழ் நிலத்து மொழியாய்ச் சொல்லானும் பொருளானும் திரிபின்றிக் கற்றார்க்கும் கல்லாதார்க்கு மொப்பத்தம் பொருள் விளக்கும் இயல்பினையுடையன இயற்சொல்லாவன என்பது இதன் பொருளாகும். இதனை நம்புலவர் வேறு வழியில் சூத்திரம் அமைத்துள்ளார். "இயற்சொல்லென்பது இயல்பில் திரிபிலா, தானெளிது எவர்க்குந் தன்பொருள் விளக்கலே" என்று யாவரும் எளிதில் உணரும்படி அமைக்கிறார். அமைத்து மொழியானும் பொருளானுந் திரிபின்றி எவர்க்குந்தன் பொருளை விளக்கிக்காட்டி விளக்குதற்கு இயல்பினையுடைய சொல் இயற்சொல்" என்று பொருள் எழுதுகிறார். நன்னூலார் எழுத்து, சொல் இவ்விரண்டினையும் எழுதியுள்ளார். பொருள், யாப்பு, அணி இவைகளையும் பவணந்தியார் எழுதிய நூல் வெளிவரவில்லையோ அல்லது ஐந்திலக்கணத்தில் எழுத்தையுஞ் சொல்லையும் மட்டுமே எழுதியுள்ளாரோ என்பது உணரக் கிடக்கின்றது.

சுருங்கக்கூறின் இவ்வீரமாமுனிவரின் தொன்னூல் இலக்கணத்தைக் கசடறக் கற்று மேற்கோள் முதலியனவற்றை ஆய்ந்து கொண்டவர் வேறு இலக்கணங்களைக் கற்கவேண்டுவதில்லையென்பது வெள்ளிடைமலையாம்.

மீண்டும் நம்முனிவர் எழுதியுள்ள தொன்னூல் இலக்கணத்திலுள்ள சூத்திரங்களை யெடுத்துக்காட்டி அவர் எழுதியுள்ள விரிவுரையினை ஈண்டுதரின் விரியுமெனவஞ்சி எழுதாது விடுகின்றேன். ஆன்றோர் அந்நூலை ஆய்ந்து கற்றுத் தேர்ந்து இலக்கணச் சுவையுடன் உதாரணச் செய்யுட்களாகக் காட்டப்பட்டுள்ள இலக்கியச் செய்யுளின் சுவையினை யருந்தி இன்ப வாரிதியில் மூழ்குவரென்று சொல்லின் மிகையாகாது.


## வீரமாமுனிவரின் நூல்களை வாசித்தின்புறுங்கள் !

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தேம்பாவணி (3 காண்டங்களும்) ரூ. | 5 | 0 | 0 | வேதியர் ஒழுக்கம் ரூ. | 0 | 12 | 0 |
| தேம்பாமாலை | 0 | 12 | 0 | வேத விளக்கம் | 1 | 5 | 0 |
| திருப்பாவணி | 0 | 4 | 0 | சதுரகராதி | 2 | 4 | 0 |
| திருக்காவலூர்க் கலம்பகம் | 0 | 12 | 0 | தேம்பாவணிக்கருப்பொருள் | 1 | 0 | 0 |
| திரு. ரா. பி. சேதுப்பிள்ளை | | | | தொன்னூல் விளக்கம் | 1 | 8 | 0 |
| பரமார்த்த குருவின் கதை | 0 | 4 | 0 | (விரைவில் வெளிவரும்) | | | |

பி. ஏ. எஸ். சங்கப் புத்தகசாலை,
c/o. Y. ஆரோக்கியசாமி, அந்தோனி மூப்பனர் தெரு,
கீழ்மதுரை, மதுரை.

# தமிழ் இலக்கியத்தின் டான்டெ : வீரமாமுனிவர்

திரு. R. பஸ்கால் தெயடோர், B.A., புதுவை.

வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி யெனு மாபெருங் காப்பியத்தை ஊன்றி வாசிப்பவர்களுள் மேனாட்டு இலக்கியத்தில் பரிச்சய முடையவரெவருக்கும் கவிஞர் திலகமாகிய டான்டெயின் ஞாபகம் வராமலிருக்க முடியாது.[1] டான்டெயின் 'டிவினா கொம்மெடியா' ஒருவருடைய கைக்கு எட்டுமுன், நரகம், உத்தரிக்கிற ஸ்தலம், மோட்சம் ஆகியவற்றைப்பற்றி சுவிசேஷத்தின் வாயிலாகவும் வேத சாஸ்திரிகள் எழுதிவைத்த நூல்களின் மூலமாகவும் நாம் அறிந்துகொள்ளக்கூடிய விபரம் சிறிதளவேயிருக்க, டான்டெ நூறு படலங்கள் அடங்கியதோர் காப்பியத்தை இயற்றிய தெங்ஙனம் என்று கேட்பது சகஜம். "டிவினா கொம்மெடியாவைத்" திறந்து வாசிக்கத் தொடங்கிய பிறகு, அதில் திருச்சபையின் சரித்திரம், உலக சரித்திரம், வேத சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், வான சாஸ்திரம், இலக்கியம் முதலிய அரிய பெரிய விஷயங்கள் பாலுந் தேனுங் கலந்தாப்போல் புகுத்தப்பெற்றிருப்பதைக் காண்கிறோம். டான்டெ காலத்து மக்களிற் பெரும்பான்மையோர் வேத காரியங்களை அலட்சியம்பண்ணி, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையால் மதிமயங்கி, சிற்றின்பப் பிரியர்களாய், பழிபாவத்திற் கஞ்சாதவர்களாய் காலங்கழித்து வந்ததால், அவர்களை நல்வழியிற் திருப்பவேண்டுமென்ற நோக்கத்துடன் அவர் 'டிவினா கொம்மெடியா' எனும் ஒப்புயர்வற்ற காவியத்தை இயற்றுவாராயினர். வேதாகமத்தைப் பன்முறையும் ஊன்றி வாசித்தவரும், பண்டையகால மேதாவியர்களின் நூல்களையும், அரிஸ்டோட்டல், சிஷ்ட அக்குயினா தோமையார் போன்ற தத்துவ சாஸ்திரிகளின் நூல்களையும, சிஷ்ட ஜெரோம், அத்தனாசியார், அகுஸ்தினார், பெர்னார்து போன்ற வேத சாஸ்திரிகள் எழுதிவைத்த அரிய நூல்களையும், உலக சரித்திரத்தையும், இன்னும் அக்காலத்தில் மனிதன் அறியக்கூடிய சகலவித சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவருமான டான்டெ, பாவிகள் நரகத்தில் பயங்கரமான ஆக்கினைகளை அனுபவிப்பர், செய்த பாவங்களுக்கு மன்னிப்பு அடைந்தபோகிலும் அவற்றிற்கேற்ற பரிகாரத்தைத் தீர்க்காமல் இறந்தவர்கள் உத்தரிப்பு ஸ்தலத்தில் பரிகாரம் பண்ணியபிறகே மோட்சத்திற்குப் போகக்கூடும், புண்ணியாத்துமாக்களும், செய்த பாவங்களுக்கு மன்னிப்படைந்து அவற்றிற்குரிய பரிகாரத்தைத் தீர்த்துவிட்டவர்களும் மோட்ச பாக்கியம் அனுபவிப்பர், என்ற சத்தியங்களை ஆதாரமாகக்கொண்டு, தன் அபாரக் கல்வியறிவையும், சரித்திர ஞானத்தையும், ஒப்பற்ற கற்பனாசக்தியையும் பயன்படுத்தி, 34 படலங்களைக்கொண்ட நரகம், 33 படலங்களைக்

---

[1] டான்டெ அலிகியெரி என்ற இத்தாலிய கவி 1265-ம் ஆண்டில் பிளாரென்ஸ் நகரிற் பிறந்து, 1321-ம் ஆண்டில் ரவென்னா நகரில் இறந்தவர். இவர் இயற்றிய நூல்களுள் மிகப் பிரசித்திப்பெற்றது "டிவினா கொம்மெடியா." இவ்வரிய காவியத்தில் கவிஞர் நரகம், உத்தரிப்பு ஸ்தலம், மோட்சம் ஆகிய ஸ்தலங்களை நேரிற்சென்று தரிசித்துவந்ததாகக் கற்பனைபண்ணி தத்ரூபமாகச் சித்தரித்துள்ளார். 'டிவினா கொம்மெடியா' ஆங்கில பாஷையில் காரி, லாங்பெலோ (Longfellow), பாய்டு, டீன், பளம்ப்ட்ரி, எசல்புட், ஆன்டெர்ஸன் என்பவர்களால் செய்யுள் நடையிலும், ஜான்கார்லைல், சி. இ. நார்ட்டன், H. F. டோஸர், என்பவர்களால் வசனநடையிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. செய்யுள்நடை மொழிபெயர்ப்புகளைவிட வசனநடை மொழிபெயர்ப்புகளே சிறந்தனவாக விருப்பதாக சேசுசபை : சங். J. ரேர் சுவாமிகள் கருதுகின்றனர்.

கொண்ட உத்தரிப்பு ஸ்தலம், 33 படலங்களைக்கொண்ட மோட்சம் என்ற மூன்று காண்டங்களையுடையதாகிய ‘டிவினு கொம்மெடியா’ என்ற ஒப்புயர்வற்ற் காவியத்தை இயற்றுவாராயினர். நரகத்திலும், உத்தரிப்பு ஸ்தலத்திலுமுள்ள ஆத்துமாக்கள் வெவ்வேறு விதமானபாவங்களுக்கு வெவ்வேறு விதமான தண்டனைகளை அனுபவித்து வருவதாகவும், மோட்சத்திலிருப்பவர்கள் வெவ்வேறு புண்ணியங்களுக்கு வெவ்வேறு விதமான சம்பாவனைகளைச் சுகிப்பதாகவும் கவிஞர் அரிய திறமையுடன் சித்திரித்துள்ளார். மோட்சலோகத்தை வருணிப்பதாகிய மூன்றுங் காண்டம், அதிலும், கடைசி ஏழு படலங்கள் வாசிக்க வாசிக்கத் தெவிட்டாத இன்பம் பொழிந்து வாசகரைப் பரவசமாக்குந் தன்மையன.

இப்பூவுலகிற் றோன்றிய கவிகளுள் மிகப் பெரியவர் டான்டெயென்பது இலக்கிய விமர்சர்களிற் பெரும்பான்மையோரது அபிப்பிராயமாகும். கவிஞர் என்றதத்துவத்தில் டான்டெயுக்கு அடுத்த படியில் வரக்கூடியவர்கள் பலர் இருத்தற்கூடும். ஆயினும், இத்தாலியத்திற்கு எவ்விதம் டான்டெயோ அவ்விதம் தமிழிற்கு வீரமாமுனிவர் என்பது மிகையாகாது.

தேம்பாவணியைப்பற்றி முதன்முறை கேள்விப்படுபவர், சிஷ்ட சூசையப்பரின் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி சுவிசேஷத்தின் வாயிலாகவோ இதர கிறீஸ்துவ நூல்களிலிருந்தோ நாம் அறியக்கூடியது சொற்பமாகவேயிருக்க, வீரமாமுனிவர் 3615 விருத்தங்களைக்கொண்டுள்ள 36 படலங்களைத் தன்னுள்ளடக்கி வைத்திருக்கும் பெரியதோர் காப்பியத்தை வரைந்ததெப்படி யென்று பிரமிப்படைவாராகின்றனர். தமிழ் நாட்டு மக்களுக்கு கிறீஸ்துவேதத்தின் மகத்துவத்தை விளக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் வீரமாமுனிவர் தேம்பாவணியை இயற்றினர். சிஷ்ட சூசையப்பரின் வாழ்க்கையைப்பற்றி வேதாகமத்திலிருக்குங் குறிப்புகளையும், ஆகிர்தமரியாள் எனுங் கன்னிகை எழுதி வைத்த சரித்திரத்தையும் ஆதாரமாகக் கொண்டு வீரமாமுனிவர் 36 படலங்களையுடைய அம்மாபெருங் காப்பியத்தை இயற்றியதெங்ஙனமெனில், அதில் சேசு கிறீஸ்துநாதருடைய சீவியத்தின் முக்கிய சம்பவங்களன்றி, பழைய ஏற்பாட்டிலிருந்து நூற்றுக்கதிகமான விருத்தாந்தங்களையும், எகிப்து நாட்டில் திருச்சபையின் முதல் நூற்றாண்டுகளில் தபசுபுரிந்த வனவாசிகளின் வரலாற்றையும், நசரேத்தில் திருக்குடும்பம் வசித்துவந்த வீடு இத்தாலியிலுள்ள லொரெட்டோ நகருக்குத் தூக்கிச் செல்லப்பட்டதையும், ஐரோப்பிய நாடுகளில் கிறீஸ்து வேதம் பரவியதையும், ‘உரோம சாம்ராச்சியத்தின் சக்ரவர்த்தி’ என்ற பதவி வகித்துவந்த ஆஸ்திரியா தேசத்து லெயொப்போல்டு மன்னன் தனது இராச்சியத்தை சூசையப்பருக்கு ஒப்புக்கொடுத்த வரலாற்றையும் இனிமையாக விவரித்துள்ளார். டான்டெயைத் தவிர்த்து, வேதாகமத்தின் வரலாறுகளையும் கிறீஸ்து வேதத்தின் தத்துவங்களையும் செய்யுள் நடையில் வீரமாமுனிவரைப்போல அவ்வளவு சுவைபொருந்திய வகையில் தொகுத்தவர் வேறெவருமிலர்.

தேம்பாவணியின் 27-வது படலத்தில் கவிஞர் மெய்யான தேவனின் இலட்சணங்கள் இன்னவையென விளக்கியுள்ளார். 28-வது படலத்தில் பாவத்தின் கோரம், மோட்சம் நரகத்தின் தன்மை, சம்மனசுக்களின் சிருஷ்டிப்பும், இயல்பும், பசாசுகள் உண்டானவிதம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. 26-ம் 28-ம் படலங்களில் காமத்தால் வருங் கேடும், காமத்தை யடக்கும் வகையும் விவரிக்கப்பட்டுள்ளன. 29-வது படலத்தில் கவிஞர் சத்தியவேதத்

தின் மாட்சியை விளக்குகிறார். 32-ம் படலத்தில் ஏழு தேவதிரவிய அனுமானங்களால் தேவ குமாரன் நமக்குத் தந்தருளும் வரங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. 36-ம் 37-ம் படலங்களில் சேசுபிரான் ஒட்டலோகராப் உயிர்த்தெழுதலையும், மோட்சவாசல் திறக்கப்படுவதையும், தேவ சுதனுடன் சூசையப்பரும், [2]வரிவேத காலத்தின் மகாத்துமாக்களும் விண்ணுலகிற் பிரவேசிப்பதையும் வருணிக்கும் பகுதிகள் வாசிக்க வாசிக்க இன்பமளிப்பனவாய்த் திகழ்கின்றன. இறுதி நாளில் தேவசுதன் உலகத்திற்குத் தீர்வையிட வருமுறை 11-ம் படலத்தில் தத்ரூபமாக வருணிக்கப்பட்டுள்ளது.

தேம்பாவணியின் மூலம் வீரமாமுனிவர் கிறீஸ்து வேதத்தின் மகத்துவத்தை விளக்கியிருப்பது ஒருபுறமிருக்க, அவருடைய கவித்திறனை என்னென்று கூறுவது! பிறக்கியாதிபெற்ற தமிழறிஞர்களான மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மகாமகோபாத்தியாய சாமிநாதையர், திருவாளர்கள் பூரணலிங்கம் பிள்ளை, செல்வகேசவராய முதலியார், நமச்சிவாய முதலியார், சேதுப்பிள்ளை, சோமசுந்தரபாரதி முதலிய பெரியார்கள் வீரமாமுனிவரின் புலமையைப் பாராட்டியுள்ளனர். கம்பராமாயணம், சிவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களுக்கு நிகரானது தேம்பாவணியென்பது தமிழிலக்கிய விமர்சகர்களுட் பெரும்பான்மையோரது அபிப்பிராயம். ஆயினும் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களின் சார்பாக பரீட்சைகளுக்கு பாடத்திட்டம் வகுப்பவர்கள் தேம்பாவணியிலிருந்து ஒன்றும் எடுக்காதது விபரீதமன்றோ? தேம்பாவணியை இயற்றியவர் கிறீஸ்துவராயிருப்பதினிமித்தம் அதன் கவிச்சுவை குன்றிப்போகுமோ?

புதுவை வித்துவான் சவராயலு நாயகர் திருச்சிராப்பள்ளியில் சிலகாலம் தங்கியிருந்து, தேம்பாவணியையும் திருக்காவலூர் கலம்பகத்தையும் பாடஞ் சொல்ல வேண்டுமென்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களை வேண்டிக் கொண்டபோது, பிள்ளையவர்கள் அவருடைய விருப்பத்திற்கிசைந்து தேம்பாவணி முதலியவற்றிற்குப் பொருள் கூறி, தமிழில் நல்ல பயிற்சியை உண்டாக்கி அனுப்பினர். இதைக் கண்ட சிலர் "இவர் சைவராக இருந்தும் புறச் சமய நூல்களைப் படித்தலும் பாடஞ் சொல்லுதலும் புறச்சமயத்தாருடன் அளவளாவி மாணுக்கராகக் கொள்ளுதலும் தகுதியல்ல" என்று குறைகூறத் தலைப்பட்டனர். அதனை அறிந்த பிள்ளையவர்கள் அங்ஙனம் குறைகூறிவந்த சிலரும் தம் நண்பர்கள் சிலரும் ஒருங்கிருக்கும்பொழுது, தம் நண்பர்களைப் பார்த்துக் கூறுவாராய், "நான் தேம்பாவணியைப் பாடஞ்சொல்லுதலும் கிறிஸ்தவர் முதலிய பிறமத மாணுக்கர்கள் என்பாற் பாடங் கேட்டலும் கூடாத செயல்களென்று சிலர் சொல்லிவருவதாகத் தெரிகிறது. தமிழ் நூல் யாதாயிருப்பினும் அதிலுள்ள சொற்பொருள் நயங்களை, உணர்தல் பிழையாகாதே! கிறிஸ்தவ மதத்தைப் பிரசாரஞ்செய்யவேண்டுமென்பது என்னுடைய கருத்தன்று. தமிழ் நூல் என்னும் முறையில் யாதும் விலக்கப்படுவது அன்று" என்று தம் கருத்தைப் புலப்படுத்தினர். குறைகூறியவர்கள் இவருடைய உண்மைக் கருத்தை அறிந்து அடங்கிவிட்டனர்.[3]

[2] வரிவேதகாலம் : கிறீஸ்துபெருமான் வருமுன்.

[3] மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் இயற்றிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் : முதற் பாகம், பக்கம் 149.

முனிவர் அளித்த நற்கொடை !

# வீரமாமுனிவர்
## சுகந்தரு மாத்திரை

**சங்கைக்குரிய வீரமாமுனிவர் சுவாமிகள்** இத்தமிழ் நாடெங்கும் சுற்றித்திரிந்து கத்தோலிக்கு மார்க்கத்தின் உத்தம தத்துவங்களைப் போதித்து வருங்கால், ஆங்காங்கு பெரும்பாலான ஏழைமக்கள் பற்பல நோய் வாய்ப்பட்டு அல்லற்படுவதைக்கண்டு அவர்கள் சரீர துன்பங்களையுமகற்றி உதவிபுரிய ஆவல்கொண்டு ஆயுர்வேத வைத்திய சாஸ்திரத்தை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, ஆத்தும வைத்தியராகமட்டுமன்றி சரீர வைத்திய நிபுணராகவும் இலங்கினர் என்பதற்கு சுவாமிகளால் இயற்றப்பட்ட **குணபாடம், சிந்தாமணி, நசகாண்டம்** முதலிய வைத்திய நூல்களே போதிய சான்றாகும்.

இவ்வுத்தம முனிவர் இரத்தமே பிராணனுக்கு ஆதாரமெனும் போதனை சாரத்தைக் கடைப்பிடித்து இரத்தத்தை சுரப்பிக்கும் தாதுப்பொருள்களான கல்லுப்பு, அயம் முதலிய திரவியங்களையும் பற்பல அற்புத வனமூலிகைகளையும் கொண்டு ஏறக்குறைய எல்லா ரோகங்களையும் எளிதில் போக்கவல்லதோர் யோக முறையைத் தயாரித்து ஏழைகள் உய்யுமாறு ஜீவகாருண்யமாய்த் தந்தருளிய நற்கொடையே **இவ்வீரமாமுனிவர் சுகந்தரு மாத்திரையாகும்.**

**வீரமாமுனிவர் சுவாமிகள்** எமதூராகிய **மணப்பாட்டில்** தமது அந்தியகாலத்தில் இருந்தபொழுது அவ்வூர் வைத்தியரும், **சீ. ஏ. சில்வேயிரா பண்டிதர்** அவர்களின் மூன்றும் பாட்டனுருமாகிய **மிசியேர்** வைத்தியனுருக்கு தமதனுபவத்தில் கையாண்டுவந்த ஔஷதங்களில் சிறந்ததாகிய **இச்சுகந்தரு மாத்திரையை சர்வரோக நிவாரணி சஞ்சீவி** இதுவென உபதேசித்தருள அன்றுமுதல் எங்கள் குடும்ப ஔஷதமாக இருந்து இன்று உலகப்பிரசித்தியுற்று ஆயிரக்கணக்கான நற்சாட்சிப்பத்திரங்களைப் பெற்றுளது.

**இந்த வீரமாமுனிவர் சுகந்தரு மாத்திரை, இருதயம், சுவாசப்பை, ஜீரணக்கருவிகளுக்கு** பலன் தந்து அவைகளின் தொழிலை இயைப்படுத்தி இரத்தத்தை சுத்தம்செய்து இரத்த விருத்தியையுண்டுபண்ணி கணை, காமாலை, பாண்டு, க்ஷயம், ஈளை இருமல், பேதி, அஜீர்ணம், காய்ச்சல் கட்டி, பிரமேகம், நீரிழிவு முதலிய வியாதிகளையும், பாலர்களுக்குண்டாகும் பலவித மாந்தம், வலிப்பு, வயிற்றோட்டம், சீதபேதி, ஈரல்குலைக்கட்டி முதலிய ரோகங்களையும், ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகவலி, சூதகச்சிக்கல், வெட்டைச் சூடு, பெரும்பாடு முதலிய நோய்களையும் தப்பாதகற்றி தாது பலத்தையும், வீரிய விருத்தியையும் பெருகச்செய்யும்.

*100 மாத்திரைகள் அடங்கிய பெட்டி 1-க்கு ரூ. 1-4-0.*
(தபாற்செலவு முதலியன பிரத்தியேகம்.)

**C.A. SILVEIRA & SONS, Mylapore, Madras.**

Telegrams { Muthuco : MADURA. Balmo : MADRAS.

MADRAS Phone : 2314

மதராஸ் கடை : No. 111 நைனியப்ப நாயக்கன் தெரு,

# S. R. B. முத்துகிருஷ்ண அய்யர்

கியாதி பெற்ற S.R.B. MUTHUKRISHNA IYER SRB ஜவுளிக் கடை

## :: கிறிஸ்மஸ் பண்டிகைக்கும் ::
## கலியாண கால விசேஷங்களுக்கும்

சகலரும் வாங்கி உடுத்த சரஸமான விலையில் பனாஸ், பெங்களூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், நமது சொந்த தரி தினுசுகள் தற்சமய நூதன ரகங்களில் ஏராளமாக கைவசம் வந்துள்ளன. நேரில் விஜயம் செய்து வாங்குங்கள்.

**S. R. B. முத்துகிருஷ்ண அய்யர்,**
எஸ். ஆர். பி.

(பழைய விலாசம் : S. R. பாலுசாமி அய்யர் & ஸன்ஸ்)

235, கீழ மாசட் தெரு,
மதுரை.

111, நைனியப்ப நாயக்கன் தெரு,
மதராஸ்.

எங்கள் கம்பெனியில் தயாராகும்

நெம்பர் 442

- மங்கள சுந்தரி நீலம் சதுரம் ஓவல் -
மங்கள சுந்தரி பாளை புகையிலை சோப்புகள்
- அசல் சிவபுரி வாசனை புகையிலை -
- அசல் மீனம்பாளையம் தம்பிடி புகையிலை -
- மாஸ்டர் வாசனை பாக்கு -
- அணு மார்க்கு சிவபுரி புகையிலை -
- மங்கள சுந்தரி பீடிகள் -

நெம்பர் 442

முதன்மையான மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு பரிபக்குவமாய் தயார் செய்யப்படுவதால் வேண்டும் சரக்குகளை கீழ்க்கண்ட சொந்தக்காரர்களிடமும், ஏஜண்டு மூலமாகவும் நேரிலோ அல்லது வி.பி.பி. மூலமாகவாவது பெற்றுக் கொள்ளலாம். விலை விபரங்கள் தபால்மூலம் தெரிந்து கொள்ளலாம்.

தயாரிப்பவர்கள் :

**Messrs. அ.ப.அ. பக்கீர் முகையதீன் & பிரதர்ஸ்**
442, மங்கள சுந்தரி ஸ்டோர்ஸ்,
கடையநல்லூர்.

ஏஜண்டு :

**கு. பா. ஆசிர்வாத வஸ்தாரிஸ் & பிரதர்ஸ்,**
C.A.S. மெம்பர்ஸ்,

ஷாப் மெர்ச்சண்ட்ஸ்,

பாம்புக்கோவில் சந்தை, S.I.Ry.

# THE MODERN STORES

Dealers in

Fancy Goods,
Toilet Requisites,
Stationery Goods Etc.,
Leather Goods, Holdals.

TEPPAKULAM P.O., TRICHINOPOLY.

## S. NAVANEETHAKRISHNAN & SONS,

DISPENSING CHEMISTS & DRUGISTS,

61, West Tower St., MADURA.

எங்களிடம் சகலவித புதிய உயர்தரமான இங்கிலீஷ் மருந்து
களும், ஆயுர்வேத சித்த ஔஷதங்களும், சோப்புகள்,
வாசனைத் தைலங்கள், பிஸ்கோத்துகள், கோக்கோ, ஓவல்
முதலிய உணவுப்பொருள்களும், டாக்டர்களுக்கு வேண்டிய
ஆயுத வகையருக்களும் புதிதாகவும், விலை சரசமாகவும்
கிடைக்கும்.

கைதேர்ந்த கம்பவுண்டர்களால் மருந்துகள்
சேர்த்துக் கொடுக்கப்படும்.

வெளியூர் ஆர்டர்கள் சீக்கிரம் அனுப்பப்படும்.

## S. நவநீதகிருஷ்ணன் & சன்ஸ்,

இங்கிலீஷ் மருந்து ஷாப், 61, மேலக்கோபுரத்தெரு, மதுரை.

# நியூ சினிமா

## மதுரை

இவ்விடத்தில்தான்

**பாப்பாண்டவரின் படம்**

மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது.

◆

புரோப்ரைட்டர்கள்:
மதுரை டாக்கீஸ் லிமிடெட்.




# ரீகல்

## டாக்கீஸ்

## மதுரை



- ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் விக்டோரியா எட்வர்டு ஹாலில் உளது.
- ஆர். ஸி. ஏ. இரட்டைப் புரொஜக்டர்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த தொனிக்கு ஒப்பற்ற தியேட்டர் எனப் பலராலும் கொண்டாடப்படுவது.
- உயர்தர ஆங்கிலப் படங்களுக்கு உன்னத தியேட்டர்.

◆

புரோப்ரைட்டர்கள்:

மதுரை டாக்கீஸ் லிமிடெட்.

# புலவர் திலகம் வீரமாமுனிவர்

திரு. C. மரியநாதன், ஆல்வாய்.

இஃது எழுச்சியின் நூற்றாண்டு, புரட்சியின் நூற்றாண்டு. கலையிலும், காவியத்திலும், செயலிலும், முறையிலும் புதியன புகுகின்றன, பழையன கழிகின்றன. இது போழ்து நந்தண்டமிழ் நாட்டிலும் செந்தமிழ் மக்கள் தமிழுணர்ச்சி ஓங்கப் பெற்றுள்ளனர். அதன் விருத்திக்காக அயராதுழைக்கின்றனர். செய்தி இதழ்கள் பல விடுக்கின்றனர். அரிய செந்தமிழ் கட்டுரைகள் பல வரைகின்றனர். வடவேங்கடம் முதல் தென்குமரி மட்டும், எங்கும் கம்பன் தினம், வள்ளுவர் தினம், பாரதியார் வாரம் எனப் பல தமிழ் புலவர்களைப் போற்றிக் கொண்டாடுகின்றனர். இவ்வமயம் கிறிஸ்துவராய் நம்மிடையும் தமிழகத்திற்கு நன்மை புரிதலையே தம் பெரு நோக்காகக்கொண்டு உழைத்து, அறிஞருள் மறைமுகமாய் முன்னணி நிற்கும், கல்விக்களஞ்சியம், நீதி சரக்கம், தண்டமிழ் நாட்டு புலவர்மணி, வீரமாமுனிவரை போற்றவேண்டும். அப்பெரியாரின் பெயரும் செயலும் இந்துக்களிடை தோன்றி ஒளிபெறவேண்டும். அவர் நூற்களைப் பள்ளியில் புகுத்தவேண்டும் என்ற புத்துயிர் எழுந்துளது. இது நற்காலத்தின் அறிகுறி. நாமும் நம் நாட்டு வளம், மொழி வளம், சமயவளம் ஓங்க ஊருடன் ஒத்துழைப்போம். இன்று அன்றேல் விரைவில் நந்நாடு எங்கும் தமிழ்க்கொடி நாட்டுவோம். மடிமை வேண்டா. முயற்சி திருவினையாக்கும்.

இன்று நாம் இவண் குழுமியது வீரமாமுனிவரை எற்றிப் போற்றி புகழவே. இதற்குமுன் அவர் யார்? எத்தேயத்தவர்? அவர் இந்தியா போந்த காரணம் என்னை? அவர் தமிழ்ப்புலவராய்த் திலங்கக் காரணம் என்னை என்று சிறிது ஆய்வோம்.

"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதின்றேன் தோன்றலில் தோன்றாமை நன்று" என்னும் வள்ளுவர் திருமொழிக்கிலக்காய் விளங்கிய நம் புலவர் திலகம் இத்தாலியில் 1680-ல் பிறந்தார். இவரது இயற்பெயர் கான்ஸ்டானியுஸ் பெஸ்கி. இதுவே தமிழில் வீரமாமுனிவர், தைரியநாதரெனவும் விளிக்கப்படுகிறது. பிறந்து உரிய பருவத்தே கல்வி தொடங்கி இலத்தின், கிரீக், பிரஞ்சு முதலிய பாஷைகளை நன்கு கற்று, பள்ளி மாணவர் யாவரிலும் மேம்பட்டு விளங்கினார். இவரது விழுமியப் புலமையையும் கழுமிய அறிவையும் கண்டு கற்றோர் காமுற்றனர்; கல்லாதார் மனநொந்தனர். புதல்வனது நுட்ப அறிவைக்கண்டு பெற்றோர் பேருவகைப் பூத்தனர். இத்துடன் தாழ்ச்சி, தெய்வபக்தி என்ற புண்ணியங்கள் நம் இளவனுக்கு ஆடையும் ஆபரணமும் போல் நின்று பொலிவுறச் செய்தன. "விளையும் பயிர் முளையிலே தெரிதற்கு வீரமாமுனிவரே தக்க சான்றன்றோ? பள்ளிக்கல்வி முடிவெய்தியது. அந்தோ! சேசுவின் திருத்தொண்டனாகவேண்டும் என்ற பேரவா நம் இளைஞனை சூழ்ந்தது. "கற்றதனால் பயன் என்கொல், வாலறிவன் நற்றாள் தொழாரெனின்" என தமது 18-ம் வயதில் சேசுசபை குருமடம் புக்கினார். ஈண்டும் தமது புத்திக் கூர்மையாலும், அறிவின் திறனாலும், ஆசிரியர் உள்ளத்தைக் கவர்ந்தார். சாஸ்திர நூற்களை ஐயந்திரிபறக் கற்றார். பின்னர் அருட் பெருஞ்சோதியின் தனிப்பெருங் கருணையால் 30-ம் வயதில் குருப்பட்டமும் பெற்றார்—தந்தை புதல்வன் ஆவிக்கு ஓர் புகழ் உரித்தாகுக.

சின்னாள் அவண் கழித்து, பின்னர் இருளில் வீற்றிருக்கும் இந்திய மக்களுக்கு ஞான ஒளி கொடுக்க இந்தியா போந்தார். இதுமட்டுமோ? அன்று. தமிழகம் செய்த அருந்தவப் பயனாய், இவர், முதல், இடை, கடைச் சங்கங்கள் சீரும், சிறப்புடனோங்கி வளர்ந்து, தற்போது உடற்கல்வி குன்றியுள்ள மதுராபுரியைத் தன் உறைவிடமாகக்கொண்டு வைகலானார். கிறிஸ்துமதம் தமிழ் நாட்டில் பரவ, அப்பாஷையைக் கற்றல் இன்றியமையாதது என்று உறுதிகொண்டார். பண்டிதர் தீபக்கவிராயரை அண்டினார். தம்மால் ஒல்லும் வகை முயன்று தமிழைக் கற்க ஆரம்பித்தார். வணமார்ந்த வண்டமிழின் தொன்மையும், தன்மையும், சொற்பெருக்கும், பொருட்செறிவும் முனிவருள்ளத்தைக் கொள்ளைகொண்டன. நம் அடிகளும் தமிழ் நங்கையின் சொல்லழகையும் சுவையழகையும் கண்டு அவள்மீது சொல்லொணா பற்றுகொண்டு 25 ஆண்டுகள் அயரா உழைத்து தமிழில் பாண்டித்தியமடைந்தார். இயற்றமிழ் புலமையன்றி, இசைத்தமிழ் புலமையும் வாய்க்கப் பெற்றார் நம் பன்மொழிப் புலவர்.

தாளுண்ட நீரை தலையாலே தான் தரும் தகைமை வாய்ந்த கற்பக விருக்ஷத்தை ஒத்த இப்பெரியார் தாங்கற்றவற்றைக்கொண்டு நந் நாட்டிற்கு, நம்மொழிக்கு, நமக்கு அருந்தொண்டாற்ற எழுந்தார். தமது புலமைக்கும் கவிவண்மைக்கும் ஏற்க அரியகாவியம் ஒன்றை இயற்றினார். இதுவே படிக்கப்படிக்க இனிமை பயக்கும் தேம்பாவணி. நந்திருமறையின் சீரிய கருத்துக்கள் பலவற்றைத் தெள்ளிதில் விளக்கும் ஒப்புயர்வற்ற இலக்கியமணி. சொல்லணியும் பொருளணியும் தன்பாற் கொண்டு கற்போன்ற உள்ளத்தை கரைக்கும் காவியம். கற்பனையிற் சிறந்த கம்பனது இராமாயணத்திற்கும், அறமொழியில் வல்ல வள்ளுவனின் குறளுக்கும் எதிராக மார் தட்டி நிற்கும் தெய்வநூல். தற்போது இக்காவியத்தைப் போற்றாதப் புலவரில்லை. எடுத்து வழங்கா கவிஞரில்லை. ஆனால் ஒன்று இரங்கத்தக்கது நந்தமிழரில், கிறிஸ்துவர்களில் பலர், இந்நூலின் சிறப்பை உணர்ந்தும், இதனை ஓதி உணர்ந்து உவக்கின்றனரில்லை. இனியாகிலும் இக்காவியத்தைப் பாராட்டுவார்களாக!

இறைக்குந்தோறும் ஊறுகின்ற மணற்கேணி போன்ற சுவாமிகளது தமிழறிவும், தமிழ்ப் பணியும் இத்துடன் நின்றுவிட்டதோ. அன்று, அன்று. மேனாட்டு இலக்கண இலக்கியங்களின் முக்கிய அம்சங்களையும், அணிகளையும் முதன்முதல் தமிழில் புகுத்திய பெருமை தமிழிலக்கியத்தில் நகைச்சுவை புகுத்திய பெருமை யாரைச் சார்ந்தது? முதல்முதல் வசன நடையில் நூல் வழங்கி "வசனநடையின் பிதா" வென்ற விருது பெற்ற புலவர் யார்? பண்டுத் தமிழ் மொழிகளுக்கு எளிதில் விரிவுரைக் காண, பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என்னும் நான்கு பிரிவினைக் கொண்ட சதுரகராதி என்னும் முதலகராதியைத் தொகுத்துக்கவி பாடுவோர்க்கு அருந்துணையாற்றியக் கவிஞர் யார்? மேலும் நாவலர் போற்றும் நங்கவி, தமிழ்லத்தின் அகராதி, போர்த்துகீசிய தமிழ் அகராதி ஒன்றும் இயற்றியுள்ளார். மேலைநாட்டினர் தமிழைச் சுலபமாகக் கற்க கொடுந் தமிழ் இலக்கணம் ஒன்றும் வரைந்துள்ளார். தமிழருக்கும் நன்னூல், நேமிநாதம், யாப்பெருங்கலம், தண்டியலங்காரம், தொல்காப்பியம் முதலியவற்றின் இலக்கண சூத்திரங்களை மேற்கோளாகவும், குறள், நாலடி, சங்கநூல், ஔவை வாக்கியம் இவைகளை உதாரணமாகவும், கொண்டு இலக்கிய வல்லுநர் போற்றும் தொன்னூல் விளக்கத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். இஃது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் தன்னுள் கொண்டுள்ள பொன்னூல். இன்னும் நம் சுவாமிகள் திருக்காவலூர் கலம்பகம், அன்னை அழுங்கலந்தாதி, கித்தேரி அம்மானை, பரமார்த்தகுரு கதை, வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம் முதலிய நூற்களையும் இயற்றியுள்ளார். இவ்வாறு தம் வேலையிலும் தமிழ் பாஷையிலும் சிறிதும் அயராதுழைத்துவந்த இவர் 1744-ல் மதுரைமிஷனுக்கு விசாரணைக்குருவாக நியமிக்கப்பட்டார்.

தமிழ் நாட்டிற்கு போந்து, தமிழ் மக்கள் போற்றுமாறு தமிழகத்திற்கு அரும்பணியாற்றி தமிழின் சிறப்பை மேலை நாட்டினரும் வியந்து புகழும்படிச்செய்த புலவர்திலகம் தமிழ் கடலின் கரைகண்டவரென கி. பி. 1747-ல் அம்பலக்கட்டில் பூதல இன்பங்களை தீதென்று விடுத்து புத்தேன் நாடு சென்றனர்.

தவமும் கலையும் ஒருங்கியமைந்த சுவாமிகள் பேராறு மடைதிறந்து பாய்வதுபோல், தமது சொற்பநாள் வாழ்வில் இன்பச் சுவை செழும் அரிய நூற்கள் பல நமக்கு ஈந்து நம்மினின்று மறைந்தார். ஆனால் அவர் நூற்கள் நம்மினின்று மறையவில்லை. அவரது தமிழ் பணிக்குக் கைம்மாறாக, நாம் அவர் நூற்களை தமிழகம் எங்கணும் பரப்பி பரிமளிக்கச் செய்தல்வேண்டும். இந்நூற்களை ஆக்கியோனுக்கு நல்மிசை நீட்புகழ் மிகச் செய்வது நம்மைச் சார்ந்தது; அன்றேல் நன்றியற்றவர்கள் ஆவோம். நன்றி மறப்பது நன்றன்று—எந்நன்றி கொன்றார்க்குமுய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு—எனவே தமிழ்த் தாயின் அருமைப் புதல்வீர், நாடு, தேசம், புலவர்களை போற்றுங்கால், நாம் வீணே சோர்வடைந்திருத்தல் நன்றோ? மடிமை வேண்டா. வீறுகொண்டு எழுவீர். வீரமாமுனிவரின் வீரத் தமிழ்த் தொண்டை உலகறியச் செய்வீர். அவர் நூற்பெருமையைப் பலரும் பாராட்டச் செய்வீர். நன்றி.

## இராஜாஜியின் வாழ்த்து



சென்னை 16—10—43.

நமஸ்காரம் !

வீரமாமுனிவர் அழைப்புக் கடிதம் இன்று தான் என் கைக்கு வந்து சேர்ந்தது. நிகழ்ச்சிக் குறிப்பு பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இந்த ஏற்பாடுகள் செய்தது மிக்கச் சிறப்பானத் தொண்டு.

இங்ஙனம்,

C. இராஜகோபாலாச்சாரி.

To

திரு. ரா. சவரிமுத்து. சி.ஏ.எஸ்., மதுரை.

## 1. பாளையங்கோட்டை

பாளையங்கோட்டைக் கத்தோலிக்கு சேவா சங்கத்தின் ஆதரவில், 9—8—43 திங்கட்கிழமை மாலை 6½ மணிக்குப் பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் வீரமாமுனிவர் விழா மிகச் சிறப்புடன் நடைபெற்றது. தமிழ் நாட்டு மேற்றிராணிமார், கத்தோலிக்குப் பத்திராதிபர், தமிழ்ப் பெரியார் பலருக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. சங். ஞசைரெஜிஸ் சுவாமிகள், திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள், திரு. பன்னிருகைப்பெருமாள் முதலியார் அவர்கள் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியிருந்தனர். தூத்துக்குடி பண்டித மஸ்கரனஸ் அவர்கள் நேரில் வந்திருந்தார்கள். குருக்களுட்பட ஏறக்குறைய 500 பேர் கூடியிருந்தனர். வந்திருந்தோரை திரு. மரிய அந்தோனி வரவேற்றார். திரு. A. அருளப்பன் B.A. அவர்கள் தலைமை பூண்டார்கள். வித்துவான் திரு. மாசிலாமணி நாடார் அவர்கள் "மனம் மாறிய மங்கை" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். விலைமாதாகிய காந்தரி மனந்திரும்பிய வரலாற்றை அவர்கள் தேம்பாவணியிலிருந்து திறம்பட விளக்கினார்கள். பின்னர் வித்துவான் திரு. ஆரோக்கியம் பிள்ளையவர்கள் "தமிழ் ஞானி வீரமாமுனி" என்பதுபற்றிப் பேசினார்கள். வீரமாமுனிவரது புலமையை விளக்கியபின்னர் அவர் நூல்கள் பாடப்புத்தகங்களில் இடம் பெருவதற்கு வேண்டிய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்றும், கத்தோலிக்கர்களாவது அவருடைய நூல்களைப் போற்றிப் படிக்கவேண்டுமென்றும் அவர்கள் கூறினார்கள். பின் பண்டித வித்துவான் திரு. சாஸ்தான்குட்டிப் பிள்ளையவர்கள், "முனிவர் இலக்கியத் தொண்டு," என்பதுபற்றிப் பேசினார்கள். அவர்கள் வீரமாமுனிவரது உரைநடைத் திறமை, செய்யுள் இயற்றும் திறமைகளைப் பற்பல மேற்கோள்களுடன் விளக்கினார்கள். வீரமாமுனிவரது நூலிற் பற்பல தமிழ் நூல்களின் சுவை ஒருங்கே அமைந்திருக்கிறதென்றும், **ஆண்களும் பெண்களும் ஒருங்கிருந்து படிப்பதற்குத் தமிழ்நாட்டில் எழுதப்பட்ட நூல்களில் தகுந்தது தேம்பாவணியே என்றும்**, அவருடைய நூல்களின் திருத்திய பதிப்புகள் தேவையென்றும், அவர் இயற்றிய தொன்னூல் விளக்கம் பாடப்புத்தகமாக வருவது பயன்தரும் என்றும் அவர்கள் கூறினார்கள். தலைவர் அவர்கள் முடிவுரையில் வீரமாமுனிவரது சிறப்பியல்களையும், உவமை நயங்களையும் பல மேற்

கோள்கள் காட்டி விளக்கினார்கள். பின்னர் திரு. மஸ்கரஞஸ் அவர்களுக்குச் சிறிதுநேரம் பேசும் இடம் கொடுக்கப்பட்டது. அமைச்ச

(கத்தோலிக்கு சேவை—நவம்பர், 1943)

ஞல் மாலை சூட்டி நன்றிகூறப்பட்டு கூட்டம் 9½ மணிக்கு இனிதுகலைந்தது.

சேவாசங்க S. சுவாமிநாதன், M.A., L.T.,
அமைச்சன்.

## 2. தூத்துக்குடி

தூத்துக்குடி பண்டிதர் சங்கத்தின் ஆதரவில் 1—10—43 மாலையில் தூத்துக்குடி அர்ச். சவேரியார் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் வீரமாமுனிவர் இரண்டாம் நூற்றூண்டு விழா மிகச் சிறப்புடன் நடைபெற்றது. குருக்களுட்பட ஏறக்குறைய 500 பேர் கூடியிருந்தனர். விழாவுக்கென்று தீட்டப்பட்ட வீரமாமுனிவரது திருவுருவப் படம் அவையை அலங்கரித்தது. சங்கத்தின் செயலாளரது வேண்டுகோளுக்கிணங்கித் தமிழ்ப் புரவலரும், கம்பர் கழகத் தலைவருமான இராவ்சாகிப் A. C. பால் நாடார் B.A., B.L. அவர்கள் அவைத் தலைமை வகித்தார்கள். செயலாளரால் பாளையங்கோட்டை சி. எ. எஸ். சங்கத்திலிருந்து வந்த வாழ்த்துத் தந்தி படிக்கப்பட்டது. கடவுள் வாழ்த்துக்குப் பின் ஷை பள்ளியின் தலைமை ஆசிரியர் சேசுசபை சங். R. ஞானப்பிரகாசர் சுவாமி அவர்கள் விழாத்திறப்பு முகவுரை கூறினார்கள். அதில் எல்லோரையும் வரவேற்று, வீரமாமுனிவர் தூத்துக்குடியில் தங்கியிருந்ததும், தமிழ், இலத்தீன் அகராதி என்னும் சிறந்த நூலை எழுதி முடித்ததும் 1743-ம் ஆண்டாகையால், இந்நகருக்கு, வீரமாமுனிவரது இரண்டாம் நூற்றூண்டு விழாவைக் கொண்டாடுவதில் உரிமையும் பெருமையும் உண்டு என்று குறிப்பிட்டு வீரமாமுனிவர் வாழ்க்கை வரலாற்றைச் சுருங்கக்கூறி, அவரது நூற்களின் பெருமையைப்பற்றி பிஷப் கால்டுவல், மிஸ்டர் வில்லியம் ஹண்டர், திரு. M. S. பூரணலிங்கம் பிள்ளை, டாக்டர் ஜி. யூ. போப் முதலிய சிறந்த தமிழாராய்ச்சியாளரது பாராட்டுரைகளையும், பாளையங்கோட்டையில் நடந்த விழாவின்போது பண்டித வித்துவான் திரு. சாஸ்தாங்குட்டிப் பிள்ளையவர்கள் '**சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் நயம்வாய்ந்த தொன்னூல் விளக்கம் தமிழ்மாணவருக்குப் பாடமாக இராதது அவர்களது துரதிர்ஷ்டம்**' என்று கூறியதையும் குறிப்பிட்டு வீரமாமுனிவரது இலக்கிய இலக்கண நுண்ணறிவைப் புலப்படுத்தும் சில சான்றுகளையும் கலாசாலைகளில் அவர் புஸ்தகங்களின் அவசியத்தையும் எடுத்துக் காட்டினார்கள்.

அதன்பின் வீரமாமுனிவர் வாழ்த்துப்பா பாடப்பெற்றது. பின்னர் கனம் தலைவரவர்கள் எழுந்து, மேனாட்டாராகிய வீரமாமுனிவர் வேதம் போதிக்கவந்த இடத்தில் தமிழ் மொழியிலுள்ள நூற்களனைத்தையும் நன்கு கற்றுத் தமிழ் நூன் மரபுக்கு மாறுபடாத முறையில், தேம்பாவணி என்ற சிறந்த ஓர் கிறீஸ்துவ இலக்கியத்தையும் ஆக்கித் தமிழுக்குப் பல்வேறு துறையில் பணி புரிந்ததைத் தமிழுலகம் இதுவரையில் மறந்திருந்தது, வருந்தத்தக்க விஷயமாகும் என்பதைக் குறிப்பிட்டு, வீரமாமுனிவர் விழாக் கொண்டாடுவதில் தமக்குள்ள பேரார்வத்தை வெளிப்படுத்தினார்கள்.

பின்னர் தூத்துக்குடி ஸெயின்ட் அலாய்ஷியஸ் பெண்கள் உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் திரு. S. K. நாராயணையங்காரவர்கள் 'வீரமாமுனிவரும் தொன்னூல் விளக்கமும்' என்பதுபற்றிப் பேசினார்கள். அவர்கள் வீரமாமுனிவரது பன்னூற் புலமையையும், இலக்கண அறிவையும், உரை எழுதும் திறனையும் விளக்கிய பின்னர் நன்னூலிற் காணப்பட்ட பல சூத்திரங்கள் தொன்னூல் விளக்கத்தில் ஒரு சூத்திரத்தில் சொல்லப்படுவதையும், நன்னூலில் இரட்டுற மொழிதலால் இடர்ப்பட்டுப் பொருள் காண வேண்டியவை, தொன்னூல் விளக்கத்தில் தெளிவாயமைந்திருப்பதையும் எடுத்துக் காட்டி **நன்னூலினும் உருவிற் சிறியதாய் ஐந்திலக்கணமுங் கொண்ட தொன்னூல் விளக்கம் தமிழ் மாணவர்க்கு இலக்கணப் பாடமாய் வைக்கப்பெறின் பெரும் பயன் விளையுமென்று** நயம்படக் கூறினார்கள்.

அதன்பின், திருச்சி சூசையப்பர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. M. ரம்பொலோ மஸ்கரேஞஸ் அவர்கள் 'மெய்ப் புலவர்' என்னும் பொருள்பற்றிப் பேசினர்கள். அவர்கள் மெய்ப் புலவர் உயிரற்ற பொருட்களுக்கும் உயிர் கொடுப்பாரென்றும், மரக்கட்டையை மா பெருந் தோப்பாகக் காண்பாரென்றும், அற்பப் பொருளிலும் இறைவனருள் விளங்குவதை நோக்குவரென்றும் கூறித் திருவள்ளுவர், திருத்தக்க தேவர், கம்பர், இளங்கோ முதலிய புலவர் போன்று வீரமாமுனிவரும் ஓர் மெய்ப் புலவர் என்பதை சில சான்றுகளால் அழகாக விளக்கியபின், வீரமாமுனிவரது நூற்கள் இதற்குமுன் புறக்கணிக்கப்பட்டதுபோல் இலக்கிய தாகம் கொண்ட இக்காலத்தும் புறக்கணிக்கப்படவோ, தேம்பாவணியிலுள்ள இரண்டொரு கடவுள் வாழ்த்துச் செய்யுட்களைப் பாடப் புத்தகங்களிற் சேர்த்துக் கொள்ளுவதால் ஒரு சமூகத்துக்கு நன்மையைச் செய்து விட்டோமென்று எண்ணவோ கூடாது என்றும் வலியுறுத்திக் கூறினர்கள்.

பின்னர் கம்பர் கவியாராய்ச்சியாளரும் வழக்கறிஞருமான திரு. A. இராமமூர்த்தி ராவ் B.A., B.L. அவர்கள் தேம்பாவணியின் நயம் என்னும் பொருள்பற்றிப் பேசினர்கள். அவர்கள் வீரமாமுனிவர் ஒரு சில இலக்கியங்களைக் கற்றவளவில் கவி பாடியவரல்லர்; தமிழ் இலக்கிய இலக்கணங்களனைத்தும் ஆராய்ச்சி முறையாற் கற்றவரென்றும், கிறீஸ்துவக் கொள்கையைத் தமிழகத்தாரறிய தமிழ் நூன் மரபுக்கியைய நூற்களியற்றி யிருக்கிறாரென்றும், இலக்கியம் பயில்வோர் நாடு, மொழி, மதம், சாதி, முதலிய எல்லைக்குள் நின்று படித்தால், இலக்கிய நயங்களை உணர்ந்து மகிழ முடியாதென்றும், தேம்பாவணியில் திருக்குறள், நாலடியார், சிந்தாமணி, இராமாயணம் இவற்றின் ஓசையும் பொருளும் ஒருங்கே காணப்படுவதோடு அந்நூற் புலவர் கூறிய உவமைகளில் தம் கொள்கைக்கு எற்றதாய் முனிவர் கண்ட கருத்துக்கள் போற்றத்தக்கதாயிருக்கின்றன வென்றும், முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றும் ஓர் புலவரது காவியத்தில் கவி நயம் காணமுடியாதென்று எவரேனும் கூறுவாராயின், அவர் ஆங்கிலம் வடமொழி தென் மொழிகளிலுள்ள இலக்கியங்களை அறியாதவரென்றும், சிறந்த புலவர்களது அறிவையொட்டி எழுதப்படாத நூல் ஓர் இலக்கிய மாகாதென்றும், திறம்பட, தக்க சான்றுகளால் விளக்கியபின், தேம்பாவணி இதுகாறும் பிறமதத்தினராற் போற்றப்படாமலிருந்ததற்குக் கிறீஸ்துவர்களும், கிறீஸ்துவக் குருக்களுமே காரணம்—மற்றவர்களல்லர் என்றும், தேம்பாவணி தமிழறிஞர் கையிலெல்லாம் இருக்க எவ்வாற்றானெல்லாம் அதனைப் பரப்ப முயலவேண்டுமோ அவ்வாற்றானெல்லாம் முயல வேண்டியது கிறீஸ்துவப் பெரியார்கள் கடமை என்றும், வந். அடிப் முதலிய பெரியோர்கள் அவ்வாறு செய்ய முன்வரவேண்டுமென்பதைப் பண்டிதர் சங்கத்தின் சார்பாகத் தாம் கேட்டுக்கொள்ளுவதாகவும் கூறினர்கள்.

பின்னர் தலைவரவர்கள் முடிவுரையில் சொற்பொழிவுகளைப் பாராட்டி வீரமாமுனிவரது உரை நடைத்திறன், வேத விஷயங்களை விளக்குந்திறன், அரண்பட்ட கொள்கைகளை அன்றிக்கொண்டு முரண்பட்ட கொள்கைகளை நியாயங்காட்டித் தள்ளி விடுகின்ற திறன் ஆகியவைகளைப் புகழ்ந்து கூறி, கிறீஸ்துவப் பிரிவினை மதத்தை அவர் தாக்கியிருந்தபோதிலும் அவரது தமிழ்ப் புலமையைக் கருதிச் சிறந்த தமிழறிஞரான பாதிரிமார்கள் அவரது நூற்களைப் போற்றி யிருக்கிறார்களென்றும், ஷேக்ஸ்பீயருடைய நூலில் அவரது முன்னோர் கருத்துக்கள் செறிந்து கிடப்பது அந்நூலுக்கு ஒரு பெருமையாமாறுபோல பிற தமிழ் நூற் கருத்துக்கள் தேம்பாவணியிற் காணப்படுவது அதற்கு ஒரு பெருமையாகுமென்றும் கூறி முடித்தார்கள். அதன்பின் பாரதியாரின் தமிழ் வாழ்த்துப் பாடப் பெற்றதும் செயலாளரால் மாலைசூடி நன்றி கூறப்படவே கூட்டம் இனிது கலைந்தது.

இங்ஙனம்

(Sd.) K. வித்வான் திருநாவுக்கரசு.

1—10—43

தூத்துக்குடி. செயலாளர், பண்டிதர் சங்கம்.

(சர்வவியாபி—17-10-1943)

## 3. மதுரை

**17—1—1943**

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து தமிழ்நாட்டிலே உறைந்து தமிழைக் கற்று, அதிலே அறிவுபெற்று, அதன் பின் பல நூல்களை ஆராய்ந்து, முடிவிலே பாக்கள் இயற்றும் வன்மையுற்று, தமிழில் கம்பனும், சமஸ்கிருதத்தில் காளிதாசனும் நிகரிலையென, ஒருவர் பாமாலை தொகுத்து வைத்துச் சென்றிருக்கிறார் என்றால், அப்படிப்பட்ட ஒருவரை, மனிதனாகப்பிறந்த ஒவ்வொருவரும், சிறப்பாகத் தமிழர்கள் யாவரும், போற்றும், அவரது விழாவை வெற்றி முழக்கத்தோடு கொண்டாடாமல் இருக்கமுடியுமா?

ஆனால்! அப்படி நடந்ததா?

நடந்ததா என்ற கேள்வி மனதிலே விழுந்து உழல்கிறது. கிறிஸ்துநாதரின் மகோன்னதப் பிரசங்கத்தை எடுத்துரைக்கவந்த ஒரு சுவாமியார் எப்படியோ தமிழில் சுவையுண்டு, அதிலே ஊறிக்கிடந்து, பிறநாட்டாரும் விழிப்புற்று உற்று நோக்கும்படி அகராதியும் இயற்றிவிட்டுச் சென்ற, ஒப்பற்ற அந்த வீரமாமுனிவரை, எவனாவது, முக்கியமாய், எந்த னித் தமிழனாவது கொண்டாடுவதற்கு முன்வந்தானா? அந்தோ! "தேம்பாவணி" என்ற தேன் சொட்டச் சொட்ட சுவைதரும் அந்த அருமையான நூலையாவது படித்திருக்கிறானா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

மேல் நாட்டுப் பாஷைக்காக ஒருவர் இவ்வளவு தூரம் உழைத்து, அதை மேன்மைப் படுத்தி, உலகம் அறியும்படி செய்திருந்தால், இந்த நேரம், அவரது உருவச்சிலைக்கு உற்சவமன்றோ நடைபெறும்?

சுவாமி வீரமாமுனிவர் தம் வாழ்நாட்களில் பெரும் பகுதியை தமிழுக்கே தொண்டு செய்தவர். அப்படிப்பட்ட ஒருவர் தமிழர்களுக்கே பொதுவானவர். ஆகவே எந்தத் தமிழனாவது அவரைக் கொண்டாட முன் வருவான் என்று இதுவரை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த மதுரைக் கத்தோலிக் சேவா சங்கமானது, இனி மேலும் ஏமாறக்கூடாது என்று நினைத்து, அவரது விழாவைக் கொண்டாடி தேம்பாவணியின் மாட்சியைத் திறந்து காட்டினார்களென்றால், இனிமேலாவது தமிழன் விழிப்புறுவானா?

விழிப்புற்றும் யாது பயன்? முதல்முதல் கொண்டாடும் பாக்யம் அவர்களையன்றோ சார்ந்துவிட்டது! உம்! பரவாயில்லை. அவர்களும் தமிழர்கள்தான். அதுவும் விசேஷமாக மதுரையைச் சேர்ந்த கத்தோலிக் சேவாசங்கத்தினர்தான் என்பதையாவது சாக்காக வைத்துக் கொண்டு நடந்த கொண்டாட்டத்தை உற்று நோக்குவோம்.

கொக்கரக்கோ என்று கோழி கூவியதும் பலபலவென்று வானம் வெடித்தது. உடனே, ஜில்லென்று, ஓர் செந்நிறமான பந்து தகதகவென மலையின் பின்னாலிருந்து கிளம்பியது. சற்று நேரத்தில் பூமியிலே மஞ்சள் படிந்தது போல், கதிரவனின் இளம் வெயில் தரையிலே படிந்தது.

ஜனங்களுக்கு ஒரே ஆச்சர்யமாயிருந்தது. ஏன் கடந்த மூன்று நாட்களாக, வெயில் முகத்தையே காணாது, கம்மென்று வானத்தையே அடைத்துக்கொண்டிருந்த கார்மேகத்தைப் பார்த்தும், கட, புடா என்ற இடியோசையைக் கேட்டும், சடசடவென்று விழுந்த மழையிலே நனைந்தும் திண்டாடிக்கொண்டிருந்தால் ஏன் இராது? திடீரென அப்போதுதான் ஜனங்கட்கு ஞாபகம் வந்தது. "ஓகோ! இன்றைக்கு 'வீரமாமுனிவர் விழா.' அதனால்தான் கதிரவனும் கண்டுகளிக்கத் துடிக்கிறான்" என்று அறிந்து கொண்டனர்.

மாலை மணி இரண்டு. ரயில்வே ஜங்ஷனுக்கு அடுத்தாற்போலிருக்கும் எட்வர்ட் ஹாலை நோக்கி, நாலாபக்கமும் பெருவாரியான ஜனங்கள் திரளாக வந்துகொண்டிருந்தனர். இவ்வளவு தூரம் ஜனங்கள் (ஏராளமாய்) பெருவாரியாய் வருவார்கள் என்று அவர்கள் எதிர்பாராததால், ஹாலில் இடம்பிடிக்காமல், பார்க்கிலும், தெருவிலும், கடையிலும், மாடியிலும் உட்கார்ந்து கேட்டு, ஆனால் உள்ளே நுழைந்து பார்க்கக் கொடுத்துவைக்காத அந்த ஜனங்க

ளின் ஆவலையும் ஆர்வத்தையும் என்னென்று சொல்வது ? இருந்தாலும் கேட்கும் பாக்யம் கிடைத்ததே ! அதை நினையுங்கள்.

'டான்' என்று மணி அரை அடித்ததும், கணக்கணவென்று நாதம் கிளம்பியது. ஆம்! இந்தியர்களின் சம்பிரதாயப்படி முதல் முதல் இறை வணக்கம்பாட கூட்டம் ஆரம்பமானது. மதுரையிலே பிரபல கௌரவம் வாய்ந்தவரும்; புஸ்தக வர்த்தகருமான, திரு. இ. மா. கோபால கிருஷ்ணக்கோன், திரு. M. துரைசாமி பிள்ளை M.A., B.L. அவர்களின் தலைமையின்கீழ் வரவேற்புரை வாசித்தார்.

அடுத்தபடியாக, தேம்பாவணியின் கவிச் சுவை என்பதைப்பற்றி திரு. முத்துசாமிப் புலவரவர்கள் வியாக்கியானம் பண்ண ஆரம்பித்தார்கள். இதுவரை சளசளவென்றிருந்த கூட்டத்திலே ஓர் அமைதி நிலவியது. திடீரென்று என் கண்முன்னால் ஓர் அழகான சோலை தென்பட்டது. வானளாவிய மரங்கள் நாலாபக்கமும் பரவிநின்றன. "ஙொய்" என்று வண்டின் ரீங்கார சப்தமும் கேட்டது. குயில் ஓர் பக்கம் கூவ, கிளி ஓர் பக்கம் பாட, அதற் கேற்றாற் போல் ஓர் மயில் தோகையை விரித்து ஆடிக் கொண்டிருக்கும் காட்சி என் கண்முன்னே தோன்றிற்று. "இது என்ன கனவா" என்று என் தொடையை ஒரு கிள்ளு கிள்ளினேன். பலமாய் வலித்தது. சற்று உற்று நோக்கினேன்.

குயிலினத் தொடு கொம்பிலார் கிளி,<br>
பயிலினத் தொடு ஞிமிரும் படரவே,<br>
துயிலினத் தொடு விரித்த தோகைகள்,<br>
மயிலினத் தொடு மகளி ராடு மால்

என்ற இந்தக் கவியைப் புலவரவர்கள் வியாக்கியானம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். எனக்கு அப்போது அந்தவிதமாய்த் தோற்றியதில் வியப்பென்ன ?

தேம்பாவணியின் கவிச் சுவையைச் சொல்லி வரும்போது புலவர் இடையிடையே ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டார். காரணம் கவிக்காக மாத்திரம் அல்ல. தனக்குக் கொடுத்திருக்கும் இந்தப் பெருமூச்சு விடக்கூடப் போதாத இருபது நிமிஷ நேரத்திலே என்னமாய்ச் சொல்வேன். உண்மையைச் சொல்லுங்கால், தேம்பாவணியின் கவியிலே ஒவ்வொருவரியும் எடுத்து வர்ணிக்க, இந்த அற்ப நேரம் காணாதே என்று வாயாரச் சொல்லி, நைந்து நைந்து உருகினார். அவர் பாக்களைச் சொல்லி வரும்போது நமக்குத்தான் சொல்லுகிறாரா? இல்லை, தானே அனுபவிக்கிறார் என்றுதான் தோன்றும். அவ்வளவு தூரம் அவர் லயித்துச் சொல்லிக்கொண்டு வருவது அங்கிருந்த கடியாரத்திற்கு ஏனோ பொறுக்கவில்லை? அதிலிருக்கும் அந்த அம்பு போன்ற பெரிய முள்ளானது அவரது நெஞ்சிலே பாய்வதுபோல் இரண்டு ஜம்பதில் வந்து நின்றது. புலவர் அதை ஒரு தரம் விறைக்கப் பார்த்துவிட்டு, முகத்திலே வடிந்த வேர்வையை துடைத்துக்கொண்டு (ஒரு சிலர் அதைக் கண்ணீர் என்கிறார்கள்) அழாக் குறையாய் விடை பெற்றுக்கொண்டார்.

அடுத்தாற்போல், திருச்சி, திரு. குரூஸ் அந்தோனி அவர்கள் எழுந்திருக்கும்போதே ஆர்வம் பொறுக்கமாட்டாமல், "தைரியநாதரின் இலக்கியம்" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார். ஒலிபரப்பும் கருவியே அந்தச் சத்தத்தில் ஒரு ஆட்டம் போட்டது. உடனே சபையோர் புளியம் பழம் உதிர்ந்ததுபோல் சட, சடவென்று கை தட்ட ஆரம்பித்தனர். இலக்கியமே கருத்தாக இருந்த திரு. குரூஸ் அந்தோணி, அதையெல்லாம் கவனியாது, கவியின் கருத்தை வரி வரியாக எடுத்துப் பிரித்து, அதனுடைய மேன்மையான, சுகந்த மணத்தை முகர ஆரம்பித்தார். "தேம்பாவணி" ஆஹா ! இது எவ்வளவு பெரிய ஒப்பற்ற நூல். எத்தனை தரம்தான் திருப்பித்திருப்பிப் படிப்பினும், வாடைபோகாத, மணமங்காத, கிடைத்தற்கரிய பாரிஜாத மலரன்றோ ! இவ்வளவு சிறந்த ஒப்பற்ற நூலை நமக்கு அருளிய அம்மாமுனிவருக்கு என்ன கைம்மாறு செய்யினும் போதாதே" என்று திரும்பத்திரும்பச் சொல்லி, இன்னமும் திருப்திப்படாமல் மேலும் மேலும் சொல்லிக்கொண்டேயிருந்தார். முடிவாக அவர் "இப்படிப்பட்ட மஹானை, குறைந்தது வருஷத்திற்கு ஒரு தரமாவது விழாக் கொண்டாடி சிறப்பிக்காவிட்டால் உண்மையில், நாமே, நம்மைப்போன்ற பாதகர்களும், கொடிய நய வஞ்சகர்களும் இல்லையென்ற பழியை வருவித்துக் கொண்டவர்களாவோம்," என்று சொல்லிவிட்டு, ஒருவாறு விடைபெற்றார்.

இதற்கிடையே ஜனங்கள் ஒரு பெருமூச்சு விட்டனர். இதுவரை புழுக்கத்திலே, நெருக்கி நெருக்கி, ஒருவரோடொருவர் உராய்ந்து உட்கார்ந்துகொண்டிருந்த ஜனங்கள் மூச்சுவிட முடியாது திணறினர். ஆனால் இதையெல்லாம் எதிர்பார்த்தே அந்தக்காரியதரிசி திட்டம் தயாரித்திருந்தார்போலும்! அந்த வேளை பார்த்து ஒரு அருமையான தென்றல் வீசுவது போல், திரு. இராமசாமி ஐயங்காரின் நடித்துக் காட்டும் விகடவாசகத்தை அமைத்திருந்தனர். ஆனந்தம் பொறுக்கமாட்டாமல் என்முன்னால் இருந்த ஒருவர் மண்டையை ஆட்டிஆட்டி, அதனால் அவர் திருகி முடித்திருந்த குடுமி, என் மூக்கை இடித்துப் புண்படுத்தி விட்டதென்றால் விகடவாசகம் எவ்வளவு தூரம் நன்றாய் இருந்திருக்கவேண்டுமென்று வாசகர்களின் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

ஜனங்களின் சிரிப்பலை ஓய்ந்ததும், சாத்தார் திரு. டி. எல். கந்தசாமி முதலியாரவர்கள், "தேம்பாவணியின் மாட்சி" என்பதைப்பற்றிப் பேசினார்கள். பேசிவரும்போதே, வீட்டிலே, பெண்டு பிள்ளைகளோடு ஒட்டிக்கொண்டிருக்கும் ஓர் இல்லறவாசியின் அறிவிற்கும், மண், பெண், பொன் என்ற மூன்றையும் அறவே வெறுத்து, மனதை அடக்கி, உலகத்தைத் துறந்து நிற்கும் ஓர் முனிவரின் புலமைக்குள்ள, ஓர் நுட்பமான வேறுபாட்டையெடுத்துக் காட்டும்போது யார்தான் வியக்காமலிருக்கமுடியும். உதாரணமாக வீரமாமுனிவர் சொல்லும் வசனத்தையே எடுத்துக்கொண்டார்.

தேவமாதாவும், சூசையப்பரும், உலகம் அறிய கணவன் மனைவிதான். ஆயினும், சேசு என்ற ஓர் தெய்வீகக் குழந்தையானது, அவளது வயிற்றிலே அவள் அறியுமாறு ஓர் தனித்த உதிரமாக உற்பத்தியானது. இதை தெய்வமே அவளுக்கு அறிவித்துவிட்டது. அளவிலா ஆனந்தம்தான்! ஒருகணம் தன்னுடைய வாழ்க்கையை யோசித்தாள். தானும் தன் கணவரும் எப்படி வாழ்க்கை நடத்திவருகிறோம்! ஒரே தாய்க்குப் பிறந்த சகோதர சகோதரி போன்றன்றோ வாழ்ந்துவருகிறோம். இதை தன் கணவர் அறிந்தால் என்றுமே தன்னை அறியாத தன் கணவர் என்ன நினைப்பார் என்று நினைத்த எண்ணமானது அவள் நெஞ்சை ஊடுருவினும் அவள் நிலை கலங்கவில்லை. ஏன்! அதுதான் அந்தத் தெய்வீகத்தின், தெய்வ அருள்பெற்ற, முனிவர்களைத்தவிர வேறு யாரும் காண இயலாத ஓர் அபூர்வ இரகஸ்யத்தை எடுத்துக் காட்டுகிறது! ஆம்! "தேவரே எனக்குக் கொடுத்த வரப்ரசாதமிது. ஆகவே என் கணவரையும் தேவனே பார்த்துக்கொள்வார்," என்று தன் கணவரிடத்தில் அதைச் சொல்லவேயில்லை. தன் கணவனும் அதைப்பற்றிக் கேட்கவே இல்லை. வீரமாமுனிவரின் இந்த இரகஸ்யத்தை நமக்கு எடுத்துக்காட்டிய அவர், அந்த மாமுனிவருக்கு நிகராக சேக்கிழாரையும் ஒப்பிடலாம். ஆம்! முனிவருக்கு முனிவர்தானே நிகர்.

கடைசியாக, திரு. சோமசுந்தர பாரதி, M.A.B.L., எழுந்திருந்தார். அவருடைய முறுக்கிய மீசையும், முகத்தின் மந்த காசமும், ஒருவேளை வீரமாமுனிவரும் இப்படித்தான் இருந்திருப்பாரோ என்ற நினைவையூட்டியது. வீரமாமுனிவரின் புகழ் என்பதைப்பற்றி அவர் பேச ஆரம்பித்தார். "அவருடைய பாக்களில் எந்த வரியை எடுத்துப்பேச ஆரம்பிப்பினும் அது புகழிலே வந்து முடியும். ஆகவே இதற்கு முன் எடுத்துச் சொல்லியவர்களெல்லாம் அவரது புகழைப்பற்றியேதான் பேசியிருக்க வேண்டும். இனி நான் தனித்து அவரது புகழைப் பற்றி என்ன பேசப்போகிறேன். ஆயினும் இதைச் சொல்லலாம் : தமிழ் நாட்டிலே பிறந்து, தமிழைத் தாய் பாஷையாகக் கொண்டு, அதிலேயே தவழ்ந்து, வளர்ந்துவரும் ஒரு தமிழன், செய்யவும், இயற்றவும், இயலாத அரும்பெரும் பாக்களை, அதுவும், அயல்நாட்டார், விசேஷமாய் மேல்நாட்டார் ஒருவர் இயற்றினார் என்றால், உண்மையிலே அவரிடத்தில், ஏதோ ஓர் கடவுளின் அம்சம் இருந்திருக்கத்தான் வேண்டும்" என்று அவர் கூறியதும் அதை ஆமோதிப்பது போல் மங்கள கீதம்பாடி கூட்டம் முடிவு பெற்றது.

அது வரையும் விடாது உட்கார்ந்திருந்த கூட்டத்தின் ஜனங்கள், ஒவ்வொருவராக வெளிக்கிளம்பினர். நானும் வெளிக்கிளம்பினேன். முன்னாலிருந்த "பார்க்கிற்கு" வந்ததும், சவுக்கை மரத்திலிருந்த ஒரு குயில் கூ,

கூ வெனக் கூவிற்று. அதற்கேற்றாற்போல், மண்ணிலே செய்துவைத்திருந்த ஓர் மயில் ஆடுவது போலத் தோன்றிற்று. இதுவரை கண்டு களித்துக்கொண்டிருந்த கதிரவன் மெள்ள மேகத்தில் மறைந்தான். நானும் விடைபெற்றுக்கொண்டேன்.

"கண்டுகளித்தோன்."

## 4. ஆல்வாய்

ஆல்வாய் அர்ச். சூசையப்பர் குருமடத்துத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 21—11—43 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு புலவர் திலகம் வீரமாமுனிவரின் இரண்டாம் நூற்றாண்டு விழா மிகச் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. அக்குரு மடத்துத் தமிழ் மாணவர் அனைவரும் சுவாமிகளுக்குப் புகழ்மாலைச்சாற்ற அவண் குழுமியிருந்தனர். கூட்டத்திற்குத் தமிழ்த் தாயின் அரும் புதல்வருள் ஒருவராகிய சங். அந்தோனிமுத்து அவர்கள் தலைமை வகித்தனர். C. மரியநாதன் அவர்கள், எளிய நடையில் சொற்சுவை, பொருட்சுவை பொருந்திய சொற்பொழிவாற்றினர். தமிழுலகம் செய்த அருந்தவப் பயனாய்த் தோன்றிய சுவாமிகளது பன்மொழிப் புலமையையும், தமிழில் அவர் அடைந்த இயற்றமிழ், இசைத்தமிழ் வன்மையையும், அவரது அரிய தமிழ்த் தொண்டையும் போற்றிப் புகழ்ந்தார். தமிழுக்கு இத்தகைய அரும்பணியாற்றிய பெரியாரது அறிவையும், தமிழ்ப்பணியையும் உலகறியச் செய்வது நங் கடன் எனவும் குறிப்பிட்டார்.

முடிவுரை கூறிய கனம் தலைவர் அவர்கள் சொற்பொழிவாளரைப் போற்றிட, வீரமாமுனிவர் தம் அயரா உழைப்பால் தமிழில் கவிஞர் ஆனது கிறீஸ்து மதத்தைச் சுலபமாக இந்தியாவில் பரப்பிப் பரிமளிக்கச் செய்யவேண்டும் என்னும் பேரவாவினால்தான் எனக் கூறினர். பின்னர் செயலாளராகிய சங். பி. ஆர். தாமஸ் அவர்கள் அவண் குழுமியிருந்த யாவருக்கும் நன்றிகூற, கூட்டமும் இனிது கலைந்தது.

(சர்வவியாபி—5-12-1943)


# G. LOORDU & SONS,

LEATHER MERCHANTS, WEST GATE, MADURA.

*We are Manufacturing in our own Tannery at Dindigul:*

**All kinds of Kamalai Leathers and Dressed Hides; best quality of Binding Leather Laces etc.**

*We are the Manufacturers and Suppliers of:*

**All kinds of Leather Washers and Leather Beltings (from 1" to 6") for Gin Stores, Ginning Factories and Mills.**

*Orders will be executed promptly.*

உயர்ந்த மலையினுச்சிமேலேற்றிய விளக்கம்போல,
வேதபோதகரும் செந்தமிழ்ப்புலவர் சிகாமணியுமாகிய

# சுவாமி வீரமாமுனிவர்

திருவாய்மலர்ந் தினிதருளிச்செய்த நூல்களின் வரிசை :

———:o:———

## I. காவியங்கள்

1. தேம்பாவணி—3 காண்டம், 36 படலம், 3615 பாடல்கள்.
2. திருக்காவலூர்க் கலம்பகம்
3. அடைக்கலமாலை
4. கலிவெண்பா
5. அன்னை அழுங்கல் அந்தாதி
6. கித்தேரியம்மாள் அம்மானை
7. திருப்பாவணி
8. தேவாரம்
9. வண்ணக்கலைகள்
10. தேவமாதா அந்தாதி

## II. வசன நூல்கள்

1. வேதியர் ஒழுக்கம்
2. வேத விளக்கம்
3. பேதக மறுத்தல்
4. திருச்சபைக் கணிதம்
5. "வாமன் கதை" (தேம்பாவணியி னின்று எடுக்கப்பட்டது.)
6. லத்தேரினித் தியல்பு
7. வீரமாமுனிவர் பதிதர்பேரில் திருக் கடையூர் நாட்டு திருச்சபைக்கு எழுதின நிருபம்
8. ஞானக் கண்ணாடி

## III. விகடம்

பரமார்த்த குருவின் சரிதை

## IV. பஞ்சாங்கம்

திருச்சபைக் கணிதம்

## V. இலக்கணங்கள்

1. தொன்னூல் விளக்கம்
2. கொடுந்தமிழ் இலக்கணம்
3. செந்தமிழ் இலக்கணம் (லத்தீன்)
4. லத்தீன்-தமிழ் இலக்கணம்

## VI. அகராதிகள்

1. சதுரகராதி—இதுவே தமிழில் எழு தப்பட்ட முதல் அகராதி.
2. தமிழ்-இலத்தீன் அகராதி
3. தமிழ்-போர்த்துகீசிய அகராதி

## VII. வைத்திய நூல்கள்

1. குணபாடம்
2. சிந்தாமணி
3. நசகாண்டம்

## VIII. மொழிபெயர்ப்பு

திருக்குறள் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் லத்தீன் பாடலாக மொழிபெயர்ப்பு

# ST. MICHAEL'S ART WORKS,

**47, Emperor Street, TUTICORIN.**

**Church Vestments a Speciality.**

**Excellent designs, neat execution, up-to-date workmanship,**
**Moderate charges, Prompt delivery.**
**Holders of First Class testimonials from Highest Church Authorities.**

*A trial order is earnestly solicited.*

எங்களிடத்தில் நேர்த்தியான பூசை ஆயத்தங்கள்
விலை சகாயமாய்க் கிடைக்கும்.
முழு விபரங்களுக்கு எழுதவும்.

---

# A. R. A. SHENBAGA NADAR &
# P. V. P. VALASUBRAMANIA NADAR

AUTHORISED DEALERS FOR

**MORRIS, DODGE, PLYMOUTH & CHRISLER CARS & DODGE TRUCKS,**

AUTOMOBILE ENGINEERS & BODY-BUILDERS,

MANUFACTURERS OF CHARCOAL PRODUCER GAS PLANTS
FOR BUSES, VANS, LORRIES & PASSENGER CARS.
STOCKISTS OF SPARE-PARTS, BATTERIES, TYRES, TUBES AND
"EVERY THING AUTOMOBILE"

DEALERS FOR

## CALTEX PETROL & LUBRICANTS.

WEST GATE MADURA

---

**FOR BEST QUALITY SALTS**

*We solicit your valued enquiries:*

# MACHADO SALT TRADING COMPANY

Telephone No. 1

Telegraphic Address: "MACSALT"

18, Beach Road, :: TUTICORIN.

Great Cotton Road, :: :: :: TUTICORIN.



FLOUR MILL

Telephone No. 37

# SWAMY FOUNDRY

**Rice Mill & Gin Stores,**
**TOWN HALL ROAD,**
**Workshop: SUBRAMANIYAPURAM,**

## MADURA

*HEAD OFFICE:* **Avadisrinivasa Ayyar Street, Choolai, MADRAS.**

*BRANCHES:* **MAYAVARAM, TIRUVARUR, SUBRAMANIYAPURAM, MADURA.**



HULLER

## சுதேசி சாமான்களை ஆதரியுங்கள்.

எங்களிடம் ரைஸ் ஹல்லர்களும், மாவு மில்களும், காப்பி கிரைண்டிங் மிஷின்களும், அதற்குரிய ஸ்பேர் சாமான்களும், விட்டு உபயோகத்திற்கும், விபசாயத்திற்கும் உரிய எலக்டிரிக் மோட்டார் பம்பு செட்டுகளும், பருத்தி அரைக்கும் ஆபீசுக்குரிய ஜின் சாமான்களும் சகாயமான விலைக்கு எப்போதும் கிடைக்கும்.

●



GIN

ஒருமுறை வாங்கி
உபயோகித்துப் பார்க்கும்படி
கேட்டுக்கொள்கிறோம்.

## சாமி பவுண்டரி

மதுரை.




COFFEE GRINDER

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 3 | | 3 | வரவேற்புறை | வரவேற்புரை |
| 7 | வலம் | 7 | தன்னிகற்றற | தன்னிகரற்ற |
| 8 | | 12 | நவற்சியாகதேனக் | நவற்சியாகாதேன |
| 13 | கீழிருந்து | 8 | செயுள் | செய்யுள் |
| 16 | | 5 | வாக்கைக் | வாக்கைப் |
| 38 | | 6 | பேழி | பேழீ |
| 38 | **VII** இடம் | 4 | நயங்களக் | நயங்களைக் |
| 38 | **VII** வலம் | 7 | பேரவாலே | பேரவாவே |
| 41 | கீழிருந்து | 4 | மோழில் | மோழியில் |
| 44 | ,, வலம் | 5 | என்னபயத்தோ | என்ன பயத்ததோ |
| 57 | பாட்டு | 4 | விஞ்ரையா | விஞ்சையா |


# The IMPERIAL BATTERY COMPANY,

**North Veli Street,** **MADURA**

**Specialists in Battery Charging, Repairing and Rebuilding.**

*—— SOLE SUPPLIERS OF BATTERIES ——*

# இம்பீரியல் பாட்டரி கம்பெனி,

மதுரை.

பாட்டரி சார்ஜ் செய்தல், ரிப்பேர் செய்தல்,
புதிய பாட்டரி செய்தல், முதலியவை உத்திரவாதத்துடன் செய்து தரக்கூடும்.

---

# *Excellent House for Photography!*

*Reliable!* *Exquisite!* *Charming!*

*First Rate Workmanship*
*at Moderate Rates*

MR. C. D. JOHN.
*Photographer,*

**Old English Club Street,** ∴ **Ramnad Road, MADURA.**

# பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

(இந்தியாவில் 1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ்: மதுரை.

## தீ விபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

| | |
|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 15,00,000 |
| இன்ஷ்யூரன்ஸ் நிதிகள் | ரூ. 23,94,606 |
| | ரூ. 38,94,606 |

கிளை ஆபீஸ்கள் :

**பம்பாய் :**
லாயிட்ஸ் பாங்க் பில்டிங்,
ஹார்ன்பி ரோடு, பம்பாய்.

**அகமதாபாத் :**
1761, காந்தி ரோடு,
அகமதாபாத்.

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி,
மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

**K. M. S.** லெக்ஷ்மணய்யர் & சன்ஸ்,
மதுரை, திண்டிவனம், மதராஸ், நகரி, பெஜவாடா, காகினடா, விஜயநகரம்.

விபரங்களுக்கு மேலே கண்ட எந்த ஆபீசுக்கும் எழுதலாம்.

# சுவாமி வீரமாமுனிவர்

## (1680-1747)

"மறைமொழி வாயினன், மலிதவத் திறைவன்
நிறைமொழிக் குறவன் நிகரில் கேள்வியன்."

| | | |
|---|---|---|
| 8-ம் உ நவம்பர் மீ | 1680 | ... தோன்றல். |
| 13-ம் உ நவம்பர் மீ | 1680 | ... ஞான தீட்சைப்பெறல். |
| 21-ம் உ அக்டோபர் மீ | 1698 | ... இயேசு சபையில் சந்நியாசம் புகுதல். |
| செப்டம்பர் மீ | 1709 | ... குருப்பட்டம் பெறுதல். |
| | 1710 | ... லிஸ்பனிலிருந்து இந்தியாவுக்குப் புறப்படுதல். |
| 8-ம் உ மே மீ | 1711 | ... மதுரை மாகாணத்திற்குள் பிரவேசம். |
| 21-ம் உ டிசம்பர் மீ | 1714 | ... சிறைவாசம். |
| | 1715 | ... தமிழ் ஆராய்ச்சி. |
| | 1716 | ... மதுரைமா நகரத்தில் தமிழ்த் தொண்டு. |
| | 1726 | ... "தேம்பாவணி." |
| | 1727 | ... "வேத விளக்கம்." |
| | 1728 | "வேதியர் ஒழுக்கம்" "ஞானக் கண்ணாடி" "கொடுந்தமிழ் இலக்கணம்." |
| | 1730 | ... "தொன்னூல் விளக்கம்." "செந்தமிழ் இலக்கணம்." |
| | 1733 | ... சண்டா சாகிபைச் சந்தித்தல். "இஸ்மதி சந்நியாசி" என்ற பட்டம் நம் சுவாமிகளுக்கு அவரால் அளிக்கப்பட்டது. |
| செப்டம்பர் மீ | 1743 | ... தூத்துக்குடியில் தொண்டு. |
| | 1746 | ... அம்பலக்காடு—குருமட விசாரணை. |
| 4-ம் உ பெப்புரவரி மீ | 1747 | ... தனது 67-ம் பிராயத்தில் மறைவு. |

# The BEST WAY to FIGHT

THE PROFITEER IS

TO

SPEND LITTLE AND SAVE AND INVEST

IN

DEFENCE BONDS

AND

NATIONAL SAVINGS CERTIFICATES